விலை: ரூபா 20 பக்கங்கள் 28

# உதயன்

31 °C | °F
தெளிவான வானம்

சுடர் 30 கதிர் 262 வள்ளுவர் ஆண்டு 2046 ஆடி 30, சனிக்கிழமை 15.08.2015

15 AUG 2015

## தேர்தல் விதிமீறல் 1,610 முறைப்பாடுகள் 729 பேர் கைது

யாழ்ப்பாணம், ஓக. 15
தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னர் நேற்றுவரை ஆயிரத்து 610 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன. இதுவரை 729 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அதிகளவான முறைப்பாடுகளாகத் தமக்கு பக்கம் 27

# போராட்டம் தான் வேறு வழியில்லை

## வட்டுக்கோட்டைக் கூட்டத்தில் நேற்று சரவணபவன் முழக்கம்



யாழ்ப்பாணம், ஓகஸ்ட் 15
ஒற்றையாட்சி என்ற வரம்புக்குள்ளிருந்து எந்தவொரு சிங்களத் தலைமைக்கும் வெளிவர மனமுமில்லை. துணிவுமில்லை. எனவே நாம் எமது உரிமைகளை ஜனநாயக வழியில் போராடியே பெற வேண்டியுள்ளோம். அதற்கு எம்மிடம் இரண்டே இரண்டு ஆயுதங்கள் உண்டு. ஒன்று எமது இலட்சிய உறுதி. மற்றையது எமது ஐக்கியம். எனவே எதிர் வரும் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு ஒன்று சேர்ந்து வாக்களிப்பதன் மூலம் உங்கள் ஐக்கியம் என்ற ஆயுதத்தை பயன்படுத்த வேண்டும். நாம் உங்கள் ஆணையை ஏற்று இலட்சிய உறுதி என்ற ஆயுதத்தைக் கையில் எடுத்து முன் செல்வோம். இந்தப் பயணம் எதிரிகளை இறங்கி வர வழி வகுக்கும் என்பதில் சந்தேகமில்லை. எமது பேரம் பேசும் சக்தி வலிமை பெறவேண்டுமெனில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை வெற்றி பெற வைக்க வேண்டும். இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாணம் - கிளிநொச்சி மாவட்ட வேட்பாளர் ஈ.சரவணபவன் தெரிவித்தார். வட்டுக்கோட்டையில் நேற்று இரவு இடம்பெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றுகை பக்கம் 24

## பிரதமர் பதவி பௌசிக்கா?

### மஹிந்தவுக்கு ஆதரவளிக்காமல் அவர் நழுவல்

கொழும்பு, ஓக. 15
எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆட்சியமைக்கும் நிலை ஏற்பட்டால், தமக்குப் பிரதமர் பதவி வேண்டாம் என்று சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் 7 சிரேஷ்ட உறுப்பினர்களில் 6 பேர் கையெழுத்திட்ட கடிதம் ஒன்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. பக்கம் 27

## மக்கள் ஆணையை மதிக்கவேண்டும்

### மைத்திரிக்கு–மஹிந்த நேற்று பதில் கடிதம்

கொழும்பு, ஓக. 15
ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி, தேர்தலில் 113 ஆசனங்களைக் கைப்பற்றினாலும் மஹிந்த ராஜபக்ஷவுக்கு பிரதமர் பதவி வழங்கப்படமாட்டாது என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்றுமுன்தினம் உறுதிபடத் தெரிவித்துள்ள நிலையில், தன்னைப் பிரதமராக நியமிக்க வேண்டும் என மஹிந்த பக்கம் 27

## சர்வதேசத்தின் அனுசரணை கூட்டமைப்புக்கே உள்ளது

### அதனை நிரூபிக்கத் தமிழர்கள் அணி திரண்டு வாக்களிக்கவேண்டும் என மாவை அறைகூவல்



யாழ்ப்பாணம், ஓக. 15
நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில், தேசியக் கட்சிகளுக்கும் உதிரிகளுக்கும் வாக்களிப்பது பயனற்றதாகும். சர்வதேச அனுசரணையைக் கொண்டுள்ள, எதிர்காலத்துக்கேற்ற நடைமுறைத் திட்டங்களைக் கொண்டுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வீட்டுச் சின்னத்துக்கு வாக்களித்து, தமிழ் மக்களின் ஒன்றுபட்ட பலத்தை - திடசங்கற்பத்தை நிரூபிப்போம். இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமாகிய மாவை.சேனாதிராசா தெரிவித்தார். வட்டுக்கோட்டையில் நேற்று மாலை இடம்பெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-
லட்சோப லட்சம் மக்கள் தங்கள் உயிர்களை இழந்துள்ளனர். தமிழின விடுதலைக் பக்கம் 24

## செஞ்சோலைப் படுகொலைகள் நினைவு நேற்று வவுனியாவில்



வவுனியா, ஓக. 15
செஞ்சோலையில் கடந்த 2006 ஆம் ஆண்டு ஓகஸ்ட் 14 ஆம் திகதி விமானக் குண்டு வீச்சில் படுகொலை செய்யப்பட்ட 61 மாணவிகளுக்குமான 9 ஆம் ஆண்டு நினைவு நேற்று வவுனியா சிதம்பரபுரம் ஈழத்து பழனி முருகன் ஆலயத்தில் சிறப்பு பூசை மற்றும் நினைவு தீபம் ஏற்றலுடன் அனுஷ்டிக்கப்பட்டது. வவுனியா தமிழ் விருட்சம் சமூக ஆர்வலர்கள் அமைப்பு இதனை ஏற்பாடு செய்திருந்தது. சிவஸ்ரீ சி.ஸ்ரீ சங்கர சர்மா 61 மாணவிகளின் ஆத்மா சாந்தி அடைய வேண்டியும், அவயவங்களை பக்கம் 27

## இராணுவ வெளியேற்றத்தை கோரும் உரிமை எமக்குண்டு

### எம்மை நாமே கவனிக்கலாம் என்கிறார் முதலமைச்சர்

யாழ்ப்பாணம், ஓக. 15
நாம் இலங்கை சமூகத்தின் ஒரு ஜனநாயகப் பிரிவாகவுள்ளோம். எம்மால் எமது சொந்தக் கால்களில் நிற்க முடியும். இராணுவம் வெளியேற வேண்டும் என்பதைக் கோரும் உரிமை எமக்குண்டு. எம்மால் எம்மைக் கவனித்துக் கொள்ள முடியும் என்று வடமாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார். பிரம்ம குமாரிகள் இராஜயோக நிலையத்தினரின் சுக்தாம் மண்டபத் திறப்புவிழாவில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-
போர் இறுதியில் வட மாகாணத்தில் இருந்த ஒன்றரை லட்சத்துக்கும் அதிகமான இராணுவ பக்கம் 27

**தண்டனையிலிருந்து தப்பித்துக்கொள்ளும் அரசியல் அதிகாரத் தரப்பினர்** | பக். 17

## செயலாளர் பதவிகளிலிருந்து அநுர, சுசில் அதிரடி நீக்கம்



### ஆட்டத்தை ஆரம்பித்தார் மைத்திரி அதிர்ச்சியில் உறைந்தார் மஹிந்த



கொழும்பு, ஓக. 15
மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவளித்து, கட்சித் தலைவரான தமது நடவடிக்கைகளுக்கு எதிராகச் செயற்பட்டுவரும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் அநுர பிரியதர்ஷன யாப்பா மற்றும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பக்கம் 27

## பரப்புரைகள் நள்ளிரவுடன் நிறைவு

கொழும்பு, ஓக. 15
நாடாளுமன்றத்துக்கான தேர்தல் பரப்புரைகள் நேற்று நள்ளிரவு 12 மணியுடன் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டன. பிரதான அரசியல் கட்சிகள் தத்தமது இறுதிப் பக்கம் 27

## 10 கிலோ கேரளக் கஞ்சா திக்கம் சந்தியில் சிக்கியது

### சந்தேகநபரும் மடக்கிப் பிடிப்பு



வடமராட்சி, ஓக. 15
வடமராட்சி, திக்கம் சந்தியில் பொலிஸார் நடத்திய சுற்றிவளைப்பு மற்றும் சோதனை நடவடிக்கையில் 10 கிலோ கிராமுக்கும் அதிகமான கேரளக் கஞ்சாப் பொதிகள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன. மோட்டார் சைக்கிள் ஒன்றில் கஞ்சாப் பொதிகளைக் கடத்திய குற்றச்சாட்டில் சந்தேக நபர் ஒரு பக்கம் 24

## உரிமை மீறல்களை முறையிடுவதற்கு விசேட அலகு

யாழ்ப்பாணம், ஓக. 15
தேர்தல் தினத்தில், அடிப்படை உரிமை மீறல்களைத் தடுப்பதற்க்காக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் விசேட அலகு செயற்படவுள்ளதாக, இலங்கை மனித உரிமைகள் பக்கம் 24

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

cmyk

# தமிழ் மக்களுக்காக நீதிமன்றத்தில் வாதாடியுள்ளாரா கஜேந்திரகுமார்?

## கேள்வி எழுப்புகிறார் சுமந்திரன்

யாழ்ப்பாணம், ஓக. 15

இராணுவத்தினருக்கு சார்பாக நீதிமன்றத்தில் முன்னிலையாகி அந்த வழக்கை வென்று கொடுத்த கஜேந்திரகுமார் பொன்னம்பலம், தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு சார்பாக ஏதாவது ஒரு வழக்கில் நீதிமன்றத்தில் வாதாடி வென்று கொடுத்திருக்கின்றாரா? இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் வேட்பாளருமான எம்.ஏ.சுமந்திரன்.

யாழ்.நகரில் நேற்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில், எனக்கு எதிராகத் துண்டுப் பிரசுரம் சில கோழைகளினால் வீடு வீடாக விநியோகிக்கப்பட்டு வருகின்றது. அந்தத் துண்டுப் பிரசுரத்தில் எனக்குச் சேறு பூசும் வகையில் பல்வேறு விடயங்களையும் குறிப்பிட்டுள்ளனர். அதில் குறிப்பிட்டுள்ள விடயங்கள் தொடர்பில் தெளிவுபடுத்த வேண்டிய தேவை உள்ளது.

படிக்காதவர்களும், வேலையற்றவர்களுமே போராட்டத்தில் இணைந்ததாக நான் பத்திரிகைக்குத் தெரிவித்தாகக் குறிப்பிட்டுள்ளனர். இது தொடர்பில் நான் குறிப்பிட்டதை திரிபுபடுத்தி துண்டுப் பிரசுரத்தில் வெளியிட்டுள்ளனர். பொலிஸ் அதிகாரம் மாகாணங்களுக்கு வழங்கப்பட்டால் அது பிரிவினைக்கு வழிவகுக்கும். பொலிஸாருக்கு ஆயுதங்கள் வழங்குவது தொடர்பில் தெற்கில் எழுந்த வாதத்துக்கு எதிர்வாதமாக எனது கருத்தை முன்வைத்தேன். அதில் இந்த நாட்டில் இடம்பெற்ற ஆயுதப் போராட்டங்களில், சிங்களப் பொலிஸாரிடமோ அல்லது தமிழ் பொலிஸாரிடமோ ஆயுதம் இருந்த காரணத்தினால் போராட்டம் தொடங்கப்படவில்லை.

வடக்கில், 1970 ஆம் ஆண்டுகளில் கொண்டு வரப்பட்ட தரப்படுத்தலினால் பாரபட்சம் காட்டப்பட்டதினால் இளைஞர்கள் விரக்தியடைந்தனர். அத்துடன் தமிழ் இளைஞர்களுக்கான வேலை வாய்ப்பிலும் பாரபட்சம் காட்டப்பட்டது. இதனால் விரக்தியடைந்த இளைஞர்கள் ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டனர் என்பதைக் குறிப்பிட்டிருந்தேன்.

வடக்கு மாகாண சபை அமைய முன்னரே, 2013 ஆம் ஆண்டு மார்ச் மாதம் நாடாளுமன்றத்தில் உரையாற்றும்போது, இங்கு நடந்து கொண்டிருப்பது இனப்படுகொலை என்பதை தெரிவித்திருந்தேன். நாடாளுமன்றத்தில் முதன்முறையாக இங்கு நடப்பது இனப்படுகொலை என்பதைச் சொல்லியிருந்தேன். அதேபோன்று சர்வதேச சுயாதீன விசாரணை வேண்டும் என்பதையும் ஆணித்தரமாக முன்வைத்தவன் நான். இலங்கை அரசை எந்தவொரு சந்தர்ப்பத்திலும் காப்பாற்ற முனையவில்லை.



கொழும்பிலிருந்து தமிழ் மக்களை வெளியேற்றியபோது, அதற்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்தேன். அவ்வாறு வெளியேற்றப்பட்ட தமிழ் மக்கள் வவுனியாவுக்குக் கொண்டு செல்லப்படுவதற்குள்ளேயே, வழக்கில் வெற்றிபெற்று மக்களை மீளவும் கொழும்புக்கு கொண்டுவர முடிந்தது. இவ்வாறு பல வழக்குகள் தமிழ் மக்களுக்காகப் பேசி வெற்றி பெற்றுக் கொடுத்திருக்கின்றேன்.

ஆனால், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தமிழ் மக்களுக்காக இது வரை எத்தனை வழக்குகள் வாதாடி வென்று கொடுத்திருக்கின்றார். அவர் இதுவரை ஒரே ஒரு வழக்கில்தான் முன்னிலையாகியுள்ளதாகத் தேடியபோது கிடைத்தது. அதுவும் இராணுவத்தினருக்குச் சார்பாக மன்றில் முன்னிலையாகி வென்று கொடுத்திருக்கின்றார்.

தமிழ் மக்களுக்காக ஆயிரமாயிரம் வழக்குகள் செய்து கொண்டிருக்கின்ற எங்கள் மீது சேறு பூசுவது நியாயமா?– என்றார். (த-5)

# கிராமங்கள் வரை அதிகாரப் பகிர்வு

## பிரதமர் ரணில் தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 15

கிராமம் வரை அதிகாரத்தைப் பகிர்வோம். ஆனால், அரசியல்வாதிகளுக்கு அதிகாரத்தை வழங்க மாட்டோம். சிவில் அமைப்புக்களின் தலைவர்கள், சமயத் தலைவர்கள் ஆகியோருக்கே அதிகாரத்தை வழங்குவோம் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

மக்கள் மஹிந்தவை நிராகரித்து விட்டனர். இந்நிலையில், பெரும்பான்மை அதிகாரத்தைப் பெறுவது என்பது வேறு எவருடைய கனவும் அல்ல. மஹிந்தவின் கனவு மட்டுமே எனத் தெரிவித்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அனைத்து இன, மத மக்களும் சமமாகவும், சுதந்திரமாகவும் வாழக்கூடிய புதிய நாட்டை உருவாக்குவோம் என்றும் கோரிக்கை விடுத்தார்.

கொழும்பு – 07இல் உள்ள இலங்கை மன்றக் கல்லூரியில் நேற்றுமுன்தினம் காலை இடம்பெற்ற நல்லாட்சிக்கான ஐக்கிய தேசிய முன்னணியின் விசேட செய்தியாளர் மாநாட்டின்போதே ரணில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் ஜனவரி 8ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட நல்லாட்சியை முன்னோக்கிக் கொண்டுசெல்வதே எமது நோக்கமாகும். நாட்டு மக்கள் மஹிந்த ராஜபக்ஷவை நிராகரித்துள்ளனர். பெரும்பான்மையைப் பெறுவது என்பது அவரின் கனவு மட்டுமே. வேறு எவருடைய கனவும் அல்ல. இலங்கையில் நல்லாட்சி அரசியன்கீழ் நீதியான தேர்தலொன்று நடத்தப்படுகின்றது.

1989ஆம் ஆண்டு இடம்பெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் சுவரொட்டிகள், பதாகைகள் ஒட்டும் முறைமை ஆரம்பிக்கப்பட்டு, பின்னர் அது அப்படியே பழக்கத்துக்கு வந்தது. இதனால் பெரும் செலவு ஏற்பட்டது. இன்று சுவரொட்டிகள், பதாகைகள் இல்லை. சட்டம் சரியாக நடைமுறைப்படுத்தப்படுகிறது. ஊடக சுதந்திரம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. ஜனாதிபதிக்குரிய நிறைவேற்று அதிகாரங்கள் குறைக்கப்பட்டுள்ளன. தற்போது மக்களின் தேர்தல் நடத்தப்படுகிறது. எனவே, நாட்டுக்கு யார் தேவை என்பதை மக்களே தீர்மானிக்கவேண்டும்.

60 மாதங்களில் புதிய நாட்டை உருவாக்குவதாக நாம் எமது விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்டுள்ளோம். அனைத்து இன, மத மக்களுக்கும் சட்டத்தைச் சரியாக நடைமுறைப்படுத்தி, அனைவரும் சுதந்திரமாகவும், ஒற்றுமையாகவும், அச்சமின்றியும் வாழக்கூடிய சூழலை ஏற்படுத்துவோம். புதிய நாட்டை உருவாக்குவதற்கான வாய்ப்பு உங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. – என்றார். (த)

# பிரதமருக்கு எதிராக சுவரொட்டி கண்டியில் கைதாகினர் ஏழு பேர்

கொழும்பு, ஓக. 15

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு அபகீர்த்தி ஏற்படுத்தும் வகையில் சுவரொட்டிகளை அச்சிட்டுக் கொண்டிருந்த பிரபல அச்சகம் ஒன்று கண்டியில் முற்றுகையிடப்பட்டு ஊழியர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது.

கண்டி டி.எஸ்.சேனநாயக்கா வீதியில் அமைந்துள்ள குறித்த அச்சகம் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஆரம்பகால அங்கத்தவரான அமைச்சர் ஒருவரினால் ஆரம்பிக்கப்பட்டது. தற்போது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் முன்னாள் அமைச்சர் ஒருவரது குடும்பத்துக்குச் சொந்தமானதாக உள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

மேற்படி அச்சகத்தின் ஊழியர்கள் 7 பேர் கைதாகி உள்ளதுடன் சுமார் 800 போஸ்டர்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும், கைதானவர்களை கண்டி நீதவானிடம் முன்னிலைப் படுத்தவுள்ளதாகவும் கண்டிப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (த-10)

# மதுபான சாலைகள் திங்களன்று பூட்டு

கொழும்பு, ஓக 15

நாடாளுமன்றத் தேர்தலை முன்னிட்டு நாளை மறுதினம் நாடு முழுவதிலும் உள்ள மதுபா னச் சாலைகள் அனைத்தும் மூடப்பட்டிருக்குமெனக் கலால் வரிகள் ஆணையாளர் நாயகம் அலுவலகம் அறிவித்துள்ளது. (த-22)

# தனியார்துறை ஊழியர் வாக்களிக்க விடுமுறை

## வழங்குமாறு வடக்கு மாகாண தொழில் ஆணையாளர் பணிப்பு

நாளை மறுதினம் திங்கட்கிழமை நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் தனியார்துறை ஊழியர்கள் வாக்களிப்பதற்கு வசதியளிக்கும் நோக்கில் அவர்கள் தொழில் புரியும் இடத்துக்கும் அவர்களது வாக்களிப்பு நிலையத்துக்கும் இடையில் உள்ள தூரத்தைக் கருத்தில் கொண்டு அவர்களுக்கான சம்பளத்துடனான விசேட விடுமுறையை வழங்குமாறு வட மாகாணப் பிரதி தொழில் ஆணையாளர் நீலலோஜினி ஜெகதீஸ்வரன் கேட்டுக்கொண்டுள்ளார்.

விசேட விடுமுறை வழங்கப்பட வேண்டிய தூரமும் கால அளவும் பின்வருமாறு அமைய வேண்டுமென அவர் தெரிவித்துள்ளார்.

40 கிலோ மீற்றர் அல்லது அதற்கு குறைவான தூரம் எனில் அரை நாள் விடுமுறையும், 40 கிலோ மீற்றருக்கும் 100கிலோ மீற்றருக்கும் இடைப்பட்ட தூரமாயின் ஒரு நாள் விடுமுறையும், 100 கிலோ மீற்றருக்கும் 150 கிலோ மீற்றருக்கும் இடைப்பட்ட தூரமாயின் ஒன்றரை நாள்கள் விடுமுறையும், 160 கிலோ மீற்றருக்கு மேற்படின் இரு நாள்கள் விடுமுறையும் வழங்கப்பட வேண்டும். இது தவிர 03 நாள்கள் தேவைப்படக்கூடிய சந்தர்ப்பங்கள் ஏற்படின் மூன்று நாள்கள் விடுமுறையும் வழங்க வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

ஊழியர்களுக்கு தமது வாக்கை அளிப்பதற்கு விடுமுறை வழங்கத் தவறும் தொழில் தருநர்கள் தொடர்பான முறைப்பாடுகளுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கையை மாவட்ட உதவித் தொழில் ஆணையாளர், உப அலுவலகங்களுக்குப் பொறுப்பான சிரேஷ்ட தொழில் அலுவலர்கள், வலய அலுவலகத்துக்குப் பொறுப்பான பிரதித் தொழில் ஆணையாளர் மற்றும் தொழில் ஆணையாளர் நாயகத்தின் பிரதிநிதி ஆகியோர் எடுக்க வேண்டும் எனத் தொழில் அமைச்சின் செயலாளர் பணித்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (த-ரி2)

# நீதிமன்றில் வாதிடத் தெம்பில்லாதவர் நாடாளுமன்றில் வாதிடப் போகிறாராம்

## கஜேந்திரகுமாருக்கு ஸ்ரீகாந்தா சாட்டை

யாழ்ப்பாணம், ஓக. 15

மஹிந்தவை மீண்டும் ஜனாதிபதியாக்க முயன்ற கஜேந்திரகுமார் பொன்னம்பலம் யாராவது ஒருவருக்காக நீதிமன்றப் படி ஏறியுள்ளாரா? ஒரு வழக்காவது வாதிட்டாரா? நீதிமன்றில் வாதிட தெம்பில்லாதவர் நாடாளுமன்றில் என்னத்தை வாதிடப்போகிறார்? அவர் வாதிடுவாரா? என்று சாட்டையடி கொடுத்துக் கேள்வியெழுப்பியுள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.தேர்தல் தொகுதி வேட்பாளர் ந.ஸ்ரீகாந்தா.



நல்லூர் கிட்டு பூங்காவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பரப்புரைக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மக்களின் வாக்குளை உடைக்கவே கஜேந்திரகுமார் பொன்னம்பலம் போட்டியிடுகிறார். அவரது தலைமையை ஏற்கலாமா? மஹிந்தவை மீண்டும் ஜனாதிபதி ஆக்க வேண்டும் என்று கடந்த ஜனாதிபதித் தேர்தலில் தேர்தலைப் புறக்கணிக்கச் சொல்லியிருந்தார் என்பது குழந்தைப் பிள்ளைக்கும் தெரியும். எனவே அவரது அணி தோற்கடிக்கப்பட வேண்டும்.

அவர் ஒரு சட்டத்தரணி என்று தெரியும். ஆனால் அரசியல் கைதிகள் விடயத்திலோ, மக்களின் காணிகளை மீட்கும் விடயத்திலோ பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் கைதானவர்கள் சார்பிலோ இதுவரை நீதிமன்றில் வாதாடியிருக்கிறாரா? ஈ.பி.டி.பி கட்சியின் டக்ளஸ் தேவானந்தாவின் அரசியல், அஸ்தமனத்தை – முடிவை நெருங்கிவிட்டது. நெடுந்தீவுக்குச் சென்றபோது அங்குள்ள மக்களும் அதனைத் தெரிவித்துள்ளனர்.

மக்கள் அனைவரும் இம்முறை கட்டாயம் வாக்களிக்க வேண்டும். குறைந்தது 80 வீத வாக்குகளாவது அளிக்கப்பட வேண்டும். அப்போதுதான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இங்கு 7 ஆசனங்களையும் கைப்பற்ற முடியும்.

யாழ்.பொதுநூலகத்தை எரித்து எமது கல்வியை நாசமாக்கிய கட்சியில் இங்குள்ள நடிகை விஜயகலா போட்டியிடுகிறார். [illegible] விலக்கி விடுங்கள் என்று அவர் மேலும் தெரிவித்தார். (த-4)

# பிரச்சினைகளுக்குத் தீர்வு தென்பகுதி மக்களிடமே

## கூறுகிறது முன்னிலை சோசலிஷக் கட்சி

யாழ்ப்பாணம், ஓக. 15

தமிழ் மக்களின் பிரச்சினைகள் மற்றும் அரசியல் தீர்வைத் தென்னிலங்கை மக்களிடம்தான் பெற வேண்டும். அத்தகைய பிரச்சினைகளைத் தென்னிலங்கை மக்களிடம் கொண்டு செல்வது நாம் மட்டும் தான் என்று முன்னிலை சோஷலிஸக் கட்சி தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாணத்திலுள்ள அதன் அலுவலகத்தில் நேற்று நடந்த செய்தியாளர் சந்திப்பில் அதன் பிரதிநிதிகள் இவ்வாறு தெரிவித்தனர்.

நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் அந்தக் கட்சி மேலும் தெரிவித்ததாவது:-

இந்த அரசிடம் தீர்வு கிடையாது. எனவே மக்களிடம் தான் தீர்வைப் பெறவேண்டும். சிங்கள அரசு என்று கூறக்கூடாது. அரசு என்றுதான் நீங்கள் கூறவேண்டும். ஏனெனில் அதில் தமிழ், முஸ்லிம்களும் உள்ளனர். எமக்கு அநீதி இழைத்தவர்களிடம் சென்றுதான் நாம் நியாயம் கேட்கிறோம். அவர்கள் எப்படி எமக்கு நியாயமாக நடந்து கொள்வார்கள்? நாமும் தென்னிலங்கை முற்போக்கு சக்திகளையும் சேர்த்துத்தான் தமிழர்களது பிரச்சினைகளைத் தீர்க்க முடியும் என்று கூறப்பட்டது. (த-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மக்கள் அங்கீகாரம் வழங்கின் அடுத்த கட்டத்துக்கு நாம் பொறுப்பு

## தமிழ் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர் சுமந்திரன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஓக.15

நாம் முன்வைத்துள்ள தீர்வுத் திட்டத்தை சர்வதேசம் ஏற்றுக்கொண்டுள்ள நிலையில், அதனை ஆதரித்து தமிழ் மக்கள் முழு அங்கீகாரம் வழங்கினால், அந்தத் தீர்வை நடைமுறைப் படுத்துவதற்கான அடுத்த கட்ட நகர்வை மேற்கொள்வதற்கு நாம் பெறுப்பு என்று தெரிவித்துள்ளார் யாழ். மாவட்ட தமிழ் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர் சட்டத்தரணி சுமந்திரன்.

மக்கள் சந்திப்பொன்றில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

2009 இல் உங்களுடைய அரசியல் எதிர்காலத்தை நிர்ணயிப்பதற்கான ஒரு பெரும் பொறுப்பை நீங்கள் தமிழ் தேசியக் கூட்டமைப்பிடம் வழங்கினீர்கள். அந்தப் பொறுப்பை நாம் ஏற்று, சர்வதேச ரீதியில் செயற்பட்டு வருகின்றோம். 2009ஆம் ஆண்டு போரை நிறைவு செய்தார்கள் என்று கூறி ஐ.நா. தீர்மானம் மூலம் பாராட்டப்பட்ட இலங்கை அரசை, ஒன்றரை வருட காலத்திலேயே சர்வதேச விசாரணைக் கூட்டில் ஏற்றும் தீர்மானத்தை, இலங்கை அரசை பாராட்டிய அதே ஐ.நா. சபையிலேயே கொண்டுவர வைத்தோம். இதனை சர்வதேசத்தின் ஆதரவுடன் செயல்படுத்திக் காட்டினோம். இதன் மூலம் இன்று சர்வதேச விசாரணை என்பது சாத்தியமாகியுள்ளது.

சர்வதேச விசாரணை என்று ஒன்று இல்லை என்று சிலர் கூறுகின்றனர். ஆனால் சர்வதேச விசாரணை என்பது ஏற்கனவே ஆரம்பமாகி, சாட்சிகள் கூட பதிவு செய்யப்பட்டு உள்ளது. அதன் அறிக்கை மார்ச் மாதம் வர இருந்தது, அது தற்பொழுது செப்ரெம்பரில் வர இருக்கின்றது. இந்த இடைப்பட்ட காலத்தில், நாம் பல புதிய நேரடிச் சாட்சிகளை ஒன்றிணைத்து, அவற்றை நெறிப்படுத்தி சர்வதேச விசாரணை ஆணைக் குழுவிற்கு வழங்கியுள்ளோம்.

கடந்த மஹிந்த ஆட்சியிலே சாட்சி சொல்ல முன்வராமல் பயந்து இருந்த பல முக்கியமான சாட்சிகள், ஆட்சி மாற்றத்தின் பின்னர், தமது சாட்சிகளை சர்வதேச விசாரணை ஆணைக்குழுவிடம் இதுவரை பதிவு செய்து இருக்கின்றார்கள். நீங்கள் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தியதனாலேயே இது சாத்தியமாகியது. இது கூட தெரியாத சிலர், ஜனாதிபதித் தேர்தலை பகிஷ்கரிக்கச் சொன்னவர்கள், இப்பொழுது சர்வதேச விசாரணையை நாம் கோரவில்லை என்று சொல்லி மக்களை ஏமாற்ற முயல்கின்றனர்.

வருகின்ற செப்ரெம்பரிலே சர்வதேச விசாரணை அறிக்கை வெளிவரும் நிலையில், சர்வதேச சமூகம் எமக்கு ஆதரவான நிலைப்பாட்டில் உள்ள இந்தத் தருணத்திலே, நாம் முன்வைத்துள்ள சமஷ்டி முறையிலான தீர்வுத் திட்டத்தை நீங்கள் அனைவரும் முழுமையாக ஆதரித்து உங்கள் வாக்குகளை வழங்கினால், சர்வதேசத்தின் உதவியுடன், மாறி வரும் சூழ்நிலையில் ஒரு தீர்வை நிச்சயமாக எம்மால் பெற்றுக் கொள்ள முடியும்.

வரலாற்றில் சந்தர்ப்பங்கள் வாய்க்கின்ற பொழுது அவற்றை நாம் முறையாக பயன்படுத்திக்கொள்ள வேண்டும், இப்பொழுது வாய்த்துள்ள சந்தர்ப்பத்தை நாம் முறையாக பயன் படுத்த வேண்டுமானால், சமஸ்டித் தீர்வுக்கு தமிழ் மக்கள் மொத்தமாக தமது ஆதரவை தந்துவிட்டார்கள் என்பதை நாம் தெளிவாக காட்ட வேண்டியுள்ளது. நீங்கள் எமக்கு வழங்கும் வாக்கு, எமக்கான வாக்கு என்று நினைக்க வேண்டாம், அது உங்களுக்கான வாக்கு, தமிழ் மக்களுக்கான தீர்வுத் திட்டத்திற்கான வாக்கு. இதனையே நீங்கள் சர்வதேசத்திடம் உறுதியாக தெரிவிக்க வேண்டியுள்ளது.- என்று தெரிவித்துள்ளார்.

(ற)

# இனத்தின் எதிரிகளுக்கு மக்கள் ஒரு வாக்கேனும் இடமாட்டார்

## வடக்கு மாகாண சபை உறுப்பினர் ஆர்னோல்ட் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஓக.15

அற்ப ஆதாயங்களுக்கும், போலிப் பரப்புரைக்கும் மயங்கி எமது இனத்தின் விடுதலைக்கு எதிராக ஒரு வாக்கையேனும் எனது ஊர் மக்கள் அளிக்கமாட்டார்கள், ஒரு வாக்காவது கிடைக்கும் என்று யாரும் தப்புக் கணக்கு போட்டுக்கொண்டு இங்கே வர வேண்டாம் – இவ்வாறு வடமாகாண சபை உறுப்பினர் ஆர்னோல்ட் தெரிவித்துள்ளார்.

பரப்புரைக் கூட்டம் ஒன்றில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

2009ஆம் ஆண்டு உள்நாட்டிலும், சர்வதேசத்திலும் வீழ்த்தப்பட்டு இருந்தது எம் இனம். எம் இனத்தின் மீது இனப்படுகொலை நிறைவேற்றிய அரசை பாராட்டி, சர்வதேச நாடுகள் தலைமையில் ஐ.நா. தீர்மானம் நிறைவேற்றியது. எம் உயிர்களை வேட்டையாடிய கொடூர அரசு ஆனந்தக் கூத்தாடியது. அந்த நிர்க்கதியான சூழலில் தமிழரை திரும்பிப் பார்க்க யாரும் முன்வராத சூழலில், தமிழருக்கு தலைமையேற்று, தலைவிதியை மாற்ற முனைந்த ஒரே அமைப்பு தமிழ் தேசியக் கூட்டமைப்பு மட்டுமே.

2009 இல் இலங்கை அரசை பாராட்டிய சர்வதேசம், இரண்டாண்டுகளிலேயே இலங்கை அரசுக்கு எதிராக சர்வதேச விசாரணையை கொண்டு வரும் தீர்மானத்தை நிறைவேற்றும் அளவுக்கு நிலைமையை மாற்றியது தமிழ் தேசியக் கூட்டமைப்பின் புத்தி சாதுரியமான நடவடிக்கைகளே.

அன்று சர்வதேச விசாரணையை எதிர்த்தவர்கள் இன்று வந்து சுமந்திரனை தோற்கடிக்க வேண்டும் என்று சொல்கின்றார்கள், சம்பந்தனின் தலைமையை மாற்ற வேண்டும் என்கின்றார்கள், மாவை சேனாதிராசா செய்த உத்தியோகம் என்ன என்று கேட்கின்றார்கள்.

சுமந்திரனை தோற்கடிக்க வேண்டும் என்று சொல்லும் இவர், இதுவரை எந்த தமிழ் மகனின் உரிமைக்காகவாவது சர்வதேசத்தில் குரல் கொடுத்து இருக்கின்றாரா? நீதிமன்றத்தில் ஒரு வழக்கைக் கூட தமிழ் மக்களின் விடுதலைக்காக பேசி இருக்கின்றாரா?

சர்வதேச விவகாரங்களையும், சட்டங்களையும், அரசியல் யாப்புக்களையும் கற்றவர்கள் தேவை என்பதற்காகத்தானே சுமந்திரனை நிறுத்தி இருக்கின்றார்கள், ஆனால் அது பொறுக்காமல், ஒரு தமிழன் சர்வதேசத்தில் ஆதிக்கம் செலுத்தி நம் விடுதலைக்காக நுணுக்கமாக காய் நகர்த்துவது பிடிக்காமல், அவரை தோற்கடிக்க வேண்டும் என்று கூச்சல் போடுகின்றவர்கள், மற்றவர்களிடம் உத்தியோகம் என்னவென்று கேட்பது பெரும் முரண்பாடாகும்.

சுயநலத்திற்காக, தமக்கு பதவி வேண்டும் என்பதற்காக, தமக்கு தலைமை ஆசை இருக்கிறது என்பதற்காக தமிழினத்தின் ஒற்றுமையை சீர்குலைத்து, கிடைக்கக் கூடிய தீர்வை குழப்ப முயல்பவர்களுக்கும், அற்ப சலுகைகளை கொடுத்து மக்களை ஏமாற்ற நினைப்பவர்களுக்கும் எனது ஊரில் ஒரு வாக்குக் கூட கிடைக்காது என்பதை உறுதியாக தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.– என்றார்.

(ற)

கீரிமலையில் நேற்று ஆடி அமாவாசையை முன்னிட்டு ஆயிரக் கணக்கானோர் பிதிர்க் கடன் செலுத்தினார்கள். அதிகாலை முதல் கீரிமைலைக் கேணியிலும் கடலிலும் ஆயிரக்கணக்கானோர் தமது தந்தையர்களுக்கான பிதிர்க் கடன் செலுத்துவதில் ஈடுபட்டனர். இம்முறை அதிக எண்ணிக்கையான வெளிநாடு வாழ் தமிழர்களும் பிதிர்க் கடன் செலுத்தியதை காண முடிந்தது. காங்கேசன்துறைப் பொலிஸாரும், கடற்படையினரும் பாதுகாப்புப் பணிகளில் ஈடுபட்டிருந்தனர்.

(ற-86)



# வாக்கெண்ணும் பணியைப் பார்க்க ஊடகவியலாளர்களுக்கு சந்தர்ப்பம்

கொழும்பு, ஓக. 15

இந்தமுறை இடம்பெறும் நாடாளுமன்றத் தேர்தலில் வாக்குகள் எண்ணப்படுதல் மற்றும் பெறுபேறுகளைப் பட்டியல்படுத்தும் கருமங்கள் மேற்கொள்ளப்படும் விதத்தை மேற்படி மையங்களுக்குச் சென்று நேரடியாகப் பார்ப்பதற்கு முதற்தடவையாக ஊடகவியலாளர்களுக்கு அனுமதி வழங்கப்படவுள்ளது என்று தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

தேர்தல் பெறுபேறுகளைப் பட்டியல் படுத்தும் 22 மையங்கள் செயற்படவுள்ளதுடன், அந்த நிலையமொன்றுக்கு ஊடகவியலாளர் ஒருவர் என்றவாறு உள்ளே செல்வதற்கு அனுமதி வழங்கப்படும் எனவும் அந்தவிதம் அனுமதி வழங்கப்படுவது, செய்தி சேகரிப்பதற்கோ ஒளிப்படம் எடுப்பதற்கோ அல்லவெனவும் அந்த நிலையங்களில் வெளிப்படைத்தன்மையுடன் கருமங்கள் மேற்கொள்ளப்படும் விதத்தை நேரடியாகப் பார்க்கும் அனுபவத்துக்காகவே எனவும் தேசப்பிரிய தெரிவித்தார்.

அந்த நிலையங்களுக்குள் பிரவேசிப்பதற்குத் தேர்தல்கள் ஆணையாளரால் விசேடமான அனுமதிப் பத்திரமொன்று வழங்கப்படவுள்ளதோடு, அந்த நிலையங்களில் கரும மாற்றும் உத்தியோகத்தர்களுக்குக் கிட்டும் வசதி வாய்ப்புக்கள் ஊடகவியலாளர்களுக்கும் கிட்டும்.

தேர்தல்கள் விதப்புரைக் குழுவைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நிரந்தர உறுப்பினர்களுக்கு பெறுபேறுகள் பட்டியல்களைத் தயாரிக்கும் நிலையங்களுக்குள் பிரவேசிப்பதற்கான அனுமதிகளை வழங்குவதற்கும் தேர்தல்கள் ஆணையாளர் தீர்மானித்துள்ளார்.

(ற-22)

# எம்.பிக்கான மாதாந்தச் சம்பளத்தை அபிவிருத்தி பணிக்கு செலவிடுவேன்

## ஐ.ம.சு.மு. வேட்பாளர் கே.கே.மஸ்தான் தெரிவிப்பு

மாங்குளம், ஓக. 15

தற்போது நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் என்னை வெற்றி பெறச் செய்தால் நாடாளுமன்ற உறுப்பினருக்கு மாதாந்தம் வழங்கப்படும் சம்பளத்தை கல்வி அபிவிருத்திக்காக செலவிடுவேன் என்று ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வன்னி மாவட்ட வேட்பாளர் கே.கே.மஸ்தான் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் நடத்திய மக்கள் சந்திப்புகளிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

தமிழ், முஸ்லிம் மக்களின் வாக்குகளால் வெற்றி பெற்ற ஜனாதிபதி மைத்திரியின் வழிகாட்டலில் நாம் நடந்து வருகின்றோம். இதனைப் பொறுக்காத சிலர் என்னையும் தமிழ், முஸ்லிம் மக்களுக்குத் துரோகம் விளைவித்த முன்னாள் ராஜபக்ஷவுடன் இணைத்துச் சுவரொட்டிகளை தயாரித்து வருகின்றனர். இது வேண்டுமென்றே எமக்கு அவப்பெயரை உண்டாக்குவதில் சில விசமிகள் ஈடுபடுகின்றார்கள்.

இதனை எவரும் நம்பவேண்டாம் எமது கட்சியானது தமிழ், முஸ்லிம், சிங்கள இனத்தவர்களை ஒன்றிணைத்து இன, மத, மொழி வேறுபாடுகளின்றி அனைவருக்கும் சமமான அந்தஸ்தை வழங்கி அவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்து வருகின்றது.

இதைத்தவிர என்னால் செய்யக் கூடிய உதவிகளாக வவுனியா மாவட்டத்தில் பல வணக்கஸ்தலங்கள், ஏழை மாணவர்களுக்கான புலமைப்பரிசில் திட்டம், வாழ்வாதார உதவிகள், நோயாளிகளுக்கான நிதியுதவிகள், சிறுகைத் தொழில் ஊக்குவிப்பு கொடுப்பனவுகள், பாடசாலையின் பௌதிக வள அபிவிருத்தி, வறியோர்களுக்கான உதவிகள் போன்ற நிதிகள் முன்னைய காலத்திலும், தற்போதும், இனி மேலும் செய்து வருவேன் என்பதில் மாற்றமில்லை.

வெற்றியை நோக்கிய எமது பயணத்தைத் தடை செய்வதற்காக சிலர் ஏமாற்று நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர். எனவே மக்கள் சகோதரத்துடன் அனைவரும் இணைந்து அமைதி பூர்வமாக தேர்தலில் வாக்களியுங்கள் – என்றார். (ற-422)

# வாக்கிடும் சந்தர்ப்பத்தை மக்கள் தவறவிடக் கூடாது

## வலியுறுத்துகின்றது பவ்ரல்

கொழும்பு, ஓக.15

ஜனநாயக செயற்பாட்டில் குடி மக்களுக்குக் கிடைக்கும் வாக்குப் பலத்தை எக்காரணத்தை முன்னிட்டும் தவறவிடக்கூடாது என்று வலியுறுத்தியுள்ள பவ்ரல் அமைப்பு எதிர்வரும் 17 ஆம் திகதி இடம் பெறும் நாடாளுமன்றப் பொதுத் தேர்தலில் பெறுமதிமிக்க வாக்கைச் செலுத்தி குடிமக்களது கடப்பாட்டை நிறைவேற்றுமாறும் கோரிக்கை விடுத்துள்ளது.

தாங்கள் வாக்களிக்கவிருக்கும் கட்சி எதுவாக இருந்தாலும் தாங்கள் தெரிவு செய்யவுள்ள பிரதிநிதியானவர் அநியாயக்காரனொருவர் அல்லாத, சமூக விரோத செயல்களில் ஈடுபடாத, அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்யாத, லஞ்சம் மற்றும் ஊழல்கள் அற்ற, சுற்றாடலை நேசிக்கும் ஒருவராக இருக்க வேண்டும் என்பதில் அக்கறை செலுத்த வேண்டும் என்று அந்த அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளரான ரோஹண ஹெட்டியாராச்சி சுட்டிக்காட்டியுள்ளார்.

19ஆவது அரசமைப்புத் திருத்தத்தின் மூலம் தேர்தல்கள் ஆணையாளருக்கு அதிகரித்த அதிகாரம் கிட்டியிருப்பதால் இதுவரை நடந்த தேர்தல்களுள் சட்டவிதிகள் பாதுகாக்கப்பட்டு – பெரும்பாலும் சுமூகமானதொரு தேர்தல் களத்தை இம்முறை காணமுடிந்துள்ளது என்றும் அந்தக் கௌரவம் தேர்தல்கள் ஆணையாளர் மற்றும் பொலிஸ்மா அதிபருக்கும் உரியது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

பவ்ரல் அமைப்பு முன்வைத்திருந்த அறிக்கைக்கு அமைய அரசபலம் முறைகேடாகப் பயன்படுத்திக் கொள்ளப்பட்டுள்ளமை பற்றி அரச தரப்பு, எதிர்க்கட்சி என்ற இரண்டும் ஒன்றுக்கொன்று சமமான விதத்தில் பொறுப்புக் கூற வேண்டியுள்ளது. அதற்குக் காரணம் தற்போதைய அரசினுள் அமைச்சர்கள் மற்றும் பிரதியமைச்சர்கள் பதவிக்ளை வகிப்பதில் அரசதரப்பு மற்றும் எதிர்க் கட்சி 36 உம் 35 உம் என்றவாறு பிரதிநிதித்துவம் வகிப்பதே காரணம் என்றும் தெரிவிக்கப் பட்டது.

(ற)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்கு எதிராக தெற்கில் பலசேனா; வடக்கில் முன்னணி

## மக்கள் தெளிவாக வீட்டுச் சின்னத்துக்கு வாக்களிக்க வேண்டும் என்கிறார் மாவை சேனாதிராசா



யாழ்ப்பாணம், ஓகஸ்ட் 15
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைத் தடை செய்ய வேண்டும் என்று தெற்கில் பொதுபல சேனா கட்சியும் அதே கூட்டமைப்பைத் தோற்கடிக்க வேண்டும் என்று வடக்கில் கஜேந்திரகுமார் பொன்னம் பலமும் வரிந்து கட்டிக் கொண்டி ருக்கிறார்கள். அவர்களின் நோக்கத்தை இனங்கண்டு மக்கள்தான் அவர்களைத் தோற்கடிக்க வேண்டும். அதற்கு அனைவரும் தவறாது வீட்டுச் சின்னத்துக்கே வாக்களியுங்கள் – இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முதன்மை வேட்பாளர் மாவை சேனாதிராஜா தெரிவித்தார்.

பரப்புரைக் கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

சைபிரஸ், துருக்கி நாடுகளின் 13 நீதிபதிகள் கொண்ட குழு நில அபகரிப்பு வழக்கொன்றில் அனைத்து காணிகளையும் விடுவிக்கவும் நஷ்டஈடு வழங்கவும் தீர்ப்பளித்தது. சமூர்த்தியாளர்களின் நிதியம் மாகாண சபைகளுக்கு இருக்கும் அதிகாரம். அவற்றை நீக்க டக்ளஸும் மத்திய அரசுடன் இணைந்து எமக்கு எதிராகச் செயற்பட்டார். ஆனால் உயர் நீதிமன்றில் வாதாடி வென்றோம். ஆனால் பிரதம நீதியரசர் ஷிராணி பதவி நீக்கம் செய்யப்பட்டார்.

நாம் பல தடவைகள் தாக்கப்பட்டுள்ளோம். ஆனால் மக்கள் தெளிவாக உள்ளனர். நாடாளுமன்றுக்கு வர கூட்டமைப்பைக் குறை கூறி வருகிறார்கள். மக்களுக்குச் சேவை செய்ய வேண்டும் என்றால் நாடாளுமன்ற உறுப்பினராகத்தான் இருக்க வேண்டும் என்பது இல்லை.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிக்க வேண்டாம் என்று கூறிய கஜேந்திரகுமார் பொன்னம் பலம் தலைமையிலான கட்சியினர் தற்போது அதற்கு அர்த்தம் கற்பித்துக் கொண்டு திரிகிறார்கள். எனவே அனைவரும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வீட்டுச் சின்னத்துக்கு வாக்களியுங்கள். வெற்றியை உறுதிப்படுத்துங்கள்– என்றார்.

அங்கு வேட்பாளர் த.சித்தார்த்தன் உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:-

15 லட்சம் மக்கள் புலம்பெயர்ந்து விட்டனர். அது பலவீனம். எமது இனத்தை முதலில் நிலைநிறுத்திக் கொள்ள வேண்டும். கல்விதான் எமது தொழிற்சாலையாக இருந்தது. எம்மை வாழ வைத்தது. ஆகவே கல்வியை வளர்க்க வேண்டும். பொருளாதாரத்தை வளர்க்க வேண்டும் என்றார். ஏனைய கட்சிகளைச் சேர்ந்தவர்கள் அரசுடன் இணைபவர்களாக அல்லது அரசுக்குக் கட்டுப்பட்டவர்களாக இருப்பார்கள். எனவே அவர்களை தீர்வுக்காக நாம் நம்பி எதிர்பார்க்க முடியாது. அவர்கள் எப் பொழுதும் அரசின் செயற்பாட்டையே பிரதிநிதித் துவப் படுத்துவர். எனவே எமது மக்களின் பிரச்சினை களைத் தீர்க்கக் கூடிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கே அனை வரும் வாக்களிக்க வேண்டும்.– என்றார்.

அங்கு வேட்பாளர் அனந்தராஜ் கருத்துத் தெரிவித்ததாவது:-

உலகிலுள்ள அமைப்புக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வெற்றிக்காகக் காத்துக் கொண்டிருக்கின்றன. அவ்வாறு புலம்பெயர் உறவுகள் எவ்வாறு இருக்கிறார் களோ அதனைவிட நீங்கள் ஆர் வாக இருந்து வீட்டுக்கு வாக்க ளிக்க வேண்டும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சிதைப்பதற்கும் உடைப்பதற்கும் பல கட்சிகளும் சுயேச்சைக் குழுக்களும் கங்கணம் கட்டிக் கொண்டிருக்கும் நிலையில் கூட்டமைப்பைப் பலவீனப்படுத்தாது மேலும் பலப்படுத்த வேண்டும்.

சமஷ்டி வழங்கினால் நாடு துண்டாகும் என்று எண்ணுகிறார்கள். பல வெளிநாடுகள் துண்டாகவில்லைத்தானே. எனவே நீங்கள் அனைவரும் வீட்டுச் சின்னத்துக்கு வாக்களியுங்கள். தாய் வீடு இருக்க வேண்டும் என்பதனை நீங்கள் நிலைநாட்டுங்கள். தன்னாட்சி உரிமையுள்ள இனம் என்பதனை நீங்கள் எடுத்துக் காட்டுங்கள். கூட்டமைப்பிலிருந்து நாம் 7 பேரும் நாடாளுமன் றுக்குச் செல்ல வேண்டும். கூட்டமைப் புக்கு வடக்குக் கிழக்கில் 20 ஆசனங்கள் கிடைக்க வேண்டும். எனவே கூட்டமைப்புக்கு அனைவரும் வாக்களியுங்கள்.– என்றார். (ற-4)

### நிதி மோசடிப் பிரிவை மூடக் கோரும் மனுவுக்கு ஆட்சேபனை தெரிவிக்க அவகாசம்

கொழும்பு, ஓக.15
நிதி மோசடிப் பிரிவை மூடுமாறு கோரித் தாக்கல் செய்யப்படுள்ள வழக்குக்கு ஆட்சேபனை இருப்பின் அதனை முன்வைக்குமாறு மேன் முறையீட்டு நீதிமன்றம் பொலிஸ்மா அதிபருக்கு நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை உத்தரவிட்டுள்ளது.

குறித்த மனு மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைவர் விஜித்த மலல்கொட முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே அவர் இவ்வாறு உத்தர விட்டார். (ற)

### விண்ணப்பம் கோரல்

கொழும்பு, ஓக 15
சுகாதார மற்றும் சுதேச வைத்திய அமைச்சால் இருதய நுரையீரல் செயற்பாட்டு அவதானிப்பாளர் தரம் 2 ஆட்சேர்ப்புக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

21 தொடக்கம் 35 வயதுக் குட்பட்டவர்கள் விண்ணப்பிக்க முடியுமெனவும் தகைமைகளாக, பல்சலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் விஞ்ஞான மானிப்பட்டம் பெற்றிருப்பதுடன் 5 வருடங்கள் தாதி உத்தியோகத்தராக சேவையாற்றிய அனுபவத்தைக் கொண்டிருக்க வேண்டும் எனக் கேட்கப்பட்டுள்ளது.

இப்பதவிக்கான விண்ணப் பங்களை செப்ரெம்பர் மாதம் 11 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. மேலதிக விவரங்களை இன்று வெளியாகும் வர்த்தமானி அறிவித்தலில் பார்வையிடலாம். (ற)

# தமிழ் தேசியத்தில் பற்றுள்ளோர் தமிழ் கூட்டமைப்புக்கு வாக்கிடுக

## மக்கள் நலன்பேணும் அமைப்பு வேண்டுகோள்

யாழ்ப்பாணம், ஓக. 15
தமிழ்த் தேசியத்தில் பற்றுள்ள ஒவ்வொரு தமிழ் மகனும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களித்து வெல்ல வைப்பதன் ஊடாக எமது உரிமையை வெற்றி கொள்ள முடியும். இவ்வாறு மக்கள் நலன் பேணும் அமைப்பு நேற்று முன்தினம் அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவித்துள்ளது.

அந்த அமைப்பின் தலைவர் செ.ஜெகபாலன் கையெழுத்திட்டு அனுப்பி வைத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

எமது கடந்த கால வரலாறுகளையும் எமது மக்கள் அனுபவித்த வேதனைகளையும் கருத்தில் எடுத்து, எமது மக்களுக்கு தற்போது தேவையான தீர்வு என்ன? அதை எவ்வாறு பெற வேண்டும், அதில் உள்ளடங்கும் என்ன விடயங்கள் சர்வதேச அணுகுமுறை சர்வதேச வலைப் பின்னலின் சாதக பாதக நிலை என்பவற்றை நாடி பிடித்துப் பார்த்து அதற்கேற்றால் போல் அரசியல், ராஜதந்திர நகர்வு களை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்னெடுக்கின்ற போது, நாம் மற்றைய கட்சிகளின் உணர்ச்சி வசனங்களில் மனங் கலங்காமல் சலுகைகளுக்கு விலை போகாமல் நடுநிலை வகிப்போரின் போதனை களை செவிமடுக்காமல் வாக்களிக்க வேண்டும். தமிழர்களுக்குரிய சாபக்கேடு எந்நேரமும் இருப்பதைப் போல் இந்த முறையும் பல வடிவங்களில் உள்ளது.

எனவே இவர்களுக்கு நல்ல பாடம் புகட்டி, தன்மானமுள்ள, தமிழ்த் தேசியத்தில் பற்றுள்ள ஒவ்வொரு தமிழ் மகனும் தமிழ்த் தேசி யக் கூட்டமைப்புக்கு வாக்களிக்க வேண்டும். – என்றுள்ளது. (ற-5)

# ஓட்டோவுக்குள் சிக்கியது கஞ்சா

நெல்லியடி, ஓக.15
பருத்தித்துறை நகரப்பகுதியில் ஓட்டோ ஒன்றுக்குள் இருந்து கஞ்சா பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது. வீதி கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த பொலிசார் ஆட்டோ ஒன்றை வழி மறித்து சோதனையிட்ட போதே அவை சிக்கியதாக உதவிபொலிஸ் அத்தியட்சகர் ஜவ்பர் தெரிவித்தார்.

இதன்போது சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டார் என்றும் சுமார் 6 கிராம் அளவிலான கஞ்சா பொதி கைப்பற்றப்பட்டது என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர், விசாரணையின் போது [illegible] குள் இருப் பது தனக்கு தெரியாது எனவும் தனிப்பட்ட கோபம் காரண மாக கஞ்சா ஆட்டோவுக்குள் வைக்கப் பட்டிருக் கலாம் என தெரிவித் தார் என்றும், விசாரணைகள் நிறை வில் நீதிமன்றில் அவரை முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பருத்தித்துறை பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

இதேவேளை கஞ்சா கடத்தல் இடம் பெறலாம் என்ற சந்தேகத்தில் வல்வெட்டித்துறை பருத்தித்துறை அச்சுவேலி பொலிஸ் பொறுப்பதிகாரிகளுக்கு தன்னால் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளது என்று உதவி பொலிஸ் அத்தியட்சகர் ஜவ் [illegible]

# மாவைக் கந்தன் தீர்த்தோற்சவம்







வரலாற்றுப் புகழ் மிக்க மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலய வருடாந்த தீர்த்தோற்சவம் நேற்று வெள்ளிக்கிழமை பகல் கீரிமலையில் அமைந்துள்ள கண்டகி தீர்த்தத்தில் நடை பெற்றது. காலை ஆறு மணியளவில் மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயத்தில் இருந்து சுமார் மூன்று கிலோ மீற்றர் தூரத்தில் அமைந்துள்ள கீரிமலை கண்டகி தீர்த்தக் கரையில் தீர்த்தோற்சவம் நடைபெற்றது. வழமை போன்று மாவிட்டபுரத்தில் இருந்து சென்ற மாவிட்டபுரம் கந்தனுடன் கீரிமலை நகுலேஸ்வரத்தில் இருந்து புறப்பட்ட நகுலேஸ்வரரும் இணைந்து தீர்த்தோற் சவம் நடைபெற்றது. (ற-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குற்றம் நிரூபணமானால் குடியுரிமை பறிபோகும்

## அமைச்சர் ராஜித மஹிந்தவுக்கு எச்சரிக்கை



கொழும்பு, ஓக.15

புலிகளுக்கு பணம் கொடுத்தமை நிரூபிக்கப்பட்ட பின்னர் மஹிந்த ராஜபக்ஷவின் பிரதமர் கனவு மட்டுமல்ல, அவரது குடியுரிமையும் பறிபோகும் என அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் மஹிந்த ராஜபக்ஷவின் காற்று தடைப்பட்டு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் காற்று வீச ஆரம்பித்துள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் மஹிந்த ராஜபக்ஷவின் காற்று வீசுவதாகக் கூறி கடந்த காலங்களில் அவர் பெயர் அரசியலில் வியாபாரம் செய்யப்பட்டது. ஆனால் இன்று மஹிந்த காற்று செயலிழந்துவிட்டதோடு அந்தப் பெயரை வியாபாரம் செய்ய முடியாத வங்குரோத்து நிலைமைக்கு முன்னணி தள்ளப்பட்டுள்ளது.

அதனால் இன்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் ஒளிப்படம் போடப்பட்டு விளம்பரங்கள் பிரசுரிக்கப்படுகின்றன. மைத்திரி யுகம் ஏற்படுத்தப்படுமென பரப்புரை செய்கின்றனர். மைத்திரி புகழ்பாட ஆரம்பித்துள்ளனர்.

போதைப்பொருள், எத்தனோல் வியாபாரிகள், ஊழல் மோசடிக்கார கும்பல்களால் எவ்வாறு மைத்திரி யுகத்தை ஏற்படுத்த முடியும்? ஜனவரி 8ஆம் திகதி ஏற்படுத்தப்பட்ட புரட்சி தொடர்ந்து முன்னெடுக்கப்படும்.

இறுதியாக இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்திலும் ஜனாதிபதி மைத்திரி நாம் வெற்றிபெற தமது வாழ்த்துக்களைத் தெரிவித்தார். தாஜுதீன் கொலை வழக்கு விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. முன்னாள் ஜனாதிபதியின் பாதுகாப்பு பிரிவில் இருந்த மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்கள் வாக்கு மூலம் வழங்கியுள்ளனர். தாஜுதீனை ஏன் இவர்கள் கொலை செய்ய வேண்டும். இவர்கடத்தப்பட்ட வாகனமும் ஷிராந்தி ராஜபக்ஷவுக்கு சொந்தமானது. எக்னெலிகொட காணாமற் போனமை தொடர்பில் புலிகள் இயக்கத்தின் புனர்வாழ்வளிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவரும், இராணுவத்தில் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர். கடந்த காலங்களில் இடம்பெற்ற கொலைகளுக்குப் புலிகள் பெயரே பயன்படுத்தப்பட்டது. அனைத்தும் புலிகள் கணக்கிலேயே சேர்க்கப்பட்டன. பாதுகாப்புத் துறையை சார்ந்தவர் தொடர்பில் கார்ட்டூன் வரைந்ததால்தான் எக்னெலிகொட கடத்தப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளார்.

இன்று எம்மைக் கொலை செய்வதற்கும் முன்னாள் புலி உறுப்பினர் மற்றும் இராணுவத்தினர் அமர்த்தப்பட்டுள்ளனர். எமக்கு உயிர் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

பாதாள உலக கோஷ்டிகளுடனும், புலிகளுடனும், இராணுவத்தில் சிலருடனும் தொடர்புகளை வைத்துள்ளனர். அடிப்படைவாத ஒரு பிக்கு குழுவும் இதில் உள்ளடங்கியுள்ளது. ஊழல் மோசடிகள் குற்றங்களை மறைத்து தப்பிக்கவே மஹிந்த அரசியலுக்குள் வந்துள்ளார்.

புலிகளுக்குப் பணம் வழங்கியமை தொடர்பாக விசாரணைகள் நடத்தப்பட்டுவருகின்றன. இது நிரூபிக்கப்பட்ட பின்னர் மஹிந்தவின் பிரதமர் கனவு மட்டுமல்ல, அவரது குடியுரிமையும் பறிபோகும். எதிர்வரும் 18 ஆம் திகதிக்குப் பின்னர் மஹிந்தவின் பல கதைகள் வெளிவரும்.

எதிர்வரும் 17ஆம் திகதி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆட்சியை வழங்க மக்கள் தீர்மானித்து விட்டனர். – என்றார். (ற)

## சந்திரிகாவை அகற்ற வேண்டும்

### ஜனக பண்டார கூறுகின்றார்

கொழும்பு, ஓக.15

சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் இருந்து முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க நீக்கப்பட வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் மாத்தளை மாவட்ட வேட்பாளர் ஜனக பண்டார தென்னக்கோன் வலியுறுத்தியுள்ளார்.

சந்திரிகா சுதந்திரக் கட்சியை வெளிப்படையாக விமர்சித்தமை தொடர்பிலேயே அவர் இந்த வலியுறுத்தலை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர், கட்சியின் செயலாளருக்கு கடிதம் ஒன்றையும் அனுப்பி வைத்துள்ளார்.

மஹிந்த ராஜபக்ஷ போட்டியிடும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புக்கு தாம் ஆதரவில்லை என்று அண்மையில் குறிப்பிட்டிருந்த சந்திரிகா, அதற்கு வாக்களிக்க வேண்டாம் என்றும் வாக்காளர்களுக்கு கோரிக்கை விடுத்திருந்தார்.

அவரது தந்தை ஸ்தாபித்த கட்சியையே சந்திரிகா தூற்றுவதாகவும் தென்னக்கோன் குற்றம் சுமத்தியுள்ளார். (ற)

## ஐ.தே.க. வெற்றியை தடுக்கவே முடியாது

### ஹிருணிகா தெரிவிப்பு



கொழும்பு, ஓக.15

நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி அதிக ஆசனங்களைப் பெற்று பலமான ஓர் அரசை அமைக்கும் எனவும், இதனை எவராலும் தடுத்து நிறுத்த முடியாது என்றும் ஐக்கிய தேசிய கட்சியின் கொழும்பு மாவட்ட வேட்பாளர் ஹிருனிக்கா பிரேமசந்திர தெரிவித்துள்ளார்.

கொலன்னாவையில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பொன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

எனது தந்தையைப் போன்று ஒருபோதும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியை விட்டு செல்லக்கூடாது என்றே தீர்மானித்திருந்தேன். குறுகிய காலத்தில் மஹிந்தவின் சுயரூபம் தெரிய வரவே கடினமான தீர்மானத்தை மேற்கொள்ள நேரிட்டது. இதனால் மைத்திரிக்கு ஆதரவு தெரிவித்து மஹிந்த அரசிலிருந்து வெளியேறினேன்.– என்று தெரிவித்துள்ளார். (ற)

## ஐ.ம.சு.கூ. புலிக்கதை வழமையான ஒன்று

### பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, ஓக.15

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் தமிழீழ விடுதலைப் புலிக்கதை ஒன்றும் புதியதல்ல என பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்த்தன தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஊடகமொன்றுக்கு அளித்த செவ்வியிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

கடந்த பத்து முதல் பதினைந்து ஆண்டுகளாக இவ்வாறு ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு நாட்டில் தமிழீழ விடுதலைப் புலி அச்சுறுத்தல்களை காண்பித்துத் தேர்தல்களை வெற்றியீட்ட முயற்சித்து வருகின்றது என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் மீளவும் தலைதூக்குவார்கள் என்ற சுதந்திரக் கூட்டமைப்பின் குற்றச்சாட்டு வழமையான ஒன்றாக மாற்றமடைந்துள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். எனினும் எமது கட்சி தேசியப் பாதுகாப்புக்கு உச்சளவில் முக்கியத்துவம் அளிக்கும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

சர்வதேச போதைப் பொருள் வர்த்தகருடன் கோத்தபாய ராஜபக்ஷ நட்பு பாராட்டுவதாகவும், கொள்கலன் கணக்கில் போதைப்பொருள் நாட்டுக்குள் கடத்தப்பட்டதாகவும், இவையே தேசியப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தக் கூடியவை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

நாட்டின் புலனாய்வுக் கட்டமைப்பு மிகவும் வலுவானது எனவும் நாட்டில் மீளவும் பயங்கரவாதம் தலைதூக்க சாத்தியங்கள் கிடையாது எனவும் குறிப்பிட்ட அவர், தேசியப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்த எவருக்கும் இடமளிக்கப்பட மாட்டாது என்றும் குறிப்பிட்டுள்ளார். (ற)

## எந்தக் கட்சிக்கும் கிடையாது அறுதிப் பெரும்பான்மை

### விஜித ஹேரத் தெரிவிப்பு

கொழும்பு, ஓக.15

தற்போது காணப்படும் அரசியல் நிலவரங்களின் பிரகாரம் இரண்டு பிரதான கட்சிகளினாலும் அறுதிப் பெரும்பான்மையைப் பெற்று ஆட்சியமைக்க முடியாது என்று தெரிவித்துள்ளார் மக்கள் விடுதலை முன்னணியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத். கட்சியின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

ஐக்கிய தேசிய முன்னணியால் பெரும்பான்மை ஆசனங்களைப் பெற்று ஆட்சியமைக்க முடியாது. அதேபோல ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பாலும் அறுதிப் பெரும்பான்மையுடன் ஆட்சியமைக்க முடியாது. இது தான் உண்மையான அரசியல் நிலவரம். மேடைகளில் மஹிந்தவை பிரதமராக்க வேண்டும் என்று கோசமிட்டவர்கள் இன்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் திருட்டுத்தனமாக தொடர்பு கொண்டு அமைச்சுப் பதவிகளைக் கேட்கின்றனர்.

மஹிந்த ராஜபக்ஷவால் பிரதமராக வரமுடியாது. அதனை ஜனாதிபதி உறுதிபடத் தெரிவித்துள்ளார். அரசமைப்பின் பிரகாரமும் சட்டத்தின் பிரகாரமும் ஜனாதிபதிக்கே பிரதமரை நியமிப்பதற்கான அதிகாரங்கள் உள்ளன. ஆகவே மஹிந்தவின் கனவு நனவாகாது. மக்கள் விடுதலை முன்னணியானது அமையப் போகும் அமைச்சரவையில் அங்கம் வகிக்காது. நாம் பொறுப்பு வாய்ந்த எதிர்க்கட்சியாக செயற்படவே விரும்புகின்றோம். – என்றார். (ற)

## புலிகளைத் தொடர்புபடுத்தி அரசியல் செய்யும் யுகத்துக்கு முற்றுப்புள்ளி

### அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவிப்பு



கொழும்பு, ஓக.15

புலிகளை தொடர்புபடுத்தி அரசியல் செய்யும் யுகத்துக்கு எதிர்வரும் 17ஆம் திகதியோடு முற்றுப்புள்ளி வைக்கப்படும். ஐ.தே.முன்னணி ஆட்சியில் புலிகளுக்கு இடமில்லை. பிரிவினைவாதத்துக்கும் இடமில்லை என உத்தரவாதம் அளித்துள்ளார் அமைச்சர் சம்பிக்க ரணவக்க. யாழ்ப்பாணம் தொடக்கம் மாத்தறை வரையிலான மக்கள், ஐ.தே.முன்னணிக்கே வாக்களிப்பார்கள் என்றும் அவர் நம்பிக்கை வெளியிட்டார்.

கொழும்பில் இடம்பெற்ற நல்லாட்சிக்கான மாநாடொன்றில் உரையாற்றும்போதே அமைச்சர் சம்பிக்க ரணவக்க இவ்வாறு தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

19ஆவது திருத்தத்துக்கு அமைய நான்குவருடங்கள் அதாவது 2020 ஆம் ஆண்டுவரை ஜனாதிபதியால் நாடாளுமன்றத்தை கலைக்க முடியாது. அதேபோன்று நாடாளுமன்றத்தை(த்)ம் கலைப்பதற்கான எந்தத் தீர்மானத்தையும் எடுக்க முடியாது.

எதிர்வரும் 2020ஆம் ஆண்டு வரை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவே ஜனாதிபதியாகப் பதவி வகிப்பார். அவரோடு இணைந்து செயற்படக்கூடிய ஸ்திரமான ஆட்சியை ஐ.தே.முன்னணியினால் மட்டுமே ஏற்படுத்த முடியும்.

இன்று எமக்கு எதிராக பொய்யான குற்றச்சாட்டுக்களும் மக்களை அச்சத்துக்குள்ளாக்கும் பொய்ப் பரப்புரைகளும் முன்னெடுக்கப்படுகின்றன. புலிகள் மீண்டும் தலைதூக்குவதாகவும் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்துவதாகவும் பரப்புரைகள் மேற்கொள்ளப்படுகின்றன. புலிகள் தொடர்பில் எம்மிடம் இரட்டை வேடம் கிடையாது. போர் நடைபெற்ற போதும் போர் முடிந்த பின்னரும் மஹிந்த ராஜபக்ஷ புலிகளுடனும், புலம்பெயர் புலிகளுடனும் தொடர்புகளைப் பேணி வந்தார்.

இது இரகசியமான விடயமல்ல. ஐ.தே.முன்னணி ஒரு போதும் மீண்டும் புலிகள் தலைதூக்க இடமளிக்காது. தேசிய பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. புலிகளை தொடர்புபடுத்தி அரசியல் செய்யும் யுகத்துக்கு எதிர்வரும் 17ஆம் திகதியுடன் முற்றுப்புள்ளி வைக்கப்படும்.– என்றார். (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?



தருபவர்: வித்யா

**மேடம்:** எதிர்பார்ப்பு நிறைவேறத் தாமதம் ஏற்படும். தொழில், வியாபாரத்தில் சுமாரான வருமானம் கிடைக்கும். குடும்பத்தில் ஆடம்பரச் செலவு அதிகரிக்கும். நண்பர்கள் சமயம் அறிந்து உதவி செய்வர்.

**இடபம்:** செயலில் சுறுசுறுப்பும், திறமையும் வெளிப் படும். தொழில், வியாபாரத்தில் புதிய சாதனை படைப் பீர்கள். வீட்டு உபயோகப் பொருள்களை வாங்கி மகிழ் வீர்கள். பணியாளர்கள் பணி விடயமாக வெளியூர் செல்வர்.

**மிதுனம்:** அறிமுகம் இல்லாதவரிடம் அதிகம் பேச வேண்டாம். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சியும், இலாபமும் உண்டாகும். மனைவி வழி உறவினர்களால் உதவி கிடைக்கும்.

**கடகம்:** மதி நுட்பமுடன் செயல்பட்டு வளர்ச்சி காண்பீர்கள். தொழில், வியாபாரத்தில் வருமானம் சீராக இருக்கும். ஆடம்பரப் பொருள் வாங்க வாய்ப்புண்டு. மனைவியின் அன்பைக் கண்டு மனம் மகிழ்வீர்கள்.

**சிங்கம்:** எதிரியும் பாராட்டும் இனிய சூழல் உண் டாகும். தொழில், வியாபாரத்தில் இலாபம் பன்மடங் காகும். பிள்ளைகளின் செயல்பாடு கண்டு மகிழ்வீர்கள். வாகனப் பயணத்தில் விழிப்புடன் இருக்கவும்.

**கன்னி:** கலை உணர்வுடன் செயல்பட்டு வருவீர்கள். தொழில், வியாபாரத்தில் வருமானம் அதிகரிக்கும். பெற்றோரின் தேவை அறிந்து நிறைவேற்றுவீர்கள். பணியாளர்கள் பணிச் சுமையில் இருந்து விடுபடுவர்.

**துலாம்:** பொறுப்புகளைப் பிறரிடம் ஒப்படைக்க வேண்டாம். தொழில், வியாபாரத்தில் மிதமான இலாபம் கிடைக்கும். வெகுநாள் விரும்பிய பொருளை வாங்கு வீர்கள். மாணவர்கள் கண்ணும் கருத்துமாகப் படிப்பர்.

**விருச்சிகம்:** வெளி வட்டாரத் தொடர்பு அதிகரிக்கும். தொழில், வியாபாரத்தில் புதிய உத்தியால் இலாபம் கூடும். வெளியூர் பயணத் திட்டத்தில் திடீர் மாறுதல் ஏற்படும். அரசியல்வாதிகள் மக்கள் செல்வாக்கைப் பெறுவர்.

**தனுசு:** மனக்கவலை தீரும். குடும்பத்தில் அமைதி பிறக் கும். கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றி மகிழ்வீர்கள். தொழிலில் போட்டி மறைந்து இலாபம் அதிகரிக்கும். குடும்பத்தினர் ஆலோசனை வளர்ச்சிக்கு வழிவகுக்கும்.

**மகரம்:** மனதில் நேர்மை எண்ணம் நிறைந்திருக்கும். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும். இஷ்ட தெய்வ வழிபாட்டைச் சிறப்பாக நடத்துவீர்கள். பணியாளர்கள் பாராட்டு, வெகுமதி பெற்று மகிழ்வர்.

**கும்பம்:** பெருந்தன்மையுடன் நடந்து கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில் முயற்சிக்கேற்ப வருமானம் கிடைக்கும். பணியாளர்கள் பொறுப்பைப் பிறரிடம் ஒப்படைப்பது கூடாது. பெண்கள் ஆடம்பர விடயங்களில் ஆர்வம் கொள்வர்.


**மீனம்:** நண்பர்களின் உதவி தக்க சமயத்தில் கிடைக்கும். தொழிலில் விடாமுயற்சியும், உழைப்பும் தேவைப்படும். உடல்நலனுக்காக மருத்துவச் செலவு செய்ய நேரிடும். பணியாளர்கள் பணிவிடயமாக வெளியூர் செல்வர்.



# வாலு படத்தை தடுப்பது உதயநிதி தானா?

வாலு படத்தினால் சிம்பு தற்போது மிகவும் மன உளைச்சலில் உள்ளார். அந்தப் படத்தின் வெளியீடு கடந்த பெப்ரவரி மாதத்திலிருந்து தள்ளிப் போகிறது. இந்த நிலையில் இந்த வாரம் படம் வெளிவரும் எனக் கூறிய நிலையில், உதயநிதி தனது நண்பரான ஆர்யா படத்தை அதே திகதியில் வெளியிடுகிறார். அதனால், வாலு படம் வெளியீட்டினால் தனது படத்தின் வருமானம் பாதிக்கப்படும் என உதயநிதி எண்ணுவதாக ஒரு வதந்தி பரவுகின்றது. ஆனால், இதை உதயநிதி ருவிற்றரில் முற்றிலுமாக மறுத்துள்ளார். நேரம் வரும் போது நானே சொல்கிறேன் என்று சிம்பு கருத்துத் தெரிவித் துள்ளார்.





## பாடாய்படுத்தும் செல்பி மோகம்








## பேஸ் புக்கில் பிடித்தவை...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வடிகட்டிய நீர் வழங்குமாறு பொதுமக்கள் ஆர்ப்பாட்டம்

வவுனியா, ஓக.15

வடிகட்டிய நீர் விற்பனைக்கு வவுனியா நீதிமன்றால் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டமையை அடுத்து கடந்த புதன்கிழமை பொது மக்கள் வவுனியா பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் முன்பாக ஆர்ப்பாட்டமொன்றை முன்னெடுத்துள்ளனர்.

வவுனியாவில் குடிதண்ணீரில் கல்சியம் பெருமளவு படிந்து இருப்பதால் பெருமளவான மக்கள் வடிகட்டி சுத்திகரிப்பு செய்த நீரை ஒரு லீற்றர் 3 ரூபாவுக்கு கொள்வனவு செய்கின்றனர். இந்நிலையில் வடிகட்டிய நீரை விற்பனை செய்யும் கடைகளுக்கு நீதிமன்றத்தால் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

அதையடுத்து வவுனியா பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் முன்பு பெருமளவான மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

குறித்த கடைகளைத் திறந்து தமது நீர்த்தேவையைப் பூர்த்தி செய்வதற்கான அனுமதியைப் பெற்றுத் தருமாறு அவர்கள் வலியுறுத்தினர். அதையடுத்து குறித்த இடத்துக்குவந்தபொலிஸார்அங்கிருந்து பொதுமக்களை அப்புறப்படுத்தினர்.

(ற-402)

# இரவுவேளை ஏழாலையில் இளைஞர்கள் அட்டகாசம்

***அச்சத்தில் பொதுமக்கள்***

வலி.வடக்கு, ஓக.15

ஏழாலை வடக்குப் பகுதியில் இளைஞர்கள் சிலரது அட்டகாசத்தால் பொதுமக்கள் அச்சத்துடன் இரவைக் கழிக்க வேண்டியுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த சில தினங்களாக வீடுகளுக்கு இரவு வேளைகளில் கற்கள் எறியப்படுவதுடன், வாள்கள் போன்ற ஆபத்தான ஆயுதங்களுடன் இளைஞர்கள் பகிரங்கமாக – சர்வ சாதாரணமாக நடமாடி வருகின்றனர் என்றும் பொதுமக்கள் கூறுகின்றனர்.

குறித்த இளைஞர்களால் வீதியில் பயணிப்போர் தாக்கப்பட்டும் உள்ளார்கள் என்றும் மக்கள் தெரிவித்தனர். சுன்னாகம் பொலிஸாருக்கும், கிராம அலுவலர்களுக்கும் இது தொடர்பில் அறிவித்துள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

ஆனாலும் குறித்த இளைஞர்கள் பொலிஸார் வருவதை முற்கூட்டியே அறிந்து அங்கிருந்து தப்பி விடுகின்றனர் என்றும், பின்னர் தமது கைவரிசையைக் காட்டி வருகின்றனர் என்றும் பொதுமக்கள் கவலை வெளியிட்டுள்ளனர். (ற-86)


**60 ஆவது பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

**15.08.2015**

**சோமசுந்தரம் நலநாதன்**



எம் வாழ்க்கையில்
அன்பின் உருவமாய் - எமை
அரவணைக்கும் தந்தையாய்
அன்று முதல் இன்று வரை
அறிவூட்டி எமை வளர்த்தவரே
அகவை அறுபதை அடைந்தாலும்
அனுபவம் பாடம் புகட்டிடுவீர்
கண்டித்து எமை நீர் வளர்த்தாலும்
கண்ணீர் சிந்த விடாமல் தடுத்திடுவீர்
உம் ஆசைகள் பலதைத்
துறந்து எம் ஆசைகள்
அனைத்தையும் தந்திடுவீர்
கற்தூணாய் உமது
பிள்ளைகளை தோளில் சுமந்து தாங்கிடுவீர்
பல்லாண்டு எம்மோடு நீர் வாழவேண்டும்
உம்பாசத்தின் நிழலில் நாம்
வாழ வேண்டும்.

(இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்) 60

மனைவி மற்றும் பிள்ளைகள்
நல்லூர்.


# இன்று முதல் வேட்பாளர்களுக்கு மாவட்டத்துக்கு ஓர் அலுவலகமே

## தேர்தல்கள் ஆணையாளர் அறிவுறுத்து

கொழும்பு, ஓக.15

நாடாளுமன்றத் தேர்தலுக்கான சகலவிதமான தேர்தல் பரப்புரை செயற்பாடுகளும் நேற்று நள்ளிரவுடன் முடிவடைந்துள்ள நிலையில் இன்று காலை 8.30 மணியில் இருந்து வேட்பாளரொருவருக்கு மாவட்டமொன்றில் ஒரேஒரு தேர்தல் அலுவலகத்தை மாத்திரமே வைத்திருக்க முடியும் என்று தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார். மாவட்டமொன்றில் வேட்பாளரொருவருக்கு இடமளிக்கப்பட்டுள்ள அந்த தேர்தல் அலுவலகத்தை அவசியப்படுமெனில் வேட்பாளரொருவர் தமது இல்லத்தில் நடத்த முடியுமெனவும் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

தேர்தல் பரப்புரை செயற்பாடுகள் முடிவுறுத்தப்பட்டுள்ள நிலையில் அனைத்துப் பரப்புரை அலுவலகங்களும் அகற்றப்பட வேண்டும் என்றும், வேட்பாளர்கள் அது தொடர்பாக நடவடிக்கைகளை மேற்கொள்ளாதிருக்கும் பட்சத்தில் அந்த அலுவலகங்களை அகற்றும் நடவடிக்கையில் பொலிஸ்துறை செயற்படும் எனவும் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

பரப்புரைச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படும் காலம் முடிவுற்றதன் பின்னர் வீடு வீடாகச்செல்லல், துண்டுப்பிரசுர விநியோகம், வீடுகளுக்கு வாக்காளர்களை குழுக்களாக வரவழைத்து தேர்தல் மேம்பாட்டுக்காகச் செயற்படுதல் என்பவை முற்றாக தடை செய்யப்பட்டுள்ளது என்றும், அத்தகைய சட்டவிரோத செயற்பாடு களில் ஈடுபடும் நபர்களை கைது செய்து நீதிமன்றங்களில் முன்னிலைப்படுத்துமாறு தாம் பொலிஸ் துறைக்கு பணிப்புரை விடுத்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(ற-22)


**விற்பனைக்கு**

LF- XXXX இசுசு(யப்பான்) Full Body 10½ அடி லொறி விற்பனைக்குண்டு.


**தொடர்பு : 077 623 7956**

**கார் விற்பனைக்கு**

கொம்பனியில் கொள்வனவு செய்து கவனமாக பாவித்த HM இலக்கNISSAN SUPER SALOON N-16 கார்விற்பனைக்கு.

T.P: 077 913 6978


## 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 1940.09.05 | 2014.08.15 |

அமரர்

**சிவசாமி நாகராசா**

ஆண்டு ஒன்று நீண்டாலும் எங்கள் அன்புத் தெய்வமே அப்பா. உங்கள் அன்பின் வாசனை நீங்கவில்லை. தாண்டு போனாலும் தளைத்து வரும் தங்க நினைவுகள் தூங்கவில்லை அப்பா. இன்றும் கதறுகிறோம் அப்பா என்றும் நீங்காத நினைவுகளுடன்...

மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

இல.09, மாட்டன் லேன், யாழ்ப்பாணம்.

## 31 ஆம் நாள் நினைவும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்



| தாயின் மடியில் | இறைவன் அடியில் |
|---|---|
| 10.04.1933 | 16.07.2015 |

அமரர்

**செல்லையா கந்தையா**
**(ஜயாத்துரை-பூநகரி)**

கடந்த 16.07.2015 வியாழக்கிழமை இறைபதமடைந்த செல்லையா கந்தையா அவர்களின் வீடுக்கிருத்திய நிகழ்வு இன்று (15.08.2015) மு.ப. 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளது.

அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அவரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக்கொள்ளவும்.

சாரதா வீதி, சங்கத்தானை, சாவகச்சேரி. 077 555 0081

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

**மருதமுத்து கந்தசாமி**



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 29.05.1926 | 13.08.2015 |

வட்டுக்கோட்டை சங்கரத்தையைப் பிறப்பிடமாகவும் கல்லாரை, மல்லாகத்தை வசிப்பிடமாகவும் தற்போது வவுனியா பண்டாரிக்குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட மருதமுத்து கந்தசாமி 13.08.2015 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மருதமுத்து - லட்சுமிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும் நாகலிங்கம் - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் தனலட்சுமி (லட்சுமி) யின் அன்புக் கணவரும் அகிலேஸ்வரியின் அன்புத் தந்தையும் நமநாதனின் அன்பு மாமனாரும் பிரணவனின் பேரனும், பரமேஸ்வரி (பளை), விக்னேஸ்வரி (மல்லாகம்), காலஞ்சென்ற ராஜேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.08.2015) ஞாயிற்றுக்கிழமை பண்டாரிக்குளம் வவுனியாவில் உள்ள அவரது இல்லத்தில் மு.ப 11.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக தச்சானாங்குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும.

இல.121, பாடசாலை வீதி, பண்டாரிக்குளம், வவுனியா.

தகவல் - குடும்பத்தினர். 077 633 9468

## மரண அறிவித்தல்



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 13 | 13 |
| 08 | 08 |
| 1924 | 2015 |

திருமதி.திரேஸ் (மணி) பட்றிக் சவரிமுத்து
(இளைப்பாறிய ஆசிரியர்)

யாழ்ப்பாணத்தை இருப்பிடமாகவும் வெள்ளவத்தையை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்டிருந்த திருமதி திரேஸ் சவரிமுத்து அவர்கள் 13.08.2015 அன்று இறைபதம் அடைந்தார். அன்னார் திரு.பட்றிக் (சிறில்) சவரிமுத்து அவர்களின் அன்பு மனைவியும், ராஜன், செல்வி, தேவா, சுசிலா ஆகியோரின் அன்புத் தாயாரும் ஷெரீன், தேவன், சந்திரா, ஸ்ரீ ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார். அன்னாரின் பூதவுடல் மஜஸ்திக் மலர்சாலை கல்கிஸ்ஸையில் இன்று அஞ்சலிக்காக வைக்கப்படும். மறுநாள் ஞாயிற்றுக்கிழமை யாழ். White House (பிரதான வீதி) மலர்சாலையில் இறுதி அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, அன்று மாலை 3.30 [illegible]

தகவல் - தேவா
Tel 0112360288


**60 ஆவது பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

**சோமசுந்தரம் நவநாதன்**




இன்று (15.08.2015) சனிக்கிழமை தனது 60 ஆவது பிறந்தநாளை கொண்டாடும் நவநாதன் அவர்களை இறைவன் அருள் பெற்று பல்லாண்டு காலம் நீடூழி வாழ வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர் - சகோதரர்கள், சசி, ரமணன் குடும்பம், ஜெயபாலன் குடும்பம், ஜெகதீஸ்வரி குடும்பம், ரஞ்சா - செல்வநாயகம் குடும்பம்.

நாயன்மார் வீதி, நல்லூர்.


## கண்ணீர் அஞ்சலி



எமது அலுவலகத்தில் ஊழியராக கடமையாற்றும் பரமன்கிராய், பூநகரியை சேர்ந்த **ஆறுமுகம் இராசேந்திரம்** அவர்களின் அன்புத் தாய்

**திருமதி ஆறுமுகம் அமராவதி**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஊழியர்கள்

சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, பூநகரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துயர் பகிர்கின்றோம்

மாகாண விவசாயத் திணைக்களத்தில் உதவி விவசாயப் பணிப்பாளராகக் கடமையாற்றும் எமது சக உத்தியோகத்தர் **திருமதி அஞ்சனா தேவி ஸ்ரீரங்கன்** அவர்களின் பாசமிகு தாயார் **திருமதி இராஜேஸ்வரி பாலசிங்கம்** அவர்கள் 10.08.2015 அன்று இறைபதம் அடைந்தார். அன்னாரது பிரிவால் துயருறும் குடும்பத்தினர், உற்றார், உறவினர், சுற்றம் அயலவருடன் நாமும் எமது துயர் பகிர்கின்றோம்.

**மாகாண விவசாயப் பணிப்பாளர் (வ.மா.)**
**மற்றும் சக உத்தியோகத்தர்கள், ஊழியர்கள்.**

ஓம் விராட் விஸ்வப்பிரம்மனே நமஹ

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 1953 . 04 . 13



மறைவு 2013 . 08 . 07

அமரர் இராசையா சரவணபவன் (பழனி ஆசாரி)

திதி - 15.08.2015

ஆண்டுகள் இரண்டு நகர்ந்து மறைந்திடினும்
ஆறுமோ வெந்துயர் அன்பு அப்பாவே!
மாண்டு விடவில்லை நீங்கள் எம்மனங்களில்
மறையாது என்றும் வாழ்கின்றீர்கள்
எம் உயர்வுக்கு உன்னத வழிகாட்டி - வாழ்வை
அர்ப்பணித்த பாசத்தின் தீபமே!
உங்கள் நினைவு எங்கள்
நெஞ்சங்களில் என்றும் நிலைத்து வாழும்.

சங்குவேலி தெற்கு,
மானிப்பாய்.

குடும்பத்தினர்.

## 31 ஆம் நாள் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

அமரர் ஆசையர்
**பரமமூர்த்தி**



தோற்றம் 13.07.1946 — மறைவு 17.07.2015

கடந்த 17.07.2015 அன்று இறைபதமடைந்த அமரர் ஆசையர் பரமமூர்த்தி அவர்களின் மரணச் செய்தியறிந்து நேரிலும், தொலைபேசியிலும் அனுதாபம் தெரிவித்தோருக்கும், மலர் வளையம், கண்ணீர் அஞ்சலிப் பிரசுரம் வெளியிட்டவர்களுக்கும் எங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு, அன்னாரின் அந்தியேட்டிக்கிரியையும், வீட்டுக்கிருத்திய நிகழ்வும் நாளை (2015.08.16) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் முற்பகல் 10.00 மணிக்கு நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குடத்தனை மேற்கு,
குடத்தனை.

குடும்பத்தினர்.

## வினாடிவினாவில் வலி.தென்மேற்கு முதலிடம்

மானிப்பாய், ஓக.15

யாழ்.மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையே இடம்பெற்ற வினாடிவினாப் போட்டியில் வலி.தென் மேற்குப் பிரதேச செயலகம் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளது. 14 பிரதேச செயலங்களுக்கு இடையே சிரேஷ்ட பிரஜைகளுக்கான வினாடி வினாப் போட்டியில் வலி.தென்மேற்கு பிரதேச செயலகம் 140 புள்ளிகளைப் பெற்று முத லாம் இடத்தையும், வலி.கிழக்கு கோப்பாய் பிரதேச செயலகம் இரண்டாம் இடத்தையும், வலி.வடக்கு தெல்லிப்பழை பிரதேச செயலகம் மூன்றாம் இடத்தையும் பெற்றுக் கொண்டது. குறித்த வினாடிவினாப் போட்டி கைதடியில் உள்ள சமூக சேவைபிரிவில் நடைபெற்றது. மாவட்டமட்டத்தில் முதல்மூன்று இடங்களைப் பெற்ற பிரதேச செயலகங் கள் விரைவில் மாகாண மட்டத்துக்கும், அதன் பின்னர்தேசியமட்டத்துக்கும்செல்லவுள்ளன.(ற-50)

## எட்டாத துயரத்தில் முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 18 . 12 . 1944



மறைவு 27 . 07 . 2014

திதி: பிரதமை

அமரர்
**வள்ளியம்மை தர்மலிங்கம்**

எத்தனையோ என்ன அலை எமைவதைத்து நிழலாடுதம்மா
ஓயாத உன் உடல் உழைப்புப் பாராமல் தாயாக அம்மம்மாவாய்
அப்பம்மாவாய்,பூட்டியாய் தினம் நின்ற அளப்பரிய சேவையே
பாசத்தை எமக்களித்து பார் போற்றும் உத்தமியே நித்தியமும் நீ
இறைவன் நிழலடிக் கீழிருக்க
எந்நாளும் இறைஞ்சி நிற்கின்றோம்.

இல 39/22, சிவப்பிரகாசம் வீதி,
வண்ணார் பண்ணை,
யாழ்ப்பாணம்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் மு.ஜெயப்பிரகாசம்
(விநாயகர் ரேடர்ஸ் - மன்னார்)

ஆருயிர் அப்பா!
விண்ணுலகை நீங்கள் அடைந்து ஓராண்டு
'ஆனாலும் நீங்காது உங்கள் நினைவு உங்கள்
ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்

மனைவி, மகன்மார்கள், மகள்மார்கள்,
பேரன்மார், உறவினர்கள்.
இல. 02, கரப்பன் காடு, வவுனியா.
T.P - 077 539 1215

## ஈரவிழிகளின் கண்ணீர்க்காணிக்கையும் 31 ஆம் நாள் நினைவஞ்சலியும்



## இராசலிங்கம் நந்தகுமார்

அன்னையின் மடியில் 1963.05.10

காலனின் பிடியில் 2015.07.16

வஞ்சனை இல்லா உள்ளம்
யாவர்க்கும் உதவிடும் குணம்
வேசமில்லா நேசங்கலந்த ஞானமே
பாசக்கயிறு வீசிப் பறித்துச் சென்றதேனோ?
ஊருக்கொரு பெருவிருட்சம் உம் நிழலில் நாம் ஆற
கடமை முடிந்ததுவோ? காலைப் பொழுதில்
எம்மைக் கலங்க வைத்த மாயமென்ன?
விழி கசிந்து இங்கே வேதனையில் தவிக்கிறோமே
எங்கள் ஞானமே எமை விட்டு ஏன் பிரிந்தீர்?
காலன் அழைத்தானோ? யாவும்
கனவாகிப் போனதுவே.....

**பழனிகோவிலடி,**
**இருபாலை றோட்,**
**கோண்டாவில் கிழக்கு,**
**கோண்டாவில்.**

**மருமகள்மார், விதுஷா, வினிஷா, கவி, கவி, மது, சரஞ்சினி, தருணிகா மற்றும் குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கீரிமலையில் சிவபூமி மண்டபத்தில் நேற்று வெள்ளிக்கிழமை ஆடி அமாவாசையை முன்னிட்டு அகில இலங்கை இந்து மாமன்றத்தால் மறைந்த இந்து மாமன்றத்தின் உறுப்பினர்களுக்கான நினைவுச் சுடர் ஏற்றி நினைவு கூரப்பட்டதுடன், வழிபாடும் இடம் பெற்றது. நிகழ்வில் இந்து மாமன்றத்தின் உப தலைவர்களான செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு திருமுருகன், சின்னத்துரை தனபாலா, செயலாளர் மு.கதிர்காமநாதன் மற்றும் நல்லை ஆதீன குரு முதல்வர் உட்படப் பலர் கலந்துகொண்டனர். (ந-86)

# முதியோருக்கான ஒகஸ்ட் மாத கொடுப்பனவுகள்

தென்மராட்சி, ஓக.15

தென்மராட்சி பிரதேச 70 வயதுக்கு மேற்பட்ட முதியோர்களுக்கான ஒகஸ்ட் மாதக் கொடுப்பனவான ரூபா 2 ஆயிரம் இன்று தொடக்கம் அஞ்சல் அலுவலகங்களில் பெற்றுக் கொள்ளலாம் என்று அறிவிக்கப் பட்டுள்ளது.

இந்தக் கொடுப்பனவுகளுக்கான வவுச்சர்கள் நேற்று பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவினரால் அஞ் சல் அலுவலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. அடுத்து வரும் 7 வேலை தினங்களுக் குள் கொடுப்பனவைப் பெற்றுக் கொள்ளுமாறும் அறிவிக்கப்பட் டுள்ளது. (ந-9)

# போர் வீரர்கள் நினைவு தின கொண்டாட்டம்

தென்மராட்சி, ஓக.15

போர் வீரர்கள் நினைவு தின மாகாணக் கொண்டாட்டம் விரைவில் நடத்தப்பட வுள்ளது என்றும் அது தொடர்பாக உள் ளூராட்சித் திணைக்களத்தால் ஆங்கிலம் சிங்களம் மொழிகளில் அச்சிடப்பட்ட போர் வீரர் குறிப்பு அட்டைகள் சகல உள்ளூராட்சி மன்றங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவிக் கப்படுகின்றது. அவற்றை விற்பனைசெய்து நிதியை அனுப்பி வைக்குமாறு கோரப் பட்டுள்ளது என்றும் கூறப்பட்டது. (ந-9)

**பராமரிப்பாளர் தேவை**

வீட்டில் தங்கியிருந்து குழந்தையைப் பராமரிக்க ஆள் தேவை.

**தொடர்பு : 077 239 5720**

**வீடு வாடகைக்கு உண்டு**

யாழ்ப்பாணம், மானிப்பாய் வீதியில் 4அறை கொண்ட பெரிய வீடு வாடகைக்கு உண்டு.

**தொடர்பு : 077 446 8463**

**விஷேட விலைக்குறைப்பு**

4R (10 படத்திற்கு மேல்) = 10.00
4R (100 படத்திற்கு மேல்) = 9.00
4R (300 படத்திற்கு மேல்) = 8.00
4R (100 UP INKJET PRINT) = 6.00
12x30 NT ALBUM PRINT = 200.00
12x30 EMBOSSING PRINT = 2000.00
MOORTHY DIGITAL
62/20,STANLY ROAD, JAFFNA.
JAFFNA ROAD, MANIPAY

**மணமக்கள் தேவை**

★ செவ்வாய்க் குற்றமுள்ள சூரியனும் செவ் வாயும் சேர்ந்த, சூரியன் செவ்வாயும் குற்றமில்லாத, டாக்டர்கள், இஞ்சினியர் கள், பட்டதாரிகள், லிகிதர்கள், வர்த்தகர்கள், வெளிநாட்டில் பிரஜா உரிமை பெற்ற மணமக்களும் எம்மிடமுள்ளனர். சூரியன் செவ்வாய் ஜாதக காரர்கள் தொடர்பு கொள்ளவும்.
தொடர்பு - கமலக்கண்ணன் திருமண சேவை
இல, 62 இராமலிங்கம் வீதி, மடவாவடி, பூங்கனிச்சோலையடி.
T.P - 077 607 0862

# மிக குறைந்த அதிகரிப்பே: ஓய்வூதியர்கள் கவலை

தென்மராட்சி, ஓக.15

2006 ஆம் ஆண்டுக்கு முன்னர் ஓய்வு பெற்ற வர்களின் ஓய்வூதியம் மீளாய்வு செய்யப் படும் எனவும் ஓய்வூதியர்களுக்கு 2 ஆயிரத்து 500 ரூபா தொடக்கம் 10 ஆயிரம் ரூபா வரை ஓய்வூதியம் அதிகரிக்கப்படுமெனவும் அறி விக்கப்பட்ட நிலையில் கடந்தவாரம் ஓய்வூதி யம் பெறச் சென்ற பலர் மிகக் குறைந்த ஓய் வூதிய அதிகரிப்பே தமக்கு வழங்கப்பட்டுள் ளது என்று கவலை தெரிவித்தனர்.

ஓய்வூதிய அதிகரிப்பானது குறித்த காலத்துக்கு (2006 ) முன்னர் ஓய்வு பெற்றவர்கள் தற் போது அதே பணியில் கடமையாற்றி ஓய்வு பெறும் ஓய்வூதியர் பெறும் ஓய்வூதிய படி நிலைக்கு சமமான நிலையில் ஓய்வூதியம் பெறக்கூடிய நிலையில் ஓய்வூதிய மீளாய்வு வழங்கப்படு மெனத் தெரிவிக்கப்பட்டிருந்தது. 2007 தொடக்கம் 2014 வரையான காலப் பகு தியில் நான்கு தடவைகள் அரச பணியாளர் களுக்கு சம்பள மீளாய்வு செய்யப்பட்ட போதி லும் ஓய்வூதியர்களுக்கு ஓய்வூதிய மீளாய்வு செய்யப்படவில்லை. நான்கு சம்பள மீளாய்வு களையும் உள்ளடக்கிய நிலையில் ஓய்வூதிய மீளாய்வின் போது பெருமளவு அதிகரிப்பை எதிர்பார்த்த ஓய்வூதியர்கள் 400 ரூபா தொடக்கம் 2 ஆயிரம் ரூபாவுக்கு உட்பட்ட அதிகரிப்பையே பெற்றுள்ளனர் என்று தெரி விக்கப்பட்டது.

அதேவேளை ஓய்வூதிய முரண்பாட்டை நீக்கு வது தொடர்பான எந்தவொரு பட்டியலும் ஓய்வூதியர்களுக்கு வழங்கப்படாததால் ஓய்வூதிய அதிகரிப்பு தொடர்பான முழுமை யான விவரங்களைப் பெறமுடியவில்லை யெனவும், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் ஓய்வூ திய அதிகரிப்பு செய்யப்பட்ட ஓய்வூதியர் களுக்கு வழங்கப்பட்ட ஓய்வூதிய மீளாய்வு தொடர்பான பட்டியலை வழங்கவேண்டு மெனவும் கேட்டுள்ளனர். (ந-9)

# கர்ப்பிணிகளுக்கு உரிய சத்துணவுகள்

## உடுவில் பிரதேச செயலாளர் நடவடிக்கை

வலி.வடக்கு, ஓக.15

உடுவில் பிரதேச செயலாளர் எடுத்த நடவடிக்கை காரணமாக கர்ப்பிணிகளுக்கு வழங்கப்பட்ட தேவை யற்ற பொருள்களை மாற்றி வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கர்ப்பிணிகளுக்கு வழங்கப்பட வேண்டிய சத் துணவுகள் தொடர்பில் அரசால் அறிவுறுத்தப்பட்ட மைக்கு மாறாக சுன்னாகம் பலநோக்கக் கூட்டுறவுச் சங்கத்தால் சோடா, பிஸ்கட் மற்றும் சேபக்ஸ்சல் பொருள்கள் வழங்கப்பட்டு வந்தன. இது தொடர் பாக பிரதேச செயலாளரின் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டதுடன் ஊடகங்களும் இது குறித்துக் கவனம் செலுத்தி இருந்தன.

இந் நிலையில் இது சம்பந்தமாக பிரதேச செய லாளரினால் சங்க பொது முகாமையாளரிடம் விளக்கம்கோரப்பட்டிருந்ததுடன், கிராம அலுவலர் களின் மூலம் உரியவர்களிடம் தகவலும் பெறப் பட்டது. அதையடுத்து உரியவர்களுக்கு குறிப்பிட்ட பொருள்களை மாற்றி வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (ந-86)

# வங்கி நடவடிக்கை குறித்த அறிவிப்பு

தென்மராட்சி, ஓக.15

பொதுத் தேர்தல் தினமான நாளைமறுதினம் திங்கட் கிழமை வங்கி நடவடிக்கை கள் மு.ப 8.30 மணி தொடக் கம் மு.ப. 10.30 மணி வரை இடம்பெறுமென வங்கி முகா மையாளர்களால் அறிவிக் கப்பட்டுள்ளது. (ந-9)

**IELTS Special Class**

12th September யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கும் IELTS பரீட்சைக்கு ஆயத்தப்படுத்தும் விசேட வகுப்புகள்
திங்கள் தொடக்கம் வெள்ளி வரை
காலை 8.30 மணி முதல் 11.30 மணி வரை நடைபெறும்

- 60 மணி நேர வகுப்பு — ஆரம்பம் 19-08-2015
- UNIQUE TECHNIQUES AND BEST TIPS SPECIALLY IN READING
- WE ARE "IELTS REGISTRATION CENTER FOR BRITISH COUNCIL"
- MORE THAN 10 YEARS EXPERIENCE
- VOCABULARY and GRAMMAR
- EXTENDED SPEAKING PRACTICE




THIS IS NOT A CONVENTIONAL IELTS CLASS WHERE YOU DO PAPERS AND TEACHER GIVES ANSWER KEY. BUT IT IS AN INNOVATIVE TRINING PROGRAM WHICH HAS HELPED MY STUDENTS TO TOUCH BANDS 8 & 8.5

**BRITISH COLLEGE OF ENGLISH**
No. 192, Navalar Road, Jaffna. (பெருமாள் கோவிலுக்குச் சமீபமாக)
Tel : 021 222 0384, 0778803887

# அறிவித்தல்

**குடிவரவு குடியகல்வு திணைக்களத்தினால் கடவுச்சீட்டு பெற்றுக்கொள்வதற்கான புகைப்படங்களை அங்கீகரிக்கப்பட்ட புகைப்பட நிலையங்களூடாக அனுப்பி வைக்கும்படி பொதுமக்களுக்கு வேண்டுகோள் விடப்பட்டுள்ளது. கடந்த 10.08.2015 தொடக்கம் கீழ்வரும் 07 புகைப்பட நிலையங்கள் முதல் கட்டமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளன.**

★ www.immigration.gov.lk **எனும் இணையத்தினூடாக மேலதிக விவரங்களை அறியலாம்.**

**குடிவரவு குடியகல்வு திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்ட புகைப்பட நிலையங்களின் பெயர்ப்பட்டியல்**

| | | |
|---|---|---|
| BOBY STUDIO | 33, GURUSOLT ROAD, JAFFNA | 077 314 4952 |
| KUMARAN STUDIO | 124,PALALY ROAD, JAFFNA | 021 222 4833 |
| OLLIYARUVI VIDEO & PHOTO | 91/2.1/1, MAIN STREET, NELLIYADY | 021 226 2850 |
| KUGAN STUDIO | 298,MAIN STREET, POINTPEDRO | 021 226 3218 |
| NIDUSHA STUDIO | MAIN STREET, NELLIYADY, KARAVEDDY | 021 226 2512 |
| KUGAN STUDIO | 019, KANDY ROAD, CHAVAKACHCHERI | 077 3039450 |
| DIGITAL OLLIYARUVI VIDEO & PHOTO | SAMIYAN ARASADY, KARAVEDDY | 021 226 3132 |

**தகவல் - புகைப்பட நிலையங்கள் சார்பில்**

கி.சுரேஸ் (BOBY STUDIO.)

**சரவணா ரெக்ஸ்**
**SARAVANA TEX**
நல்லூரில் மட்டும் தான் சரவணாரெக்ஸ் உள்ளது

நல்லூரில் மட்டும் தான் ஆடித்தள்ளுபடி ஆகஸ்ட் 18 வரை.




**நீங்கள் ஒரு சாறி வாங்கும் பணத்துக்கு இரண்டு சாறி வாங்கலாம்**

வேறெங்கும் கிளைகள் இல்லை.

526, 529, பருத்தித்துறை வீதி, நல்லூர். [சிவன்கோயில் அருகாமை] யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அல்லாரையில் காணி படையினரால் கொள்வனவு

தென்மராட்சி, ஓக.15
சாவகச்சேரி அல்லாரை தம்புத் தோட்டம் அமைந்துள்ள காணி படையினரால் கொள்வனவு செய்யப்படவுள்ளது என்றும் அதற்குரிய கொடுப்பனவு பாதுகாப்பு அமைச்சால் பிரதேச செயலகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.
குறித்த காணியில் தற்போது 52 ஆவது படைப்பிரிவு முகாம் அமைக்கப்பட்டுள்ளது. காணி உரிமையாளர் குறித்த காணியை மீளப் பெற முனைந்தபோது ஏற்பட்ட சிக்கல்களை அடுத்து அதனை விற்பதற்குத் தீர்மானித்தார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.
அதையடுத்து குறித்த காணி 24 மில்லியன் ரூபாவுக்கு பிரதேச செயலகத்தின் ஊடாகக் கொள்வனவு செய்யப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (ற-9)

## சட்டவிரோத மீன்பிடி: 18 மீனவர்கள் கைது

திருகோணமலை, ஓக.15
திருகோணமலை கடற்பரப்பில் சட்ட விரோதமான முறையில் மீன்பிடியில் ஈடுபட்ட 18 பேர் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இரவு கைது செய்யப்பட்டுள்ளனர் என்று துறைமுகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
ஆழ்கடல் மீன்பிடியில் ஈடுபட்டு வரும் கிண்ணியா மற்றும் உப்புவெளி பகுதியைச் சேர்ந்த மீனவர்கள் சட்ட விரோத மீன்பிடி உபகரணங்களைக் கொண்டு மீன்பிடியில் ஈடுபடுகின்றனர் என்று பொலிஸாருக்குக் கிடைத்த தகவல்களை அடுத்தே இந்தக் கைது நடவடிக்கை இடம்பெற்றுள்ளது.
குறித்த மீனவர்களின் வள்ளங்களைச் சோதனை செய்தபோது சட்டவிரோத மீன்பிடி உபகரணங்கள் சிக்கின என்றும் அதையடுத்து 18 மீனவர்கள் கைது செய்யப்பட்டதுடன் 3 வள்ளங்கள் கைப்பற்றப்பட்டன என்றும் துறைமுகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ற)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



அமரர்
**இராயப்பு அல்பிறட்**
(ஓய்வுபெற்ற ஊழியரும் மேலாளரும் நீர்ப்பாசனத் திணைக்களம்)

தோற்றம்
07.07.1957

மறைவு
16.07.2015

" இன்றே நீ என்னோடு வான் வீட்டில் இருப்பாயென்று நான் உனக்குச் சொல்கிறேன்" (லூக் 24.43)

அன்புக்கும் பண்புக்கும் பாசத்துக்கும் அடித்தளமாய் இருந்து நற்பண்புகளை எமக்குக் கற்றுத்தந்து எம்மை வாழ வைத்த அன்புத் தந்தையே எமைவிட்டு ஒரு நொடியில் பிரிந்து சென்ற தென்ன உம் பிரிவைத் தாங்க முடியாமல் கண்ணீருடன் வாடுகின்றோம் மீண்டும் நீங்கள் மறுபிறப்பில் எம்மோடு இணைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்........

அன்னாரின் இறப்புச் செய்தியைக் கேட்டு நேரிலும்,தொலைபேசியிலும் இணைந்த அனைவருக்கும் நன்றிகளுடன் அன்னாரின் இரங்கல் செய்திகளை வெளியிட்ட அனைவருக்கும் குடும்பத்தின் சார்பில் நன்றிகளைத் தெரிவிக்கின்றோம். இந்த அறிவித்தலை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

சரவணை மேற்கு,
2ஆம் வட்டாரம்,
சின்னமடு,

குடும்பத்தினர்.
077 071 2437

## நல்லூர் சுற்றாடலில் அலங்காரப் பந்தல் அமைக்கும் பணிகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஓக.15
வரலாற்று சிறப்பு மிக்க நல்லூர் கந்தசுவாமி கோயிலின் வருடாந்த பெருந்திருவிழாவை முன்னிட்டு ஆலயச் சுற்றாடல் வீதிகளில் அலங்காரப் பந்தல்கள் அமைக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.
ஆலயத்துக்கு முன்பாக பருத்தித்துறை வீதி, ஆலய பின்புறமான கோயில் வீதி, அரசடி வீதி போன்ற பகுதிகளில் பந்தல்கள் அமைக்கும் பணிகள் இடம் பெற்று வருகின்றன. அதனை விட குடாநாட்டின் ஏனைய பிரதேசங்களிலும் அடியார்கள் வசதி கருதி தண்ணீர்ப் பந்தல்களும் அமைக்கப்படவுள்ளன. (ற-17)

## கிராமங்களை மையமாக கொண்டு அபிவிருத்தி திட்டம்

மானிப்பாய், ஓக.15
கிராமங்களை மையமாகக் கொண்டு மக்கள் பங்கேற்பு அபிவிருத்தித் திட்டம் 2016ஆம் ஆண்டு தயாரிக்கப்படவுள்ளது என்றும் அதற்கான நடவடிக்கைகளை வடக்கு மாகாண முதலமைச்சர் செயலகம் மேற்கொண்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.
வடக்கு மாகாண சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கு அமையவே கிராமங்களுக்கான மக்கள் பங்கேற்புத் திட்டங்கள் தயாரிக்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.
கடந்த காலங்களில் ஐந்து கிராமங்களை மையப்படுத்தி கொத்தணி அடிப்படையில் மக்கள் பங்கேற்புத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டன. தற்போது 2014 இல் தயாரிக்கப்பட்ட ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவுக்குமான மக்கள் பங்கேற்பு அபிவிருத்தித் திட்டம் தயாரிக்கப்பட்டு உள்ளது.
மேற்படி கொத்தணி மற்றும் கிராம அலுவலர் பிரிவுக்கான மக்கள் பங்கேற்புத் திட்டங்களைவிட ஒரு கிராமத்துக்கான அதாவது ஒரு கிராமத்தின் பெயரை உடைய பிரதேசத்துக்கு மக்கள் பங்கேற்பு அபிவிருத்தித் திட்டத்தை முன்மொழிந்து அபிவிருத்திக்கு உதவுமாறு வடமாகாண சபை பரிந்துரை செய்துள்ளது. (ற-50)

## வட மாகாண பாலங்களின் விவரங்கள் சேகரிப்பு

மானிப்பாய், ஓக.15
வடக்கு மாகாணத்தில் உள்ளூராட்சி சபைகளுக்கு உட்பட்ட வீதிகளில் அமைந்துள்ள பாலங்களின் விவரங்கள் வடமாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரால் கோரப்பட்டுள்ளன. சகல நகரசபைகள், பிரதேச சபைகளிடம் இருந்தும் இந்த விவரங்கள் கோரப்பட்டுள்ளன.
கிராமிய பாலங்களின் நீளம், அகலம், அமைந்துள்ள இடம், வரைபடம் போன்ற விவரங்களுடன் அவற்றை அனுப்பி வைக்கு மாறும் கோரப்பட்டுள்ளது.
இதில் முழுமையாகப் பாதிக்கப்பட்டு போக்குவரத்துச் செய்யமுடியாத அளவுக்கு சேதமுற்ற பாலங்கள் 2016 ஆம் ஆண்டு முதல் மீள்புனரமைப்புச் செய்யப்படவுள்ளன. மேற்படி விவரங்கள் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம் ஊடாக தொகுக்கப்பட்டுள்ளன என உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார். (ற-50)

## மரண அறிவித்தல்

### திருமதி சர்வாஜினி சுரேஸ்

(ஆசிரியை - வேலணை மேற்கு நடராஜ வித்தியாலயம், முன்னாள் ஆசிரியை -யூனியன் கல்லூரி, இணுவில் மத்திய கல்லூரி, ஏழாலை மேற்கு சைவசன்மார்க்க வித்தியாலயம்)



ஏழாலை வடக்கைப் பிறப்பிடமாகவும் ஏழாலை மேற்கு, சிலும்பிலாட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சர்வாஜினி சுரேஸ் 12.08.2015 புதன் கிழமை காலமானார்.
அன்னார் ஆறுப்பிள்ளை - மகேஸ்வரி (அளவெட்டி) தம்பதியினரின் ஏக புத்திரியும் சுரேஸின் அன்பு மனைவியும் கேதினி, கீர்த்தனி ஆகியோரின் பாசமிகு தாயாரும்,சத்தியசிவபாலன் -காலஞ்சென்ற சித்திராதேவி(சூராவத்தை) தம்பதியரின் அன்பு மருமகளும் தயாபரன் (விரிவுரையாளர் வவுனியா வளாகம்), சுதாபரன் (விரிவுரையாளர்- நோர்வே) ஆகியோரின் அன்புச் சகோதரியும்,மலர்விழி, பகீரதி ஆகியோரின் மைத்துனியும் கேசிகன், அபினேஷ் ஆகியோரின் பாசமிகு மாமியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை(16.08.2015) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு சிலும்பிலாட்டி ஏழாலை மேற்கில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஏழாலை உசத்தியோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சிலும்பிலாட்டி,ஏழாலை மேற்கு, சுன்னாகம்.
T.P: 021 205 9563

தகவல்:
குடும்பத்தினர்.

## அந்தியேட்டிக் கிரியைகளும் நன்றி நவிலலும்

**இளையதம்பி சுப்பிரமணியம்**
(ஓய்வுபெற்ற அதிபர் - கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரி)



உதயம்
08.01.1940

அஸ்தமனம்
27.07.2015

கடந்த 27.07.2015 இல் மாவைக்கந்தன கழலடி சேர்ந்த எமது குடும்பத்தலைவரது அந்தியேட்டிக்கிரியைகள் 21 ஆம் நாளான இன்று (15.08.2015) சனிக்கிழமை கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெறவுள்ளன.
அன்னாரது மரணச்செய்தி அறிந்து நேரில் கலந்து கொண்டவர்களுக்கும் மற்றும் பல வழிகளில் உதவியவர்களுக்கும், தொலைபேசியில் அனுதாபம் தெரிவித்தோருக்கும், அஞ்சலி உரை நிகழ்த்தியோருக்கும், அஞ்சலிப்பிரசுரம் வெளியிட்டோருக்கும், மலர்வளையம் வைத்து அஞ்சலித்த நல்லூர் ப.நோ.கூ சங்கத்தினருக்கும், பத்திரிகை மூலம் கண்ணீர் அஞ்சலி வெளியிட்ட யாழ்ப்பாணம் மாவட்ட கூட்டுறவுச்சபை ஆகியோருக்கும், ஏனையோருக்கும் எங்கள் இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

22, பலாலி வீதி,
திருநெல்வேலி.

குடும்பத்தினர்.

## ஓய்வூதிய அதிகரிப்பு விவரங்கள் பிரதேச செயலகங்களில்

தென்மராட்சி, ஓக.15
ஓய்வூதியம் பெறுவோருக்கு மேற்கொள்ளப்பட்ட ஓய்வூதிய அதிகரிப்புத் தொடர் பான அறிக்கைகள் அந்தந்தப் பிரதேச செயலக ஓய்வூதியக் கிளைகளில் வழங்கப்பட்டு வருகின்றன.
2006ஆம் ஆண்டுக்கு முன்னர் ஓய்வூதியம் பெற்றவர்களுக்கான ஓய்வூதிய அதிகரிப்பு ஓகஸ்ட் மாத ஓய்வூதியத்துடன் வழங்கப்பட்டது. ஓய்வூதியம் அதிகரிக்கப்பட்டமை தொடர்பான விவரங்கள் கிடைக்காமையால் தமக்குக் கிடைக்க வேண்டிய ஓய்வூதிய விவரத்தை அறிய முடியாது ஓய்வூதியர்கள் சிரமங்களை எதிர்கொண்டனர்.
அதையடுத்து ஓய்வூதிய அதிகரிப்புப் பெற்றவர்களுக்கான விவரங்கள் அடங்கிய பட்டியலை அவர்கள் அந்தந்தப் பிரதேச செயலங்களில் பெற்றுக்கொள்வதற்கு ஓய்வூதியத் திணைக்களம் நடவடிக்கை மேற்கொண்டுள் ளது. (ற-9)

## மரண அறிவித்தல்

### திருமதி கமலாம்பிகை கணேசமூர்த்தி



பிறப்பு
17.10.1937

இறப்பு
12.08.2015

யாழ்ப்பாணம் , துன்னாலை வடக்கைப் பிறப்பிடமாகவும் கொழும்பு, சுதுமலை மத்தியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கமலாம்பிகை கணேசமூர்த்தி 12.08.2015 புதன்கிழமை சிவபதம் அடைந்தார்.
அன்னார் கந்தையா கணேசமூர்த்தி (ஓய்வுநிலை யாழ் மாவட்ட முகாமையாளர் - இலங்கை வங்கி) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான உலகநாதர் - இலட்சுமிப்பிள்ளை தம்பதியரின் கனிஷ்ட புத்திரியும் காலஞ்சென்றவர்களான கந்தையா - இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் சிவகுமார் (கனடா - Project Manager T.D, Canada) , பாலகுமார் (நியூசிலாந்து - Engineer) ஆகியோரின் அன்புத் தாயாரும் அனித்தா(கனடா), தேனுகா(நியூசிலாந்து) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் அபிலாஷ்(கனடா), அபிசேக் (கனடா), அபிதா(நியூசிலாந்து) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான பத்மாசனி, ஞானாம்பிகை, அழகு இரத்தினம் மற்றும் உலகேஸ்வரி(ஓய்வுபெற்ற ஆசிரியை), பாலசுப்பிரமணியம் (இளைப்பாறிய நிலஅளவையாளர்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான கனகசபை, நடேசபிள்ளை, இராசையா மற்றும் மதனகாமேஸ்வரி, காலஞ்சென்றவர்களான நடராசா(சிங்கப்பூர்), தியாகராசா, சிவராசா மற்றும் சரஸ்வதி, மகேஸ்வரி (மலேசியா), சாம்பமூர்த்தி(ஓய்வுபெற்ற ஆசிரியர் -புத்தூர்), சுந்தரமூர்த்தி (பிரான்ஸ்), Dr ஈஸ்வரி, சிவஞானதேவி ஆகியோரின் பாசமுள்ள மைத்துனியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (16.08.2015) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு சுதுமலை மத்தியிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தாவடி இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சுதுமலைறோட், மானிப்பாய்.
0212255644,077 606 8656

தகவல்-கணவர்
க.கணேசமூர்த்தி

## மரண அறிவித்தல்

### திருமதி புவனேஸ்வரி சீவகாருணியம்



கொக்குவில், பிரம்படியைப் பிறப்பிடமாகவும் இல.126, அரசடி வீதி, கந்தர்மடத்தை நிரந்தர வதிவிடமாகவும் கொண்ட திருமதி புவனேஸ்வரி சீவகாருணியம் நேற்று (14.08.2015) வெள்ளிக் கிழமை காலை காலமானார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் -ஆச்சிப்பிள்ளை தம்பதியரின் ஏகபுத்திரியும் சீவகாருணியத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம், செல்லையா, சிவசம்பு, ஐயாத்துரை, நடராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும் சீ.சிவநேசன் (அதிபர் -யா/அரியாலை ஸ்ரீபார்வதி வித்தியாசாலை) , திருமதி பா. பூங்கோதை (நூலகர் - நல்லூர் பிரதேச சபை) ஆகியோரின் அன்புத் தாயாரும் பாலபாஸ்கரன், நிர்மலராணி ஆகியோரின் மாமியாரும் நிதர்சன் (ஆசிரியர் -வ/ஓமந்தை மத்திய கல்லூரி), நிரஜா, லவன்சன், மதனீதா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.08.2015) சனிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொக்குவில் இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.126, அரசடி வீதி,
(இந்து மகளிர் கல்லூரி முன்பாக)
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

தகவல் - குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அன்ரோயிட் சாதனங்களில் அங்ரி பேர்ட்ஸ் (Angry Birds)

Angry Birds கேமின் இரண்டாம் பாகம் வெளியிடப்படவுள்ளதாக அண்மையில் தகவல் வெளியாகியிருந்தமை பலரும் அறிந்ததொன்றே. இந்த நிலையில் தற்போது அனைத்து அன்ரோயிட் சாதனங்களிலும் பயன்படுத்தக்கூடிய வகையில் Angry Birds 2 வெளியிடப்பட்டுள்ளது. இதே வேளை iOS சாதனங்களுக் கான பதிப்பு இன்னும் ஓரிரு தினங் களுக்குள் அறிமுகம் செய்யப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. Angry Birds கேம் முதன் முறை யாக 2009 ஆம் ஆண்டில் அறிமுகம் செய்யப்பட்டிருந்த நிலையில், புதிய பதிப்பு ஏறத்தாழ 6 வருடங்களுக்கு பின்னர் தற்போது வெளியிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# புதிய பரிணாமத்தில் Google Translate

கூகுள் நிறுவனத்தினால் வழங்கப்பட்டு வரும் பல்வேறு சேவைகளுள் Google Translate சேவையும் ஒன்றாகும். பயனுள்ள இந்தச் சேவையை மொபைல் சாத னங் களில் பெற்றுக்கொள்வதற்காக அப்பிளிக்கேஷன்களும் உருவாக்கப்பட்டுள்ளன.


27 வரையான மொழிகளைப் பயன்படுத்தக்கூடிய வசதியை உள்ளடக்கிய தாக புதிய பதிப்பு ஒன்று தற்போது வெளியிடப்பட்டுள்ளது. முன்னர் இந்த அப்பிளிக்கேஷனில் 7 மொழிகளை பயன்படுத்தும் வசதியே உள்ளடக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. கூகுளின் அன்ரோயிட், அப்பிளின் iOS சாதனங்களுக்காக வெளியிடப்பட்டுள்ள இந்த அப்பிளிக்கேஷனில் English, French, German, Italian, Portuguese, Russian, Spanish, Bulgarian, Catalan, Croatian, Czech, Danish, Dutch, Filipino, Finnish, Hungarian, Indonesian, Lithuanian, Norwegian, Polish, Romanian, Slovak, Swedish, Turkish மற்றும் Ukrainian ஆகிய மொழிகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.



# நீரினால் பாதிக்கப்படாத அதிநவீன ஸ்மார்ட் கைபேசி

ஸ்மார்ட் கைபேசிகளில் நாளுக்கு நாள் பல்வேறு புதிய தொழில்நுட்பங்கள் உட்புகுத்தப்பட்டு வருகின்றன. இவற்றின் தொடர்ச்சியாக Motorola நிறுவனம் நீர் உட்புகாத ஸ்மார்ட் கைபேசியை வடிவமைத்துள்ளது. Moto G எனும் இந்தக் கைபேசி 5 அங்குல அளவுடையதும், 1280 X 720 Pixel Resolution உடையதுமான தொடுதிரையையும், 1.4GHz வேகத்தில் செயல்படக் கூடிய Quad Core Snapdragon 410 Processor ஐயும் கொண்டுள்ளது.

இரண்டு பதிப்புக்களாக வெளிவரும் இந்தக் கைபேசியில் 16GB சேமிப்புக் கொள்ளளவினைக் கொண்டதன் பிரதான நினைவகமாக 2GB RAM cD, 8 GB சேமிப்பு கொள்ளளவினைக் கொண்ட கைபேசியின் பிரதான நினைவகம் 1GB RAM cD ஆக காணப்படுகின்றது. இவை தவிர 13 மெகாபிக்சல்களை உடைய பிரதான கமெரா, 5 மெகாபிக்சல்களை உடைய வீடியோ அழைப்புக்களை ஏற்படுத்துவதற்கான கமரா, 2470 mAh என்பனவும் உள்ளடக்கப்பட்டுள்ளன.



ஓம் ஸ்ரீ ராமஜெயம்



பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம்
மன்மத வருஷம் 2015 ஆம் ஆண்டு ஆவணி மாத
திவ்ய மஹோற்சவ விஞ்ஞாபனம்

கொடியேற்றம் 20.08.2015 வியாழக்கிழமை

சந்தன மரங்களகில் சாதிபல ஓதிய தருக்கள் நிறைய
சுந்தர நெடுங்கடல் வளைந்திட முகுந்தனுறைதொல்பதியதாம்
பந்தணி முலைச்சியர்கள் பாடிநடமாட இமையோர்கள் பரவ
இந்திரன் வணங்கிட இருப்பது பொன்னாலையம் எனும்பதியதே

தேர்த்திருவிழா 05.09.2015 சனிக்கிழமை

விழாக்கால சிறப்பு நிகழ்வுகள்

20.08.2015 வியாழக்கிழமை மு.ப. 11.30 மணியளவில் கொடியேற்றம்.
28.08.2015 வெள்ளிக்கிழமை காலை 7.00 முதல் வரலட்சுமி விரத பூசை வழிபாடு, நூல் கட்டுதல், பிரசாதம் வழங்குதல்.
30.08.2015 ஞாயிற்றுக்கிழமை 8.45 - 9.15 வரையுள்ள சுபவேளையில் சித்திரத்தேர் வெள்ளோட்டம்.
05.09.2015 சனிக்கிழமை தேர் உற்சவம்
முற்பகல் 10.00 மணிக்கு வசந்த மண்டப பூஜை.
நண்பகல் 12.00 மணிக்கு தேரில் ஆரோகணம்.
நள்ளிரவு 12.00 மணிக்கு ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தி உற்சவம்.
06.09.2015 ஞாயிற்றுக்கிழமை தீர்த்தோற்சவம் காலை 9.00 மணிக்கு திருவடி நிலை புறப்படல்.
07.09.2015 திங்கட்கிழமை திருகல்யாணம் இரவு 8.00 மணி.

தினமும் காலை 8.00 மணிக்கும், மாலை 5.00 மணிக்கும் உற்சவம் ஆரம்பமாகும் (விஷேட உற்சவங்களில் மாற்றம் ஏற்படும்) தினமும் மாகேஸ்வர பூஜை நடைபெறும். உற்சவ காலத்தில் தினமும் இரவு 7.00 மணிக்கு விஷேட கலைநிகழ்வும், சொற்பொழிவும் இடம்பெறும். அடியார்கள் தங்களால் இயன்ற பூஜைத் திரவியங்களை உபகரித்து எம்பெருமானின் திருப்பணிக்கு நிதியினை வழங்கியும் ஸ்ரீ வரதனின் பெரும் கருணைக்கு பாத்திரதாரி ஆவீர்களாக.

வரலட்சுமி விரத பூசையில் பங்குகொள்ளும் பக்தர்களின் வசதி கருதி முற்பதிவு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. 16.08.2015, 20.08.2015 தொடக்கம் 27.08.2015 வரையில் ஆலயத்தில் முற்பதிவு செய்து பற்றுச்சீட்டினைப் பெற்றுக் கொள்ளலாம்.

அனைவரும் வருக ஸ்ரீ வரதராஜனின் அருள் பெறுக
கோவிந்த நாம சங்கீர்த்தனம் - கோவிந்தா ! கோவிந்தா ! கோவிந்தா !

பொன்னாலை, சுழிபுரம்.

வரதனின் அருள்பணியில்
தேவஸ்தான பரிபாலன சபை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ராமேஸ்வரத்தில் ஆடி அமாவாசை

இராமேஸ்வரம், ஓக, 15

ஆடி அமாவாசையை முன்னிட்டு இராமேஸ்வரம் அக்னி தீர்த்தக் கடல், முக்கடல் சங்கமிக்கும் கன்னியா குமரி கடல் உள்ளிட்ட நீர்நிலைகளில் நேற்று இலட்சக்கணக்கான பக்தர்கள் புனித நீராடி தமது முன்னோர்களுக்கு தர்ப்பணம் செய்தனர்.

கோயில் சுவாமி சன்னதியில் 5 மணிக்கு ஸ்படிகலிங்க பூஜை முடிந்து வழக்கமான காலை பூஜைகளை தொடர்ந்து 6 மணிக்கு ராமர், சீதா, லட்சுமணருடன் தங்க கருட வாகனத்தில் அக்னிதீர்த்தக் கடற்கரைக்கு எழுந்தருளி பக்தர்களுக்கு தீர்த்தம் கொடுத்து அருள்பாலித்தார். அக்னிதீர்த்தத்தில் நீராடிய பக்தர்கள் கோயில் நான்குரத வீதியில் நீண்ட வரிசையில் பல மணிநேரம் காத்திருந்து கோயிலுக்குள் உள்ள தீர்த்த கிணறுகளில் தீர்த்தமாடி ராமநாதசுவாமி பர்வதவர்த்தினி அம்பாளை தரிசித்தனர்.

இதேவேளை முக்கடலும் சங்கமிக்கும் கன்னியாகுமரியிலும் நேற்று பலி கர்ம பூஜைக்காக இலட்சக் கணக்கான பக்தர்கள் குவிந்தனர். குமரி மாவட்டம் மட்டுமின்றி வெளி மாவட்டங்களில் இருந்தும் பக்தர்கள் வந்தனர்.

அவர்கள் திரிவேணி சங்கமம், சங்கிலித்துறை ஆகிய இடங்களில் புனித நீராடினர். ஆடி அமாவாசையையொட்டி குமரி மாவட்டத்துக்கு உள்ளூர் விடுமுறையும் வழங்கப்பட்டிருந்தது.

இதேபோன்று திருச்சி மாவட்டம் சிறீரங்கம் அம்மாமண்டபம் படித்துறையில் முன்னோர்களுக்கு தர்ப்பணம் கொடுக்க மக்கள் திரண்டனர். தஞ்சை, நாகை மாவட்டம் வேதாரண்யம், கோடியக்கரை, பூம்புகார் போன்ற இடங்களிலும் மக்கள் முன்னோர்களுக்கு தர்ப்பணம் கொடுத்தனர். (த-10)

# வெடித்தன சீனாவில் ரசாயனக் கிடங்குகள்

## 50 பேர் உயிரிழப்பு





பீஜிங், ஓக, 15

சீனாவின் துறைமுக நகரான டியாஞ்ஜினில் ரசாயனப் பொருள்கள் தேக்கி வைக்கப்பட்டிருந்த இரண்டு கிடங்குகளில் நடந்த வெடிப்புச் சம்பவங்களில் சுமார் 50 பேர் உயிரிழந்துள்ளனர். அத்துடன் 700 இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர்.

சம்பவத்தில் உயிரிழந்தவர்களில் 12 பேர் தீயணைப்பு வீரர்கள் எனத் தெரியவந்துள்ளது. மேலும் காயமடைந்தவர்களில் 66 பேரது நிலைமை கவலைக்கிடமாக இருப்பதால் உயிரிழப்பு எண்ணிக்கை அதிகரிக்கலாம் என அஞ்சப்படுகிறது. சம்பவத்தையடுத்து சுமார் 10 ஆயிரத்துக்கும் அதிகமானோர் குறித்த சுற்று வட்டாரப் பகுதி யிலிருந்து வெளியேற்றப்பட்டுள்ளனர்.

சீனாவில் உள்ள துறைமுக நகரமான டியாஞ்ஜின் பகுதியில் உள்ள ரூஹையில் தனியார் கிடங்கில் ஆபத்தான பொருள்கள் சேமித்து வைக்கப்பட்டிருந்தன. இந்தக் கிடங்கில் சிறிய தீ விபத்தும் அதற்கு பின்னர் வெடிகுண்டு வெடித்தாற் போல மிகப் பெரிய சப்தமும் எழுந்ததாக அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.

அடுத்தடுத்து 2 முறை ஏற்பட்ட வெடிப்புச் சம்பவங்களில் அருகே உள்ள பல கம்பெனிகளுக்கும் தீ வேகமாக பரவத் தொடங்கியது. இதனால் நகரமே தீயால் சூழ்ந்து மோசமான சூழலில் காணப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

உடனடியாக மீட்பு நடவடிக்கை எடுக்கப்பட்ட நிலையிலும் அதனை வீரர்களால் கட்டுப்படுத்த முடியவில்லை. ஆபத்தான ரசாயனப் பொருள்களை தண்ணீர் கொண்டு அணைத்தால் தீ வேகமாகப் பரவும் என்ற காரணத்தால் மீட்புப் பணி சற்றுத் தாமதமானது. அதற்குள் தீ சுற்றுவட்டாரப் பகுதிகளுக்குப் பரவியது.

பாதிக்கப்பட்ட மக்கள் தங்குவதற்காக தனியார் விடுதிகள் திறந்து விடப்பட்டுள்ளன. இந்த மோசமான சம்பவத்துக்குக் காரணம் இதுவரையில் தெரியவரவில்லை. வெடிப்புச் சம்பவ பகுதியில் இருந்து தெறித்துச் சித றிய நெருப்புப் பிழப்பு ஒன்று அருகில் இருந்த ரெனால்ட் கார் தயாரிப்பு மையத்தின் பார்க்கிங் பகுதியில் விழுந்தது. இதில் அங்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஆயிரம் கார்கள் எரிந்து நாசமாகியுள்ளன. (த-10)

# நைஜீரிய போகோ ஹராமுக்கு புதிய தலைவர் மஹமத் தாவுத்

அபுஜா, ஓக, 15



நைஜீரியாவின் போகோ ஹராம் ஆயுதக் குழுவுக்குப் புதிய தலைவர் ஒருவர் நியமிக்கப்பட்டிருப்பதாக சாட் நாட்டு ஜனாதிபதி இத்ரிஸ் தபரி குறிப்பிட்டுள்ளார்.

அந்த குழுவின் தலைவராக இருந்த அபூபக்கர் ஷெகாவோவுக்கு என்ன ஆனது என்ற விவரம் வெளியிடப்படாத நிலையில் அவருக்கு பதில் மஹமத் தாவுத் புதிய தலைவராக நியமிக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது. புதிய தலைவர் பற்றி முன்னர் எந்த விவரமும் அறியப்படவில்லை.

போகோ ஹராமின் அண்மைக்கால வீடியோவில் ஜகாவோ தோன்றாத நிலையில் அவர் கொல்லப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகம் வலுத்திருந்தது.

போகோ ஹராமுக்கு எதிரான போரில் சாட் நாட்டு படைகளும் பங்கேற்றிருக்கும் நிலையில், அந்தக் குழுவின் புதிய தலைவரான தாவுத் பேச்சுவார்த்தைக்கு தயாராக இருக்கிறார் என்று ஜனாதிபதி தபரி குறிப்பிட்டுள்ளார். கடந்த 2009 ஆம் ஆண்டு நைஜீரிய பொலிஸ் தடுப்புக்காவலில்வைத்து பொகோ ஹராமின் நிறுவுனர் முஹமது யூசும் கொல்லப்பட்டதை அடுத்தே ஷெகாவோ அந்த அமைப்பின் தலைவரானார். அவரது தலைமையின் கீழ் பொகோ ஹராம் மேலும் கடும்போக்கான நிலைப்பாட்டை பெற்றதோடு கொலைகளும் அதிகரித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (த-10)

# குண்டு வெடிப்புச் சம்பவம்; 7 தீவிரவாதிகளுக்குத் தூக்கு

இஸ்லாமாபாத், ஓக, 15



பாகிஸ்தானின் வடமேற்கு மாகாணத்தில் உள்ள பெஷாவரில் கடந்த வருடம் இடம்பெற்ற பாடசாலை மீதான தாக்குதல் சம்பவத்தில் தொடர்புபட்ட ஆறு தீவிரவாதிகளுக்கு தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. அத்துடன் ஏழாவது நபருக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறது. இந்தத் தாக்குதல் சம்பவத்தில் 132 குழந்தைகள் உட்பட 140 பேர் கொல்லப்பட்டனர்.

கடந்த ஆண்டு டிசெம்பரில் தலிபான்கள் நடத்திய இந்தத் தாக்குதல் நாட்டையே அதிரச் செய்தது. இந்தத் தாக்குதல்களுக்குப் பிறகு பாகிஸ்தான் ராணுவம் குற்றம்சாட்டப்பட்டவர்களை விசாரிக்க ராணுவ நீதிமன்றங்களை அமைத்தது. பயங்கவாதக் குற்றங்களில் ஈடுபட்டவர்களை ராணுவ நீதிமன்றங்கள் விசாரிக்கும் வகையில் அரசியல் சாசனமும் திருத்தப்பட்டது.

7 ஆண்டுகளாக தூக்குத் தண்டனைக்கு விதிக்கப்பட்டிருந்த தடை தற்போது நீக்கப்பட்டுள்ள நிலையில் இதுவரை 200க்கும் அதிகமானவர்கள் தூக்கிலிடப்பட்டிருக்கின்றனர். தாக்குதலை நடத்தியவர்கள் அப்போதே கொல்லப்பட்டுவிட்ட நிலையில் இந்தத் தாக்குதலோடு தொடர்புடையவர்களே இப்போது தண்டிக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (த-10)

# பழைமையான குர் ஆனை விற்க முயன்றவர்கள் கைது

புதுடில்லி, ஓக, 15

17ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த இஸ்லாமிய புனித நூலான அல் குர்ஆனை சட்டவிரோதமாக விற்க முயன்ற 10 பேர் இந்தியாவின் மைசூரில் கைது செய்யப்பட்டுள்ளனர். 604 பக்கங்களைக் கொண்ட இந்த குர்ஆன் தங்க நிற பக்கங்களில் கறுப்பு எழுத்துக்களில் அச்சிடப்பட்டுள்ளது. இதன் அட்டைகளில் விலை உயர்ந்த கற்கள் பதிக்கப்பட்டிருக்கின்றன.

இந்த நூல் 410 ஆண்டுகளுக்கு முன்பாக உருவாக்கப்பட்டிருக்கலாம் என ஆய்வாளர்கள் கருதுகின்றனர். இந்தியாவில் 1556 முதல் 1605 வரை ஆட்சி செய்த அக் பர் மறைந்த சில நாள்களில் இந்தக் குர்ஆன் உருவாக்கப்பட்டிருக்கலாம். கைதுசெய்யப்பட்டிருக்கும் பத்துப் பேரைக் கொண்ட குழு இந்தப் புனித நூலுக்கு இந்திய நாணயத்தில் 5 கோடி ரூபாய் விலை நிர்ணயித்து விற்க முயன்றதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

6 அங்குல நீளமும் 4 அங்குல அகலமும் கொண்ட இந்தப் பக்கங்களில் எழுத்துக்கள் மிக மிகத் தெளிவாக இருப்பது குறிப்பிடத்தக்கது. துருக்கியில் உள்ள அருங்காட்சியகங்களில் இருக்கும் பழைய பதிப்புகளில் மட்டுமே இம்மாதிரி ஒரு தெளிவான எழுத்துக்களைப் பார்க்க முடியும் என வரலாற்று ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த புத்தகத்தின் கடைசிப் பக்கத்தில் இந்தப் புத்தகம் இஸ்லாமிய ஆண்டான 1050ல் எழுதப்பட்டதாகக் குறிப்பிட்டப்பட்டுள்ளது. (த-10)

# சுதந்திர விழாவில் தீவிரவாதிகள் ஊடுருவச் சதி

## எச்சரிக்கை விடுத்துள்ளது இந்திய உளவுத் துறை

புதுடில்லி, ஓக, 15

பாதுகாப்புப் படையினரின் காணாமல்போன அடையாள அட்டைகளைப் பயன்படுத்தி இந்திய சுதந்திர தினக் கொண்டாட்டத்தில் தீவிரவாதிகள் ஊடுருவ முயற்சிக்கலாம் என உளவுத் துறை எச்சரிக்கை விடுத்துள்ளது.

இதையடுத்து டெல்லி செங்கோட்டைக்கு வருபவர்களின் அடையாள அட்டைகளை கவனமாக பரிசோதிக்கும்படி டெல்லி மற்றும் மத்திய பாதுகாப்புப் படையினருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

ஆண்டுதோறும் சுதந்திர தினத்தன்று டெல்லி செங்கோட்டையில் பிரதமர் தேசியக் கொடி ஏற்றி உரையாற்றுவது வழக்கம். அந்த வகையில் பிரதமர் நரேந்தர மோடி நாளை தேசியக் கொடி ஏற்றி சுதந்திர தின உரையை ஆற்றவுள்ளார். முன் எப்போதும் இல்லாத வகையில் இவ்விழாவில் பங்கேற்க அதிக அளவில் பார்வையாளர்களுக்கு அழைப்பு விடுக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இதனால் தீவிரவாதிகள் ஊடுருவி தாக்குதல் நடத்த முயற்சிக்கலாம் என எச்சரிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக பாதுகாப்புப் படையினரின் காணாமல் போன அடையாள அட்டைகளைப் பயன்படுத்தி செங்கோட்டையில் தீவிரவாதிகள் ஊடுருவத் திட்டமிட்டிருப்பதாக மத்திய உளவுத் துறையினருக்கு ரகசிய தகவல் கிடைத்துள்ளது. இதுகுறித்து மத்திய பாதுகாப்பு படையினரின் சுற்றறிக்கையில்

'செங்கோட்டையில் சுதந்திர தின விழா சுமார் இரண்டு மணி நேரம் நடைபெற உள்ளது. இங்கு வருவதற்கு முன்பு பிரதமர் மோடி ராஜ்காட்டில் உள்ள மகாத்மா காந்தியின் சமாதிக்கு மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்துகிறார். எனவே ராஜ்காட் மற்றும் செங்கோட்டையின் சுற்றுப்புறப் பகுதிகளில் தீவிர சோதனைகளை செய்து பாது காப்பு ஏற்பாடுகளை பலப்படுத்த வேண்டும். கடந்த டிசெம்பர் 2006ஆம் ஆண்டு முதல் நாட்டின் பல்வேறு பகுதிகளில் பணியில் இருந்த பாதுகாப்புப் படையினரிடம் இருந்து 87 அடையாள அட்டைகள் காணாமல் போய் உள்ளன. இந்த அடையாள அட்டைகளைப் பயன்படுத்தி தீவிரவாதிகள் செங்கோட்டை யில் நுழைய முயற்சிக்கலாம். எனவே செங்கோட்டைக்குள் நுழைபவர்களின் அடையாள அட்டைகளை அதிக கவனம் செலுத்தி சோதனை செய்ய வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (த-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏரிகளை மூடியுள்ள பிளாஸ்ரிக் பந்துகள்



## ஜிம்மி காட்டருக்கு புற்றுநோய்

வொஷிங்டன், ஓக. 15
தான் புற்றுநோயால் பாதிக்கப்பட்டிருப்பதாக அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி ஜிம்மி காட்டர் தெரிவித்துள்ளார். அண்மையில் கல்லீரலில் அறுவைச் சிகிச்சை செய்துகொண்டபோதே புற்றுநோய் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டதாகவும் அது உடலின் ஏனைய பாகங்களுக்கும் பரவி இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.
90 வயதான காட்டர் இம்மாத ஆரம்பத்தில் செய்துகொண்ட அறுவைச் சிகிச்சையில் கல்லீரலின் சிறு பாகம் அகற்றப்பட்டது. அடுத்த வாரமாகும் போது இது பற்றி மேலும் தெரிய வரும் என்றும் அவர் வெளியிட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.
காட்டர் தற்போது அட்லான்டாவில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார். அவர் நலம் பெற பிரார்த்தித்து அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவும் அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தார். கடந்த 1981 ஆம் ஆண்டு வெள்ளை மாளிகையில் இருந்து விடைபெற்ற ஜிம்மி காட்டர் தனது காட்டர் மையத்தின் மூலம் சர்வதேச அளவில் மனிதாபிமான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகிறார்.
1994 ஆம் ஆண்டு வட கொரிய அணு ஆயுத குறைப்பு பேச்சுவார்த்தையில் ஈடுபட்ட காட்டர் அண்மையில் சிரியா சென்று ஜனாதிபதி பஷர் அல் அஸாத்தையும் சந்தித்திருந்தார்.
காட்டர் 1976 ஆம் ஆண்டு அமெரிக்க ஜனாதிபதியாக பதவியேற்றார். 2002 இல் அவர் அமைதிக்கான நோபல் விருதையும் வென்றமை குறிப்பிடத்தக்கது. (த-10)

வொஷிங்ரன், ஓக, 15
கலிபோர்னியாவில் நீர் நிலைகளில் இருக்கும் நீர் ஆவியாகி விடாமல் இருக்க புதிய யுக்தி ஒன்று கையாளப்பட்டுள்ளது. லாஸ் ஏஞ்சல்ஸில் உள்ள சில்மர் நீர்த்தேக்கத்திலுள்ள நீர் வேகமாக ஆவியாகி வருகிறது. எனவே இதனைத் தடுக்கும் வகையில் இந்த நீர்த்தேக்கம் முழுவதும் கறுப்பு நிற பிளாஸ்டிக் பந்துகள் போடப்பட்டுள்ளன.
இதற்காக 9.6 கோடி கறுப்பு நிற பிளாஸ்டிக் பந்துகள் இந்த நீர்த்தேக்கத்தில் கொட்டப்பட்டுள்ளன. இதனால் இந்த நீர்த்தேக்கத்தில் தண்ணீர் இருப்பதே வெளியில் தெரியாத அளவுக்கு கறுப்புப் பந்துகளாக காட்சியளிக்கிறது. இவ்வாறு கறுப்புப் பந்துகள் கொட்டப்பட்டிருப்பதன் மூலம் இந்த தண்ணீர் ஆவியாகாமல் தடுக்கப் படுகிறது.
மேலும், அழுக்கு, ரசாயனம் போன்றவற்றில் இருந்தும் பாதுகாக்கப்படுகிறது. இந்த பிளாஸ்டிக் பந்துகள் மூலம் ஓராண்டுக்கு 300 கலன் (1135 லிட்டர்) தண்ணீர் ஆவியாவதைத் தடுக்க முடியும் என அதிகாரிகள் கூறுகின்றனர். அத்துடன் சூரியனில் இருந்து வெளிவரும் புற ஊதாக்கதிர்களையும் தண்ணீருக்குள் ஊடுருவ விடாமல் இந்தப் பந்துகள் தடுப்பதாகவும் தெரிவிக்கப் படுகின்றது. (த-10)



## சீனாவில் மண்சரிவு

பீஜிங், ஓக, 15
சீனாவின் வட மேற்கு ஷாங்ஸி மாகாணத்தில் புதன்கிழமை இடம்பெற்ற பெரிய மண்சரிவொன்றையடுத்து 40 பேர் காணாமல்போயுள்ளனர். இந்த மண்சரிவில் ஷாங்யங் நகரிலுள்ள ஷாங்ஸி வுஸொயு சுரங்கக் கம்பனிக்குச் சொந்தமான விடுதிகளும் வீடுகளும் புதையுண்டுள்ளன.



மேற்படி மண்சரிவில் புதையுண்ட 14 பேர் உயிருடன் மீட்கப்பட்டுள்ளனர். தென் சீனாவை கடந்த வார இறுதியில் தாக்கிய சூறாவளியொன்று காரணமாக அந்நாட்டின் பல பிரதேசங்களில் அடை மழை பெய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (த-10)

## காரை தாயாக நினைக்கும் குட்டிக் காண்டாமிருகம்

ஜொகன்னர்ஸ்பேர்க், ஓக 15
தென்னாபிரிக்காவின் க்ரூகர் தேசிய பூங்காவில் உள்ள 2 மாத குட்டி காண்டாமிருகத்தின் பெயர் டோன்னி. டோன்னியின் தாய் வேட்டைக்காரர்களால் கொல்லப்பட்ட பிறகு காட்டில் தனியாக அலைந்து கொண்டிருந்த டோன்னியை (க்ரூகர் பூங்காவின் ரேஞ்சர் வைத்த பெயர்) வன விலங்கு ஆர்வலர்கள் க்ரூகர் தேசிய பூங்காவிற்கு கூட்டி வந்தனர்.
வந்த சில நாள்களில் இதய அழுத்த நோயால் பாதிக்கப்பட்டிருந்த டோன்னி தற்போது குணமாகியுள்ளது. இந்த நிலையில், சில தினங்களுக்கு முன் க்ரூகர் தேசிய பூங்காவில் பார்க்கிங் செய்யப்பட்டிருந்த சாம்பல் நிறக் காரை தனது தாய் என்று நினைத்து டோன்னி சுற்றி சுற்றி



வந்தமை, அங்கிருந்த பார்வையாளர்களின் கண்களைக் குளமாக்கியது. தாயை இழந்த மிருகங்கள் ... பொருள்கள், சில மனிதர்களை ... கள் தாயாக நினைத்துக் கொள் ... மூலமாக தங்கள் இழப்பை ஈடுசெய்து கொள்கின்றன என்று இது குறித்து ... துவர்கள் தெரிவித்துள்ளனர். (த-10)

## தென்கொரிய முதியவர் நடு வீதியில் தீக்குளிப்பு

### ஜப்பான் இராணுவத்தை எதிர்த்து



இரண்டாவது உலகப் போரில் ஜப்பான் இராணுவத்தினர் கொரியப் பெண்களைப் பாலியல் அடிமைகளாக பயன்படுத்தியதற்கு ஜப்பான் மன்னிப்புக் கேட்க வேண்டும் என்று கோரி 80 வயது தென்கொரிய நாட்டவர் ஒருவர் தீக்குளித்துள்ளார்.
கொரிய தீபகற்பத்தில் ஜப்பான் ஆக்கிரமிப்பு முடிவுற்றதன் 70 ஆண்டு நிறைவு இன்று சனிக்கிழமை இடம்பெறவுள்ள நிலையில் நேற்று ஜப்பான் தூதரகத்துக்கு முன்பாக இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின்போதே முதியவர் தீக்குளித்தார்.
2000க்கும் அதிகமானோர் பங்கேற்றிருந்த இந்த ஆர்ப்பாட்டத்தில் ஜப்பான் இராணுவத்தால் பாலியல் அடிமைகளாக பயன்படுத்தப்பட்ட 47 பெண்களும் இருந்தனர். முதியவர் தீக்குளித்துக் கொண்டதை அடுத்து அருகில் இருந்தவர் ஆர்ப்பாட்ட பதாகைகளைக் கொண்டு தீயை அணைத்தார். பின்னர் அவர் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டார். சோய் ஷியூன் யோல் என்ற அந்த முதியவரின் உடலின் பல பாகங்களிலும் தீக்காயங்கள் ஏற்பட்டுள்ளன.
இரண்டாவது உலகப் போர் காலத்தில் ஜப்பான் இராணுவம் கொரியா, சீனாமற்றும் ஆசியநாடுகளைச் சேர்ந்த சுமார் 200,000 பெண்களை பாலியல் அடிமைகளாக பயன்படுத்தியதாக நம்பப்படுகிறது. (த-10)

## உடல் பருமனுக்கான மரபணு கண்டுபிடிப்பு

ஒட்டாவா, ஓக, 15
உடல் பருமனுக்கான மரபணுவை விஞ்ஞானிகள் கண்டறிந்து சாதனை படைத்துள்ளனர். உடல் பருமன் நோயால் உலகம் முழுவதும் பல்லாயிரக்கணக்கான மக்கள் அவதிப்பட்டு வருகின்றனர். உடல் பருமனுக்கான ஜீன் குறித்து ஆராய்ச்சி மேற்கொண்ட கனடாவிலுள்ள பிரிட்டிஷ் கொலம்பியா பல்கலை விஞ்ஞானிகள் கொழுப்பை சேகரித்து உடல் பருமனை அதிகரிக்கும் ஜீனைக் கண்டுபிடித்துள்ளனர். இதற்கு 14-3-3 ஜீட்டா எனப் பெயரிடப்பட்டுள்ளது.
எலிகளின் மீது விஞ்ஞானிகள் நடத்திய சோதனையில் 14-3-3 ஜீட்டா ஜீனை கட்டுப்படுத்துவதன் மூலம் 50 சதவீத வெள்ளைக் கொழுப்பு அளவு குறைவதை கண்டறிந்தனர். இந்தக் கொழுப்பு, உடல்பருமன், இதய நோய், நீரிழிவு போன்றவற்றுடன் தொடர்புடையது. இந்தச் சோதனையை அதிக உடல் எடை கொண்ட எலிகளின் மீது நடத்திய போது 22 சதவீத கொழுப்பு குறைந்துள்ளது. இச்சோதனையின் மூலம் குறிப்பிட்ட ஜீனை முடக்குவதால் உடல் பருமனை கட்டுப்படுத்தலாம் என விஞ்ஞானிகள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர். (த-10)



## தலிபான் தலைவருக்கு அல்கெய்தா ஆதரவு

காபூல், ஓக 15
தலிபான் இயக்கத்தின் புதிய தலைவராக நியமிக்கப்பட்டிருக்கும் மன்சூருக்கு ஆதரவளிப்பதாக அல்கெய்தாவின் தலைவர் ஆயமான் அல் ஜவாஹிரி தெரிவிக்கும் குரல் பதிவு ஒன்று வெளியிடப்பட்டுள்ளது. தலிபான் இயக்கத்தினருள் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காகக் கடும்

அல் ஜவாஹிரி மன்சூருக்கு ஆதரவளித்திருப்பது அவரது நிலையை வலுப்படுத்துவதாக அமையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.
தலிபான் அமைப்பின் தலைவராக இருந்த முல்லா ஒமரின் உயிரிழப்பை கடந்த மாதம் ஒப்புக்கொண்ட தலிபான் இயக்கத்தினர் தங்கள் அமைப்பின் தலைவரை தேர்ந்

இதற்கிடையில், அல்கெய்தா ...ன் தலைவர் உயிருடன் இருக்கி...ா என்ற சந்தேகங்களை அந்த ...க் கத்தின் எதிர்ப்பாளர்கள் எ...ழுப்பி வந்தனர்.
இந்த நிலையில், சுமார் ஒரு ... இடைவெளிக்குப் பிறகு அல் ...ஜவா ஹரியின் இந்த குரல் பதிவு ...வெளி யிடப்பட்டுள்ளமை குறிப்பிட...த்...

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நிலக்கடலையில் வீரிய விதைகளை பிரித்தெடுத்தல்



அ.றமணீதரன்
விவசாயத் திணைக்களம்,
யாழ்ப்பாணம்.

எண்ணெய் வித்துப் பயிர்களில் நிலக்கடலை, முதன்மையான இடத்தை வகிக்கின்றது. இந் தப் பயிரின் விதைகள் 50 முதல் 65 சதவீதம் வரை எண்ணெயைக் கொண்டவை. எனவே இந்த விதைகள் நீண்ட நாள்கள் சேமிப்புக்கு ஏற்றவையல்ல. மேலும் அதிக எண்ணெயைக் கொண்டுள்ளதால் நிலக் கடலையின் விதைகள் விரைவில் அதன் வீரியம் மற்றும் முளைதிறனை இழந்து விடும். சில சமயம் இந்த வகையான விதைகளை வயலில் விதைப்பதற்குப் பயன்படுத்தும்பொழுது விதைகள் முளைக் காமல் வயலில் பயிரின் எண்ணிக்கை பாதிப்படைய வாய்ப்புள்ளது. விதைப்புக்குப் பயன்படுத்தும் விதையின் தரத்தைப் பொறுத்தே அந்தப் பயிரின் விளைவும் அமையும். எனவே விதைப்பதற்கு முன்னர் தரமான விதைகளைத் தேர்ந்தெடுத்துப் பயன்படுத்துதல் மிகவும் அவசியம்.

விதையின் முளைதிறன் 75 சதவீதத்துக்கு குறைவாக இருக்கும் பட்சத்தில், அத்தகைய விதைகளை கீழ் வரும் விதை மேலாண்மை முறையைக் கையாண்டு தரமான முளைக்கக் கூடிய விதைகளை தனியாகப் பிரித்து விதைப் பதன் மூலம் வயல்வெளியில் போதிய பயிர் எண்ணிக்கையைப் பராமரிக்கலாம்.



**தேவையான பொருள்கள்**

நிலக்கடலை விதை 40 கிலோ, ஒரு ஏக்கருக்கு
கல்சியம் குளோரைட்டு உப்பு 75 கிராம்
நீர் – 15 லீற்றர்

**செய்முறை**

1) நிலக்கடலைப் பருப்பில் நன்கு முற்றாத, உடைந்த, சுருங்கிய மற்றும் பீடைத்தாக்க முள்ள சிறிய விதைகளை முதலில் பிரித் தெடுக்க வேண்டும்.

2) ஒரு கிலோ விதைக்கு அரைலீற்றர் என்ற அளவில் 0.5 சதவீத கல்சியம் குளோரைட்டு உப்புக் கரைசலைத் தயார் செய்ய வேண்டும்.

3) ஒரு ஏக்கர் விதைக்கு( அண் ணளவாக 30 கிலோ விதைப் பருப்பு) தேவையான 0.5 சதவீத கரைசல் தயார் செய்ய 75 கிராம் கல்சியம் குளோரைட் உப்பை 15 லீற்றர் நீரில் கரைத்து கரைசல் தயார் செய்யலாம்.

4)பின்பு ஒரு ஏக்கருக்கான 30 கிலோ விதைப்பருப்பை சுத்த மான சாக்குப்பையில் (உரப்பை களையோ அல்லது பொலித்தீன் பைகளையோ பயன்படுத்தக் கூடாது) பாதி அளவுக்கு விதை களைப் போட்டு நுனியில் தளரக் கட்டி 15 லீற்றர் உப்புக்கரைசலில் சுமார் 6 மணி நேரம் ஊற வைக்க வேண்டும்.

5) பின்பு 6 மணி நேரம் கழித்து விதைகளை ஈரமான சாக்குகளின் மேல் பரப்பி வேறொரு ஈரமான சாக்கைக் கொண்டு மூடிவிட வேண்டும். இந்த விதைகளை அப்படியே 20 முதல் 24 மணி நேரம் வரை மூடி வைக்க வேண்டும்.

6)இந்தச் சந்தர்ப்பத்தில் உயிருள்ள விதை களிலிருந்து சுமார் 5 மி.மீற்றர் அளவு முளைக்குருத்து வெளிவந்து விடும்.

7) அவற்றைத் தனியே பிரித்தெடுத்து நிழலில் நன்கு உலர்த்த வேண்டும்.

8) இவ்வாறு 2 மணி நேரத்துக்கு ஒரு முறை முளைவிட்ட விதைகளை 3 முறை பிரித் தெடுத்து நிழலில் உலர்த்த வேண்டும். கடைசி யில் முளை வராத இறந்த விதைகளை அகற்ற வேண்டும்.

9)இவ்வாறு தேர்வு செய்த விதைகளை கிலோவுக்கு 2 கிராம் என்ற அளவில் கப்டான் அல்லது திராம் போன்ற பங்கசுக் கொல்லி கொண்டு விதை பரிகரணம் செய்து விதைக்க வேண்டும்.

10) விதைப்புக்கு 1–2 நாள்கள் முன்பாக இந்த முறையை கையாண்டு உயிருள்ள விதை களைப் பிரித்தெடுத்து உடனே விதைப்பு மேற்கொள்ள வேண்டும்.

**பயன்கள்**

1)வயலில் போதுமான அளவு பயிர் அடர்த்தியை பராமரித்து 10 முதல் 15 சதவீதம் கூடுதலாக விளைச்சலைப் பெறலாம்.

2)விதைகளை கல்சியம் குளோரைட்டு கரை சலில் ஊற வைப்பதால் கல்சியம் குறைபாட் டால் ஏற்படக் கூடிய தாக்கத்தைக் கட்டுப் படுத்தலாம்.

3)இடைவெளி மீள்நிரப்பலுக்குரிய மேலதிக செலவைக் கட்டுப்படுத்தலாம்.

4)பரிந்துரை செய்யப்பட்ட அளவுக்கு மேலதிகமாக விதையிடத் தேவையில்லை.. இதனால் விதைக்கான செலவைக் குறைக் கலாம்.

# பின்தங்கிய பிரதேசங்களின் சிறுவர்களுக்கு கல்வி வாய்ப்பு




இலங்கையில் கல்விச் செயற்பாடு களை மேம்படுத்துவதற்கு பொது மக்களிடமிருந்து நிதிசேகரிக்கும் முதலாவது செயற்றிட்டத்தை அறி முகம் செய்திருந்ததன் மூலமாக, 'குறைந்த வசதிகள் படைத்த சிறு வர்களுக்கு கல்வி மற்றும் தொழில் நிலை வழிகாட்டல்களை வழங்கு வதன் மூலம் எதிர்கால தலைவர் களை உருவாக்குவது' எனும் பெரன் டினாவின் பிரதான நோக்கத்துக்கு மேலும் வலுச்சேர்க்கப்பட்டுள்ளது.

ஹில்டன் ஹோட்டலில் அண்மை யில் இடம்பெற்ற இந்த நிகழ்வின் அறிமுகத்தின்போது, இலங்கை யில் அமைந்துள்ள நெதர்லாந்து தூதுவராலயத்தின் பொறுப்பதிகாரி லியென் ஹவுபென் பங்கேற்றிருந்த துடன், டச்சு தூதுவரான லுவிஸ் டபிள்யு.எம்.பியெட், ஜயந்த தன பால, ஹனீஃவ் யூசுஃவ், பேராசி ரியர் ஹிரான் டயஸ், ஹேமகா அமரசூரிய மற்றும் பிரியந்தி பெர்னாண்டோ ஆகியோர் பங்கேற் றிருந்தனர். இந்த திட்டத்துக்கான அவர்களின் ஆதரவையும் தெரி வித்திருந்தனர். பெரன்டினா குழு மத்தின் தலைவர் துலான் டி சில்வா, உரையாற்றுகையில், சிறுவர்கள் பெறுமதி வாய்ந்த அன்பளிப்புக ளாக அமைந்துள்ளனர். எமது தேசத் தின் எதிர்காலத்தை தீர்மானிப் பவர் களாகவும் அமைந்துள்ளனர். எமது சகல சிறுவர்களும் கல்வியை பெற் றுக்கொள்வதற்கு சமமான உரிமை யைக் கொண்டுள்ளனர். இரு தசாப்த காலப்பகுதிக்கு முன்னதாக இதை அடிப்படையாகக்கொண்டு பெரன்டினா ஆரம்பிக்கப்பட்டிருந்தது – என்றார்.

1992 இல் இலங்கையில் பெரன் டினா ஸ்தாபிக்கப்பட்டது. பல மாவட் டங்களில் அபிவிருத்தி மற்றும் வாழ்க்கைத் தரங்களுடன் தொடர் புடையதாக இந்த அமைப்பின் செயற்பாடுகள் அமைந்துள்ளன. தற்போது பெரன்டினா பெற்றுள்ள வெற்றிகளுக்கு டி சில்வா முன் மாதிரியாக திகழ்ந்திருந்தார். பல பின்தங்கிய குடும்பங்களின் வாழ் வாதாரங்களை மேம்படுத்திய வண் ணம், தற்போது பெரன்டினா எய்தி யுள்ள வெற்றிகளுக்கு இவர் வழி கோலியிருந்தார். இது பற்றிய மேல திக விவரங்களை ஆகியவற்றில் பார்வையிட முடியும்.

இந்த பொது மக்களிடமிருந்தான நிதி சேகரிப்பு செயற்பாடு என்பது Give2SriLanka என அழைக் கப்படுகின்றது. வறுமை ஒழிப்பு தொடர்பாக முன்னெடுக்கப்படும் பல்வேறு செயற்பாடுகளில் இந்தச் செயற்றிட்டம் பங்களிப்பை வழங் கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

பெரன்டினா மூலமாக தற்போது 1000 புலமைப்பரிசில்கள் வருடாந் தம் வசதி வாய்ப்புகள் குறைந்த மாணவர்களுக்கு வழங்கப்படுகின் றன. அத்துடன், அவர்களுக்கு தமது கற்கைகளை எவ்வித தடைகளு மின்றி தொடரக்கூடிய வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கும் வகை யிலும் அமைந்துள்ளது. இதில் சில சிறுவர்கள் பெருந்தோட்டப் பகுதி கள், பின்தங்கிய கிராமங்கள் மற் றும் போரினால் பாதிப்புற்ற பகுதி கள் ஆகியவற்றில் வசிக்கின்றனர். இந்தப் பிரதேசங்களின் எல்லைப் படுத்தப்பட்ட சமூகங்களை காணக் கூடியதாகவுள்ளமை குறிப்பிடத் தக்கது. பெரன்டினாவினால் கடந்த ஆண்டு முன்னெடுக்கப்பட்ட புலமைப் பரிசில்கள் வழங்கும் நடவடிக்கை களின் மூலமாக 10 மில்லியன் ரூபாய் பெறுமதியான பங்களிப் புகள் செலுத்தப்பட்டிருந்தன.

இந்தப் புலமைப்பரிசில் திட்டத்தின் பரிபூரண அம்சம் யாதெனில், மாண வர் எனும் நிலையிலிருந்து நிபுணர் எனும் நிலையை எய்தும் வரை உதவி களை வழங்குவதாக அமைந்துள் ளது. உயர் தரத்தை தொடர்ந்து, மாணவர்களுக்கு தொழில்சார் ஆலோசனைகள் வழிகாட்டல்கள், தொழில் ஒன்றை பெற்றுக்கொள் வதற்கான உதவிகள் போன்றனவும் வழங்கப்படும். பல்கலைக்கழகங் களுக்கு தெரிவாகும் மாணவர் களுக்கு மாதாந்த கொடுப்பனவு ஒன்றும் வழங்கப்படும். தமது க.பொ.த உயர்தரத்தை தொடர்ந்து, தொழில் வாய்ப்பொன்றை பெற்றுக் கொள்ள எதிர்பார்க்கும் மாணவர் களுக்கு, 300 க்கும் அதிகமான பதிவு செய்யப்பட்டுள்ள கம்பனி களுடன் இணைக்கப்படுவார்கள். தொழிற்பயிற்சிகற்கைகளை தொடர விரும்பும் மாணவர்களுக்கு அல் லது உயர் கல்வி வாய்ப்பை தொடர விரும்பும் மாணவர்களுக்கு 50,000 ரூபாய் பெறுமதி வாய்ந்த கற்கை களை தொடர்வதற்கான புலமைப் பரிசில்கள் வழங்கப்படும். தமது ஆங்கிலம் மற்றும் ஏனைய ஆளு மைகளை விருத்தி செய்து கொள்ள எதிர்பார்க்கும் மாணவர்களுக்கு அதற்கான வாய்ப்புகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படும். மாணவர்களுக்கு இவ்வாறான வாய்ப்புகளை ஏற் படுத்திக் கொடுக்கும் செயற்பாடு களுக்கு இரு மாணவர்கள் சிறந்த முன்னுதாரணமாக திகழ்கின்றனர். அவர்களுக்கு சாதாரண தர கற் கைகளை தொடர்வதற்கான உதவி களும் வழங்கப்பட்டிருந்தன. இதில் ஒரு மாணவர் தற்போது பேராதனை பல்கலைக்கழகத்தில் பல்வைத்திய பீடத்தில் உயர் கல்வியை தொடர் வது டன், மற்றைய மாணவர் களனி பல்கலைக் கழகத்தில் கலைப்பீடத் தில் தமது பட்டப்படிப்பை தொடர் கின் றமை குறிப்பிடத்தக்கது.

புலமைப்பரிசில் திட்டம், தற்போது 9 மாவட்டங்களில் முன்னெடுக்கப் படுவதுடன், 2020 ஆம் ஆண்ட ளவில் 5000 மாணவர்களுக்கு சென்றடைய திட்டமிடப்பட்டுள் ளது. எதிர்வரும் காலத்தில் சகல மாவட்டங்களையும் இந்தத் திட்டத் தில் உள்வாங்க திட்டமிடப்பட்டுள் ளது. அனுகூலம் பெறுவோரின் எண் ணிக்கையை 100,000 சிறுவர்கள் வரை அதிகரிப்பதற்கும் தீர்மானிக் கப்பட்டுள்ளது. (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மீள் குடியமர்த்தப்பட்ட பின்னரும் புனரமைக்கப்படாத அரியாலை கிழக்குக் கிராமத்தின் பிரதான வீதியும், அணைக்கட்டும்

அரியாலை கிழக்கு, நாவலடி, பூம்புகார் ஆகிய மூன்று கிராமங்களைச் சேர்ந்த மக்கள் பயன்படுத்தும் பிரதான வீதி கடந்த 5 வருடங்களாகியும் புனரமைக்கப் படாது குண்டும் குழியுமாகக் காணப்படுகிறது. கண்டி வீதியில் இருந்து சுமார் 9 கிலோ மீற்றர் நீளத்தையுடைய இந்த வீதி இவ்வாறு காணப்படுவதால் அங்குள்ள பிரதேசவாசிகள் பெரும் பாதிப்புக்களை எதிர்நோக்கியுள்ளனர். மழைக் காலங்களில் இந்த வீதியில் மழைநீர் தேங்கி நிற்பதால் வீதியூடாகப் பயணிப்பவர்கள் விபத்துக்குள்ளாகின்றனர். இதில் மூன்று கிராமங்களிலும், நாவலடியில் இருந்து பூம்புகாருக்கு இடையிலுள்ள கட்டடிக்கும் சிறிது முன்புறமாக வீதி புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளது. இருந்தும் அதனையடுத்து பூம்பூகார் தொடக்கம் அரியாலை கிழக்கு வரை வீதி புனரமைப்பு செய்யப்படாதுள்ளது. இதனால் அங்குள்ள மக்கள் மிகவும் பாதிப்பை எதிர்நோக்குகின்றனர். ஒரு நோயாளியையோ அல்லது கர்ப்பிணித்தாய்மார்களையோ, குழந்தைகளையோ அவசர வேளைகளில் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்ல முடியாது மக்கள் சிரமத்துக்கு உள்ளாகின்றனர்.

மேலும், போக்குவரத்துக்காக விடப்பட்டிருக்கும் அரச பேருந்தும் இந்த வீதியில் பயணித்து இடைநடுவே பாதிப்புக்குள்ளாகி விடுகின்றது. இதனால் இதில் பயணிக்கும் பள்ளி மாணவர்கள், அரச ஊழியர்கள் மற்றும் பொதுமக்கள் உரிய நேரங்களில் பயணிக்க முடியாது சிரமத்துக்குள்ளாகின்றனர். அதிலும் பேருந்து ஒரு நாளைக்கு நான்கு தடவையே பயணிக்கிறது. இதில் பலபேருக்கு அரியாலை கிழக்கு என்னும் கிராமம் உள்ளது என்பதே தெரியாது உள்ளது. இதில் பள்ளி மாணவர்கள் நேரந்தாழ்த்தி சமூகமளிப்பதால் பாடசாலைகளில் தண்டனைக்கு உள்ளாகுவதாக அங்குள்ள மாணவர்கள் கவலை தெரிவிக்கின்றனர். இதில் அதிசயம் என்னவென்றால் ஒவ்வொரு நாளும் விடியும் போது பேருந்து வருமோ அல்லது இடையில் நின்றுவிடுமோ என்ற அச்சத்திலேயே மக்கள் பயணித்து வருகின்றனர். பேருந்துச் சாரதிகளும் இந்த வீதியூடாகப் பயணிப்பதற்குச் சிரமப்படுவதாக அவர்களே விசனம் தெரிவிக்கின்றனர்.


அடுத்து இந்தக் கிராமங்கள் கடலால் சூழ்ந்து காணப்படுகின்றன. பருவமழை ஆரம்பிப்பதற்கு இன்னமும் சில மாதங்களே உள்ளன. இதனால் கடலால் சூழப்பட்ட கிராமங்களுள் கடல் நீர் உட்புகாமல் இருப்பதற்காக உவர்நீர் தடுப்பு அணைக்கட்டு ஒன்று போருக்கு முன்னராகக் காணப்பட்டதெனினும், அது தற்போது போரினால் அழிவுண்டுபோயுள்ளது இல்லாதுள் இதனால் மழைநீர் வீணாக கடலுடன் கலக்கின்றது. அத்தோடு கடல் நீர் பிரதேசத்துக்குள் உட்புக அதிக வாய்ப்புக்கள் உள்ளன. கடல்நீர் உட்புகுவதால் இந்தப் பிரதேசங்களிலுள்ள வயல் நிலங்கள், குறிப்பாக அரியாலை கிழக்கு கிராம வயல் நிலங்கள் அனைத்தும் உவர்நிலப்பரப்பாக மாறுவதற்கான வாய்ப்புக்கள் அதிகம் காணப்படுகின்றன. அதுமட்டுமல்லாது நன்னீர் கிணறுகள் கூட உவர் நீராக மாறுவதற்கு சாத்தியமுண்டு பல. ஏற்கனவே நன்னீர்க் கிணறுகளாக இருந்த சில கிணறுகள் உவர்நீராக மாற்றமடைந்துள்ளன. இதனால் மக்கள் குடிதண்ணீருக்காக நெடுந்தூரம் செல்ல வேண்டிய தேவையும் ஏற்படுகிறது. எனவே வீணாகக் கடலைச் சென்றடையும் மழைநீரைத் தடுத்து சேமித்துக் கொள்ள உவர்நீர்த் தடுப்பு அணைக்கட்டைக் கட்டுவதன் மூலம் சகல பிரச்சினைகளிலும் இருந்து விடுபட வாய்ப்புக்களுள்ளன. எனவே அணைக்கட்டை கட்டுவதற்குச் சம்பந்தப்பட்ட உயரதிகாரிகள் முன்வர வேண்டும் என்றும் எமது கிராம மக்களின் அவல நிலைகளைத் தடுக்க வேண்டும் என்றும் பிரதேசவாசிகள் கருத்துத் தெரிவிக்கின்றனர். வருகின்ற உயரதிகாரிகளோ அல்லது அரசியல்வாதிகளோ நாவலடி, பூம்புகாரோடு திரும்பிவிடாது அதற்கும் அப்பாலுள்ள அரியாலை கிழக்குக் கிராமத்தையும் கவனத்தில் கொள்ள வேண்டும். ஓர் அபிவிருத்திக் கூட்டம் என்றாலோ அல்லது கிராம சேவகர் மட்டக் கூட்டம் என்றாலோ நாவலடி, பூம்புகாரிலேயே நடத்துகின்றனர். அவர்களாலேயே அரியாலை கிழக்குக்கு வருவதற்கு சிரமம் என்றால் மக்களுக்கு எவ்வளவு சிரமம். எனவே முன்புறக் கிராமங்களை அபிவிருத்தி செய்வதோடு மட்டுமல்லாமல், பின்புறமுள்ள அரியாலை கிழக்குக் கிராமத்தையும் கவனத்திற்கொள்ள வேண்டும். மக்கள் பயணம் செய்யும் பேருந்தும் போதாதுள்ளது என்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளை கேட்டுக்கொள்கிறோம். இத்தகைய தமது பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வு கிடைக்குமா? என்ற கேள்வியுடன் இந்தப் பகுதி மக்கள் வாழ்ந்து வருகின்றனர்.

**ம.துஜீவன், அரியாலை கிழக்கு.**

## வாசகர் திருமுகம்



## கேலிச் சித்திரம்



நன்றி: லங்காதீப

# ஆழமாகச் சிந்தித்து வாக்களியுங்கள்

இலங்கையின் 8ஆவது பொதுத் தேர்தலுக்கு இன்னமும் 4 நாள்களே இருக்கின்ற நிலையில், தங்கள் சார்பாக எவரை நாடாளுமன்றத்திற்கு அனுப்புவது என்பதில் மக்கள் சிந்தித்துச் செயற் படுவது இன்றியமையாததாகும். 225 பேரைக் கொண்ட நாடாளுமன்றத்தில் 29 பேர் தேசியப் பட்டியலினூடாக தெரிவுசெய்யப்படும் நிலை யில் மிகுதி 196 பேரைத் தேர்ந்தெடுப்பதற்கான தேர்தலில் 6,151 பேர் வேட்பாளர்களாக அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களின் சார்பாக களமிறங்கியுள்ள நிலையில், மக்களின் முன்பாக இருக்கின்ற பொறுப்பு பெரியதொன்றாகும்.

இதில் தமிழ், முஸ்லிம் மக்கள் பெரும்பான்மையாக வாழும் மாவட்டங்களில் பத்துக்கும் குறைவான ஆசனங்களே இருந்தபோதிலும் போட்டியிடுகின்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை நோக்குகின்ற போது, மக்கள் சரியாகச் சிந்தித்து வாக்களிக்காவிட்டால் வீணே வாக்குகள் சிதறி தமக்குரிய பிரதிநிதித்துவத்தைப் பெறமுடியாத சூழ்நிலை உருவாகக் கூடிய வாய்ப்பு கள் அதிகமாக உள்ளன.

யாழ்ப்பாணத்தில் 7 ஆசனங்களே இம்முறை உள்ள நிலையில், அங்கு 210 வேட்பாளர்கள் பிரதான கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களிலிருந்து போட்டியிடுகின்றனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தைப் பொறுத்தவரையில் 5 ஆச னங்களுக்காக 368 வேட்பாளர்கள் களத்தில் குதித்திருக்கின்றனர். 4 நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட திருகோணமலை மாவட்டத் தில் 147 வேட்பாளர்கள் களமிறங்கியிருக்கின்ற னர். இது உண்மையிலேயே அங்குள்ள மக்கள் மத்தியில் எவரைத் தெரிவுசெய்வதென்பதில் குழப்பநிலைமைக்கு வித்திடக்கூடும் .

கடந்த நாடாளுமன்றத்தில் உறுப்பினராக இருந்த ஒருவர் மீண்டும் களமிறங்கியிருந்தால் கடந்த நாடாளுமன்றத்தில் அவர் நடந்து கொண்ட விதம், தனது தொகுதிக்கும் மக்களுக்கும் செய்துள்ள சேவை போன்றவற்றை அடிப்படையாக வைத்து அவர் தொடர்பில் தீர்மானத்தை மேற்கொண்டுவிட முடியும்.

எதிர்க்கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்திய உறுப்பினர் என்றால் அவரால் அபிவிருத்தி சார்ந்த பௌதிக சேவையென்ற அளவில் பெரிதாக எதையும் செய்திருக்கமுடியாது போனாலும், தமது பிரதேச மக்களின் பிரச்சினைகளைத் தேடிப் பிடித்து அவற்றை வெளிக்கொண்டுவந்த விதம் - முக்கிய தருணங்களில் வாக்குறுதிகளைப் பதிவு செய்த பாங்கு - பேசிய பேச்சுகளில் பொதிந்திருந்த அர்த்தம், ஆளுமை போன்றவற்றின் அடிப்படையில் ஒரு வகையில் முடிவெடுக்கலாம்.

எப்படியும் வெற்றிபெறவேண்டும் என்பதற்காக வேட்பாளர்களால் வாரி இறைத்துவிடப்படுகின்ற வாக்குறுதிகள் உண்மையிலேயே நடைமுறைச் சாத்தியம் கொண்டவை தானா என்பதை நன்குணர்ந்து கொண்டு தமது வாக்குகளைப் பயன்படுத்த வேண்டும். வாக்குறுதிகள் நடைமுறைச் சாத்தியமானவையா என்பதை எப்படிக் கண்டறிவது என்று கேட்கின்றவர்கள், உங்களுடைய அன்றாட வாழ்வில் எதிர்பார்ப்புகள் தொடர்பாக நீங்கள் கடைப்பிடிக்கின்ற அளவுகோல்களையே இதிலும் பின்பற்ற முடியும். ஒருவர் நடந்து போவதற்குப் பாதையே இல்லாத ஊரில் கார்ப்பந்தயத்திடலை அமைத்துத் தருகின்றேன் என்று வாக்குறுதி வழங்கப்படுமானால், அந்த வாக்குறுதி எத்தகையது என்பதை சீர்தூக்கிப் பார்ப்பதில் சிரமமிருக்காது. கடலே இல்லாத இடத்தில் துறைமுகம் அமைப்பதாக வாக்குறுதியளிக்கின்ற அரசியல் கட்சிகளும், வேட்பாளர்களும் நம் முன்னே இருக்கவே செய்கின்றனர். இத்தகையவர்களின் வாக்குறுதிகளை நம்பி உணர்ச்சிமயமான அவர்களது வார்த்தைகளுக்கு நீங்கள் ஆட் படாமல் ஆழச் சிந்தித்து உங்களது வாக்குகளை அளிப்பது அவசியமாகும்.

பத்தி எழுத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## தமிழர்களை பாவப்பட்டவர்களாக மாற்றும் தெற்கின் தலைமைகள்

இன்னமும் இரண்டு நாள்களில், இலங்கையில் நடைபெற உள்ள பொதுத்தேர்தலின் முடிவுகளைப் பொறுத்தே, நீண்டு செல்லும் இனப்பிரச்சினைக்கான நிலையான முடிவுகளை-தீர்மானங்களை மேற்கொள்ள இயலும்--

நெருக்கடிக்கான அனைத்துலகக் குழு அண்மையில் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

ஜனாதிபதி மைத்திரிபால பதவியேற்று ஆறு மாதங்கள் கடந்த பின்னரும், அரச நிர்வாகத்தில் முக்கிய தீர்மானங்களை மேற்கொள்ள இயலாமல் போயிற்று. அதன் விளைவாக பிரிவினைவாத அரசியல் குறித்த சிக்கல் மீண்டும் தலையெடுத்து வருகின்றது.

நாட்டில் நடந்து முடிந்த போர் குறித்து உள்நாட்டு விசாரணை முன்னெடுக்கப்படும் என்று புதிய ஆட்சியாளர்கள் வாக்குறுதி அளித்திருந்தனர். எனினும் அந்த வழி செல்வதற்கு இதுவரை உருப்படியாகவோ ஆக்கபூர்வமாகவோ அவர்களால் செயற்பட இயலவில்லை.

போரில் ஈடுபட்டவர்கள் -- பங்கு கொண்டவர்கள்-- குறித்து கனதியான பயன்தரவல்ல விசாரணை எதனையும் மேற்கொள்வதற்கு சட்ட ரீதியாகவும், அமைப்பு ரீதியாகவும் சிலபல சீர்திருத்தங்களைச் செய்தாக வேண்டும் என்று தொட்டுக் காட்டப்படுகிறது.

ஆனால், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் அதனை உடனடியாகச் செய்ய இயலவில்லை.

விரைந்து வந்துள்ள பொதுத்தேர்தலே அதற்குக் காரணம் என்று சுட்டிக்காட்டப்படுகிறது. ஆகையால் தேர்தல் நடைபெற்று முடிவுகள் வெளிவந்த பின்னரே, அது சாத்தியம். ஆகையால், பொதுத்தேர்தல் நடை பெற்று புதிதாக எந்தத் தரப்பு ஆட்சிபீடம் ஏறுகிறதோ, அதுவே இக்கட்டான இந்த விவகாரத்தைக் கையாள நேரிடும்.

பதவியிலுள்ள அரசுக்குள் உள்ளுறைந்த பிளவுகள் காரணமாக, சிறிலங்கா சுதந்திரக் கட்சியை, ஜனாதிபதியால் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியாத தன்மை ஊதிப் பருத்து உயர்ந்துள்ளது என்பதை எவராலும் மறந்துவிட இயலாது!

எந்த வகையிலோ, வழியிலோ அடுத்த திங்கட்கிழமை நடைபெறும் பொதுத் தேர்தலில், மஹிந்தவின் சிறிலங்கா சுதந்திரக் கட்சி நாடாளுமன்ற ஆட்சி பீடத்தைக் கைப்பற்றிவிட்டால்-

இல்லாவிடினும், அரசியல், தேர்தல் தரப்புக்கள் சில எதிர்வு கூறுவது போன்று மஹிந்த நாடாளுமன்றுக்குள் நுழையச் சந்தர்ப்பம் கிடைக்கும் பட்சத்தில்--

எல்லாமே மண் குதிரையை நம்பி ஆற்றில் இறங்கிய கதையாகவே கரைந்து போய்விடும்.

மொத்தத்தில், நாட்டின் புதிய ஜனாதிபதியாக மைத்திரிபால பதவியேற்ற நாள் முதல் இற்றைவரை நாட்டின் அரசியலரங்கில் இடம்பெற்ற குத்து வெட்டுக்கள் கருத்து வெளிப்பாட்டுப் பிறழ்வுகளைக் கூட்டிக் கழித்துக் கணக்கிட்டால் --

நெருக்கடிக்கான அனைத்துலகக் குழுவின், மிகப் பிந்திய கருத்து வெளிப்பாட்டை, வெறும் ஊகத்தின் அடிப்படையில் அமைந்த ஒன்றெனவே கொள்ள வேண்டியுள்ளது.

பேரினவாத அரசுகளால் புறமொதுக்கப்பட்டு விரக்தியின் விளிம்பில் நிற்கும், பாவப்பட்ட பிறப்புக்கள் என அடையாளப்படுத்தப்படும் அளவுக்கு, தமிழினத்தின் எதிர்பார்ப்பு தமிழ் மக்களது பிரச்சினைக்கான நியாயமான தீர்வொன்றே.

ஆயினும், இலவு காத்த கிளிக்கு ஏற்பட்ட ஏமாற்றம் போன்ற நிலை ஈழத்தமிழினத்துக்கு ஏற்பட்டு விடுமோ என்று ஏங்க வைக்கும் போக்கு இன்றைய அரசியலில் தொடர்வது வேதனை தருவதாகும். என் செய்வோம்....?

# தாதியராய் தலைநிமிர்வோம்

பத்மராசா பத்மநிருபன்
தாதிய உத்தியோகத்தர்
யாழ்.போதனா வைத்தியசாலை



சுகாதாரத் துறையில் தாதியம் என்பது அத்தியாவசியமான தொன்றாக திகழ்கின்றது. அதாவது அது தனி மனிதனுடைய வாழ்விலும் குடும்பத்தினுடைய சுகா்தாரப் பராமரிப்பிலும் சமூகத்தின் அபிவிருத்திப் பணியிலும் தனது முக்கிய பங்கை ஆற்றி வருகிறது என்றால் மிகையாகாது. ஒரு நாட்டைப் பொறுத்தவரையில் அந்த நாட்டுச் சட்டதிட்டங்கள், கல்விநடைமுறைத் திட்டங்கள் என்பவற்றுக்கு அமைய தாதிய உத்தியோகத்தராகப் பயிற்சி பெற்று வெளியேறும் தாதியர் பல்வேறுபட்ட அறிவு, மனப்பாங்கு, ஆற்றல் என்பவற்றில் தேர்ந்து சிறப்பான ஒரு குழுமமாகத் திகழ்கின்றனர். தமது வாழ்வை சேவைக்கு என அர்ப்பணித்து பணியைத் தொடங்கித் தொழிலாக அன்றி அதனையொரு சேவையாக ஆரம்பிக்கின்றனர்.

தாதியர் சரியான முறையிலே புடம் போடப்பட்டு வளர்த்தெடுக்கப்படுகிறார்கள். தாதியருடைய வகிபங்கானது, சுகாதாரத் துறையிலே வேறுபட்ட வடிவங்களில் அமைந்து காணப்படுகிறது. அதாவது சுகாதாரப் பராமரிப்பு வழங்குநராக, பயிற்றுவிப்பாளராக, சுகாதாரப் போதனையாளராக, ஆராய்ச்சியாளராக, முகாமையாளராக எனப் பல்வேறு வகிபாகங்களைப் பொறுப்பெடுத்து ஒட்டு மொத்தத் தாதிய பராமரிப்பை வழங்குகின்றனர். தனியே வைத்தியசாலைகளில் மட்டுமன்றிப் போதனைக்கூடங்களிலும், சமூகத்திலும், சிறைச்சாலைகளிலும்; தொழிற்சாலைகளிலும் என தாதிய சேவை தொடர்ந்த வண்ணம் இருக்கின்றது.

இன்றைய நவீன யுகத்திலே தனியே வைத்திய உத்தரவுகளை மட்டும் நிறைவேற்றும் நபராக அன்றி, தாமே ஒரு நோயாளியினுடைய அல்லது சேவை பெறுநருடைய தேவைகள், பிரச்சினைகளை ஆராய்ந்து இனங்கண்டு அதற்கேற்ற தாதிய நோய் நிதானத்தைத் தயாரித்து தனது அறிவு, ஆற்றல், அனுபவம் என்பவற்றுக்கேற்பக் கட்டுக்கோப்புக்குள் அமைந்த திட்டமிடலைத் தயாரித்து அதனை நடைமுறைப்படுத்தி அதன் மூலம் பெறும் பெறுபேறுகளைக் கணிப்பிடுவதில் கைதேர்ந்தவர்களாக விளங்கி வருகின்றமை, எமது நாட்டின் சுகாதார கல்வித் துறை வளர்ச்சியின் உயர்நிலையாகவே கருதப்பட வேண்டும்.

நவீன தாதியத்தை உலகுக்குக் காட்டிய தெய்வமாம் புளோரன்ஸ் நைற்றிங்கேலினால் பல்வேறு கஷ்டங்களுக்கு மத்தியில் வளர்த்தெடுக்கப்பட்ட தாதியத்துறை, இன்று பல்வேறு பரிணாமங்களில் வளர்ச்சியடைந்து உயர்ந்து நிற்கின்றது. கல்வித் தகைமைகளிலும் மேலோங்கி நிற்கின்றனர். ஒரு தாதியினுடைய வெளிப்படுத்தல் நன்றாக இருக்க வேண்டுமெனில் அவர் நல்ல கல்வித் தகைமை, சிறந்த மனப்பாங்கு, ஆற்றல் நிரம்பப் பெற்றவராகத் திகழ வேண்டும். இதில் ஒவ்வொரு தாதியரும் கவனம் செலுத்த வேண்டியது காலத்தின் கட்டாயம் ஆகும். ஏனைய துறையினரைப் போன்று தாதியத் துறையினரும் வல்லுநர்களாகத் திகழவேண்டும். விஞ்ஞானமாணி, முதுவிஞ்ஞானமாணி, முதுதத்துவமாணி என கல்வி நிலையில் உயரவேண்டும்.

மேலும் தாதியர் தமது வேலைத் திட்டத்தில் நோயாளிகள், வைத்திய நிபுணர், வைத்தியர்கள், சக ஊழியர்கள், மருந்தாளர், தொழில்நுட்ப வல்லுநர்கள் எனப் பல தரப்பட்டவர்களுடன் இணைந்து ஒரு குழு உணர்வுடன் செயற்படும் நபராகவே திகழ்கின்றனர். மேலும் நல்ல இடைத் தொடர்பாடலைப் பேணி, சிறந்த உறவை பேணுபவராகவும் திகழ்கின்றனர். மனித வாழ்க்கையின் தரத்தை உயர்த்துவதில் தாதியரின் பங்கு மிகவும் காத்திரமானது. கர்ப்பகால கவனிப்பு, பிரவசம், பிரசவத்துக்குப் பிந்தியகவனிப்பு, நோய்த்தடுப்பு போன்ற பணி நிலைகள் அவசியமாகின்றன. எவ்வாறெனினும் ஒருவருக்கு குறித்தொதுக்கப்பட்ட நிர்ணயிக்கப்பட்ட வேலைத்திட் டத்தை விட அதற்கு மேல் அதிகரிக்கும் போது அவர்களது மனநிலையிலும் சிறிய பிறழ்வு நிலை காணப்படும். அது போலவே தாதியரும் பணிச் சுமை அதிகமாயினும் சூழ்நிலைகள் மன நிலைகளில் செல்வாக்குச் செலுத்தி தமது பணிகளை முன்னெடுக்கின்றனர். எனினும் தமது செயற்பாடுகள், வார்த்தைப் பிரயோகங்கள், தொடர்பாடல், பராமரிப்புப் பணிகளில் அதிக கவனம் செலுத்திச் சிறந்த தாதியப் பராமரிப்பை வழங்குதல் தாதியரின் தலையாய கடமையாகும்.

தாதியர் தம்மை சேவைக்கு என அர்ப்பணித்து இரவு பகல் பாராது கண்துஞ்சாது தமது குடும்பப் பொறுப்புக்களையும் பாராது நோயாளியின் சுகத்தில் தாமும் சுகம் கண்டு வேதனம் என்பதற்கு மேலாக கடவுளுக்குச் செய்யும் சேவையாக நோயாளியைத் தெய்வவடிவில் கண்டு தாதியப் பராமரிப்பை வழங்கி ஆத்ம திருப்தியையும் தொழில் திருப்தியையும் நிரம்ப பெறுகின்றனர். தாதியரது உரிமைகள், கௌரவங்களைப் பெற்றுக் கொடுப்பதில் உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் பல்வேறு சங்கங்கள் நிறுவனங்கள் பணியாற்றி வருகின்றன.

**நேற்று முன்தினம் அன்னை புளோரன்ஸ் நைற்றிங்கேலின் நினைவு தினம்.**

**நவீன தாதியத்தை உலகுக்குக் காட்டிய தெய்வமாம் புளோரன்ஸ் நைற்றிங்கேலினால் பல்வேறு கஷ்டங்களுக்கு மத்தியில் வளர்த்தெடுக்கப்பட்ட தாதியத்துறை இன்று பல்வேறு பரிணாமங்களில் வளர்ச்சியடைந்து உயர்ந்து நிற்கின்றது.**

தாதிய ஆராய்ச்சி முடிவுகளை ஆராய்ந்து அவற்றை நடைமுறைப்படுத்தி அவற்றை உலகளாவிய ரீதியில் கொள்கைகளாகப் பிரகடனப்படுத்துவதில் உலக சுகாதார ஸ்தாபனத்தினுடைய பங்கு அளப்பரியது. தாதியம் ஒரு தொழிலாக மட்டுமன்றி கலையாக, விஞ்ஞானமாக, உத்தியோகமாகத் திகழ்கிறது. பதிவுசெய்யப்பட்ட தாதியானவர் தமது கல்வித் தகைமையிலும் தாதிய பராமரிப்பிலும் பணிபுரியும் ஆற்றலிலும் சகலருடனான தொடர்பாடலைச் சிறந்த முறையில் பேணுபவராகவும் இருத்தல் வேண்டும். இயலக்கூடிய வகையில் உடல், உள, ஆத்மீக சமூக முன்னேற்றத்துக்கு வழிசமைக்கும் பராமரிப்பையும் வழங்கி, உலகில் தாதியம் சிறந்த முறையில் செயற்படவும், தாதியப் பராமரிப்பு சிறக்கவும் அதன் மூலம் நல்லதொரு சமூகம் கட்டியெழுப்படுவதிலும் தாதியர் முழு மனத்துடன் அர்ப்பணிக்கப்பட்ட சேவை வழங்க வேண்டும். தன் னலம் கருதாது பயனை எதிர்பாராத சேவையை வழங்குவோம் என எமது தாதிய தெய்வம் அன்னை புளோரன்ஸ் நைற்றிங்கேல் இந்த உலகைவிட்டு புகழுடம்பு தாங்கி சமாதி அடைந்த இந்த நாளில் உறுதி கூறி நிற்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*மவ்பிம ஞாயிறு இதழில், ஜனாதிபதி சட்டத்தரணி ஹேமந்த வர்ணகுலசூரிய எழுதிவரும் பத்தி வரிசையில் இந்த வாரம் வெளியான பத்தியின் தமிழாக்கம் இது.*

**தமிழில் வீ.எஸ்.ரீ**

# தண்டனையிலிருந்து தப்பித்துக்கொள்ளும்

## அரசியல் அதிகாரத் தரப்பினர்

நாடு சுதந்திரமடைந்து 67 ஆண்டுகள் கடந்து விட்டன. நாம் பின்நோக்கிப் பார்ப்போமானால் ஒன்று மட்டும் தெளிவாகிறது. அது, எமது நாட்டில் மிக நேர்மையான, ஊழல் எதுவும் மேற்கொள்ளாத, விசுவாசம் மிக்கவர்களே எமது வாக்குகளின் மூலம் எமது தலைவர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தனர் என்பதேயாகும். ஏனெனில், இலஞ்சம், ஊழல், மோசடிக் குற்றச்சாட்டுக்கள் காரணமாக தண்டனை பெற்று சிறைவாசம் அனுபவித்த ஓர் அமைச்சர் குறித்தோ, அல்லது ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் குறித்தோ, நீங்கள் இதுவரை கேள்விப்பட்டிருக்கிறீர்களா? இல்லையல்லவா? ஆதலால் எமது அரசியல்வாதிகள் மிக்க பரிசுத்தமான அரசியல்வாதிகள் என்ற வகையில் கருதப்பட வேண்டியவர்கள் அல்லவா? ஆனாலும், நாம் அறிந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டம் குறித்துப் பார்த்தால், ஊழலற்ற பேர்வழி என எவராவது இருப்பின், அவர்கள் ஓரிருவர் என்ற கணக்குக்குள்ளேயே அடங்குவர். அப்படியானால் ஏனைய ஊழல் பேர்வழிகளுக்கு எதிராக வழக்குத் தொடுத்து குற்றவாளிகள் என நிரூபிக்க இயலாதிருப்பதேன்? அதற்குக் காரணம் அவர்கள் அரசில் அங்கம் வகித்தவாறே ஊழல்களில் ஈடுபடுவதாகும். அவர்களது அரசே அதிகாரத்தில் இருப்பதால் அவர்கள் அனைவரும் ஒன்றிணைந்து, ஒவ்வொருவருக்கும் ஊழல் மேற்கொள்ள வாய்ப்பளித்து ஊழல் மேற்கொள்வோரைப் பாதுகாக்கின்றனரல்லவா? சட்டமே அவர்கள் நினைத்தவாறே அமைகிறது. இதனைத்தான் அரசியல் விடுதலை எனக் கொள்ள முடிகிறது.



எனது சிறுவயதில், இந்த நாட்டின் அரசியல் தலைவர்கள் இலஞ்சம் பெறுகிறார்கள் என்ற குற்றச்சாட்டையோ, இலஞ்சம் வழங்கினால் எந்தவொரு விடயத்தையும் நிறைவேற்றிக் கொள்ளஇயலுமென்ற கதையையோ நான் ஒருபோதும் கேள்விப்பட்டதில்லை. எனது தந்தையார் லொறி வாகனமொன்றின் உரிமையாளராய் இருந்து வந்தார். பொருள்களை ஏற்றி இறக்கும் ஒப்பந்தங்களை, ஏனைய லொறி வாகன உரிமையாளர் மற்றும் விநியோகஸ்தர்களுடன் போட்டி போட்டுப் பெற்றுக்கொள்ளும் கேள்வி மனுக்கோரல் நடைமுறையினூடாகவே என் தந்தையார் பெற்றுத் தமது தொழிலை மேற்கொண்டு வந்தார். அன்றைய காலகட்டத்தில் இத்தகைய கேள்வி மனுக்கோரல் நடைமுறையில் மோசடிகள் எதுவும் இருந்ததில்லை. அந்த அளவுக்கு அந்த நடைமுறை, சட்ட ஒழுங்கு முறைப்படி முன்னெடுக்கப்பட்டது. அந்த வேளையில் அத்தகைய நடைமுறைச் செயற்பாடுகளில் அரசியல் தலைவர்களது தலையீடு எதுவும் இருந்ததில்லை. அது அன்றைய அரசியல் கலாசாரமாக இருந்து வந்துள்ளது.

அரசியல் தலைவர்கள், பொதுமக்கள் தரப்புக்கு தேவைப்பட்ட சிற்சில வாய்ப்புக்களையும் சலுகைகளையும் பெற்றுக்கொடுத்து அதற்குப் பிரதியுபகாரமாக இலஞ்சம் பெற்றுக்கொள்ளும் நடைமுறை 1956ஆம் ஆண்டிலேயே தலையெடுத்தது. சந்தோஷம் எனக் குறிப்பிட்டு சிறுதொகை முதல் பெரிய தொகை வரை இலஞ்சமாகப் பெற்றுக்கொள்ள அரசியல் தலைவர்கள் பழகிக்கொண்டனர். அதேவேளை, அவ்விதம் இலஞ்சம் வழங்கி தமது தேவைகளை நிறைவேற்றிக் கொண்ட பொதுமக்கள் கூட அதில் தவறேதும் இல்லை என்ற விதத்தில் அதனைச் சாதாரணமானதொரு விடயமாகவே எடுத்துக் கொண்டனர். தமது பிள்ளைகளுக்கு வேலை வாய்ப்பு, அல்லது ஒப்பந்தமொன்றைப் பெற்றுக் கொள்வதற்காக ஒரு சந்தோஷம் வழங்குவதில் தவறேதுமில்லை என்ற கருத்து பொதுமக்கள் மத்தியில் நிலவியது.

1956 ஆம் ஆண்டில் இலங்கையில் நிகழ்ந்த அமைதிப்புரட்சி மூலம் சிங்கள மொழி மட்டும் அதிகாரத்தில் அமர்ந்தது என்று கூறிவிட இயலாது. அந்த அமைதிப் புரட்சியின் பின்னரே இலஞ்சமும் ஊழலும் அரச நிர்வாகத்தில் தலையெடுத்தன. தமது அரசில் அங்கம் வகித்த நாடாளுமன்ற உறுப்பினர்களது இலஞ்சம் பெறும் செயற்பாடுகளால் அரசு, மக்கள் மத்தியில் மதிப்பிழந்து போவதை அவதானித்த அவ்வேளைய பிரதமர் எஸ்.டபிள்யூ. ஆர்.டி பண்டாரநாயக்க, இலஞ்ச ஊழல் செயற்பாடுகளை ஒழித்துக் கட்டும் நோக்கில் தமது மனைவி சிறிமாவோவின் நெருங்கிய உறவினரும், உயர் சட்டத்தரணியுமான வோல்டர் தல்கொடபிட்டியவின் தலைமையில் ஆணைக்குழுவொன்றை நியமித்தார். குறித்த ஆணைக்குழுவிடம் 1948 ஆம் ஆண்டு முதல் 1958 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியில் அரசதுறைகளில் இடம்பெற்ற ஊழல், மோசடிகள் குறித்து விசாரணை செய்வதற்கான பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது. 1958ஆம் ஆண்டுக்கு முன்னர் அதிகாரத்தில் இருந்த ஐ.தே.கட்சிக்காரர்கள் மேற்கொண்ட ஊழல் மோசடிகள் குறித்தும் விசாரணை மேற்கொண்டு, தமது தற்போதைய ஆட்சியில் ஊழல் மோசடிகள் மலிந்து போய்விட்டதாகக் குற்றஞ்சாட்டும் ஐ.தே.கட்சியினரின் வாயை அடைப்பதே அந்தத் திட்டமாக அமைந்தது. ஐ.தே.கட்சியின் முக்கிய தலைவர்களான சேர்.ஜோன்.கொத்தலாவலை, டட்லி சேனநாயக்க, மற்றும் ஐ.தே.கட்சியின் முன்னைய சிரேஷ்ட அமைச்சர்கள் குறித்து எத்தகைய ஊழல் மோசடிக் குற்றச்சாட்டுக்களும் ஆணைக்குழுவுக்குக் கிட்டியிருக்கவில்லை. ஆனால் பிரதமர் எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டார நாயக்கவுக்கு எதிராக 25 ஆயிரம் ரூபா இலஞ்சமாகப் பெற்றுக் கொண்டதான குற்றச்சாட்டு ஆணைக்குழுமுன் முன்வைக்கப்பட்டிருந்தது. ஆணைக்குழு அது குறித்து விசாரணை செய்ய ஆரம்பித்த வேளை பண்டாரநாயக்க உயிரிழந்து விட்டிருந்தமையால், விசாரணை கைவிடப்பட்டது. ஆனால் பண்டாரநாயக்க தலைமையிலான அரசில் அங்கம் வகித்த ஆறு அமைச்சர்களுக்கு எதிரான இலஞ்சக் குற்றச்சாட்டுக்களை ஆணைக்குழு விசாரணை செய்து அவர்களைக் குற்றவளிகளாகக் கண்டபோதிலும், அவர்களுக்குத் தண்டனை வழங்கும் அதிகாரம் நாடாளுமன்றத்தின் வசமே இருந்தது. அந்த வகையில் அவர்களுக்குத் தண்டனை வழங்கும் அதிகாரம் அவ்வேளைய பிரதமர் சிறிமாவோ வசமே இருந்த போதிலும்,சிறிமாவோ அவர்களைத் தண்டனையிலிருந்து காப்பாற்றும் விதத்திலேயே செயற்பட்டார். ஆணைக்குழுவால் குற்றவாளியாக இனம் காணப்பட்ட டி.எம்.மொன்னாகுலம என்ற அமைச்சருக்கு அடுத்து வந்த பொதுத் தேர்தலில் போட்டியிட வாய்ப்பளித்தார். அது மட்டுமன்றி குறித்த அமைச்சர் தமது தேர்தல் பரப்புரைகளின்போது தாம் இலஞ்சம் பெற்றமை உண்மையே எனவும், வாக்காளர்களிடமிருந்து சிறுதொகைப் பணத்தைப் பெற்றுக்கொண்டு அவர்களது தேவையை நிறைவேற்றிக் கொடுப்பதில் தவறேதும் இல்லையென்றும் பகிரங்கமாகக் கூறிவந்தார். இதில் ஆச்சரியப்படவேண்டிய விடயம் என்னவெனில், அவரது அந்த நிலைப்பாடு சரியானதே என்ற அவ்வேளைய வாக்காளர்களது மனப்போக்கு, குறித்த தேர்தலில் குருநாகல் தேர்தல் தொகுதியில் போட்டியிட்ட அவரை அதிகப்பெரும்பான்மைவாக்குகளால் மீண்டும் தெரிவு செய்ததன் மூலம் வெளிப்பட்டது. அதைக் கேள்வியுற்றவேளை இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் தலைவர் என்ன எண்ணியிருப்பாரோ எனக் கருதத் தோன்றுகிறது. ஆனால் 1965 ஆம் ஆண்டில் பதவியேற்ற டட்லி சேனநாயக்காவின் கூட்டு அரசால் நிறைவேற்றப்பட்ட சட்ட வரைவொன்றின் கீழ் குறிப்பிட்ட அந்த ஐந்து நாடாளுமன்ற உறுப்பினர்களது குடியுரிமை பறிக்கப்பட்டுத் தண்டிக்கப்பட்டனர்.



அந்த வகையில் 1956 ஆம் ஆண்டுக்குப் பின்னர், குற்றமிழைத்தோர் தண்டிக்கப்பட வேண்டுமென்ற கொள்கை நிலைப்பாடு மாற்றமுற்று, அரசியல் செல்வாக்கு உள்ள அரசியல் தலைவர்களது ஆதரவைப் பெற இயலாதவர்களே தண்டனையை அனுபவிக்க நேர்கிறது என்ற புதிய நிலைப்பாடு இலங்கையில் நிலை பெற்றது. அந்த வகையில், குற்றமிழைத்தோர், ஊழல் புரிந்தோர், லஞ்சம் பெற்றோர் என்போரைத் தண்டனையிலிருந்து பாதுகாப்பது அரசியல் அதிகாரம் கொண்டோரின் வழக்கமாக ஆகிவிட் டுள்ளது.

சந்திரிகா ஜனாதிபதியாகப் பதவி வகித்த வேளையில் இடம்பெற்ற படுகொலைகள் அனைத்தும் பாதாள உலகக் கோஷ்டியினரால் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டவை என விமர்சிக்கப்பட்டபோதிலும், அவை குறித்து விசாரணைகள் மேற்கொண்டு குற்றவாளிகளைத் தண்டிக்க சந்திரிகாவின் அரசு கவனம் எடுத்துச் செயற்பட்டதாக இல்லை. பிரபல வழக்கறிஞரும் அரசியல்வாதியுமான குமார் பொன்னம்பலம், ஊடகவியலாளரான ரோகண குமார ஆகியோர் சந்திரிகாவின் ஆட்சிக் காலத்திலேயே படுகொலை செய்யப்பட்டனர். படுகொலைச் சம்பவங்களின் பின்னணியில் பிரபல பாதாள உலகக் கோஷ்டியினரே சம்பந்தப்பட்டிருப்பதாக உறுதிப்படுத்தப்பட்ட போதிலும், அவர்களில் எவரும் கைது செய்யப்படவோ சட்டத்தின் முன் நிறுத்தப்படவோ இல்லை. மாறாக அவர்களில் ஒரு தரப்பினர் வெளிநாடுகளுக்குத் தப்பிச் சென்றனர். மற்றொரு தரப்பினர் அரச உயர்மட்ட அரசியல் தலைவர்களது ஆதரவாளர்களாக ஆகிவிட்டிருந்தனர். மிக அண்மைய கொட்டாஞ்சேனை படுகொலைச் சம் பவத்தின் பின்னணியில் கூட பாதாள உலகக் கோஷ்டியினரே சம்பந் தப்பட்டிருந்ததாக உறுதிப் படுத்தப்பட்டது.

எனவே இந்த விடயத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இறுக்கமான விசாரணைகளை மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொண்டு பாதாளஉலகக்கோஷ்டியினரை நாட் டுக்குள் உருவாக்கியவர்கள் எவர்களென்பதையும், அவர் களுக்கான வசதி வாய்ப்புக்களை ஏற்படுத்திக்கொடுத்த அரசியல் வாதிகள் எவரெவர் என்பதையும் இனங்கண்டு அவர்களுக்கு எதிரான அவசிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியது நல்லாட்சியின் தேவையாக ஆகியுள்ளது.

நாமறிந்த காலம் முதல் அரச அதிகாரத்தைக் கொண்டிருப்போர் தமது அதிகார பலத்தை முன்னிறுத்தி கொலை, ஊழல், மோசடிகளை முன்னின்று மேற்கொள்ளும்போது, அவர்களுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ளவோ, சுதந்திரமான விசாரணைகளை மேற்கொள்ளவோ இயலாது போய்விடுகிறது. அதன் மூலம் சகல குற்றங்களின்றும், இலஞ்ச ஊழல் செயற்பாடுகளிலிருந்தும் அவர் களால் தப்பித்துக் கொள்ள முடிவதற்கான காரணம் அவை அரச உயர்மட்ட ஆதரவுடன் இடம்பெறும் செயற்பாடுகள் என்பதனால் ஆகும். அந்த வகையில். நாடு சுதந்திரம் அடைந்த நாள்முதல் இன்றுவரை இத்தகைய குற்றங்களை மேற்கொண்ட அரசியல்வாதிகள் எவரும் இந்த நாட்டின் அரசியல் வரலாற்றில் இருந்ததில்லை எனப் பொருள்படுகிறது. அரச உயர் அதிகாரத் தரப்பு என்னதான் காரணம் கற்பித்தாலும், இத்தகைய குற்றமிழைக்கும் அரசியல்வாதிகள் திருந்தக் கூடுமென உங்களால் எண்ண முடிகிறதா? இவர்கள் தூய்மையான அரசியல்வாதிகளாகமாறும்வரை இவர்களுக்கு எதிராகக் குரல் கொடுத்து, போராட்டம் மேற்கொள்ள வேண்டியது நாட்டு மக்களது கடமை எனக்கருத வேண்டியுள்ளது.இந்த விடயத்தில் இன்று இருட்டில் தூரத்தே, ஒரு ஒளி விளக்குத் தென்படு கிறது. அது ஜனாதிபதி மைத் திரிபால சிறிசேனவினது நல்லாட்சி என்ற ஒளி விளக்கே.




**அந்த வகையில் 1956 ஆம் ஆண்டுக்குப் பின்னர் குற்றமிழைத்தோர் தண்டிக்கப்பட வேண்டுமென்ற கொள்கை நிலைப்பாடு மாற்றமுற்று, அரசியல் செல்வாக்கு உள்ள அரசியல் தலைவர்களது ஆதரவைப் பெற இயலாதவர்களே தண்டனையை அனுபவிக்க நேர்கிறது என்ற புதிய நிலைப்பாடு இலங்கையில் நிலைபெற்றது.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரக்கறிகளின் நேற்றைய விலை நிலவரம்

| | மருதனார் மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல் வேலி | கிளிநொச்சி | மன்னார் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 40 | 60 | 40 | 60 | 60 | 60 | 60 | 35 |
| கத்தரி | 80 | 80 | 80 | 80 | 50 | 60 | 80 | 40 |
| கரட் | 140 | 140 | 100 | 100 | 180 | 160 | 140 | 160 |
| மரவள்ளி | 70 | 50 | 60 | 40 | 60 | 40 | 60 | 45 |
| பயிற்றை | 100 | 80 | 60 | 100 | 60 | 40 | 140 | 100 |
| பாகல் | 160 | 140 | 100 | 140 | 100 | 120 | 120 | 100 |
| கருணைக்கிழங்கு | 120 | 100 | 100 | 120 | 120 | 80 | 120 | 70 |
| பெ.வெங்காயம் | 120 | 100 | 120 | 100 | 90 | 120 | 120 | 100 |
| சி.வெங்காயம் | 80 | 100 | 100 | 60 | 80 | 80 | 80 | 70 |
| பூசணி | 40 | 30 | 50 | 40 | 40 | 40 | 60 | 40 |
| தக்காளி | 100 | 200 | 100 | 80 | 120 | 120 | 100 | 70 |
| வாழைக்காய் | 60 | 60 | 50 | 50 | 60 | 40 | 60 | 30 |
| கீரை | 30 | 30 | 30 | 80 | 20 | 30 | 35 | 20 |
| பொன்னாங்காணி | 25 | 40 | 30 | 20 | 20 | 40 | 15 | 10 |
| பச்சை மிளகாய் | 250 | 200 | 250 | 140 | 220 | 400 | 120 | 150 |
| புடோல் | 50 | 40 | 50 | 40 | 60 | 40 | 80 | 50 |
| கோவா | 100 | 100 | 80 | 80 | 80 | 80 | 100 | 70 |
| வெண்டி | 60 | 40 | 50 | 80 | 70 | 80 | 80 | 25 |
| போஞ்சி | 160 | 150 | 180 | 160 | 140 | 160 | 180 | 120 |
| லீக்ஸ் | 100 | 140 | 160 | 80 | 80 | 80 | 120 | 80 |
| தேங்காய் | 50 | 40 | 50 | 50 | 60 | 40 | 50 | 35 |
| உருளைக்கிழங்கு | 90 | 80 | 100 | 80 | 80 | 90 | 100 | 100 |
| தேசிக்காய் | 80 | 60 | 80 | 50 | 60 | 60 | 150 | 100 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 10 | 40 | 20 | 20 | 10 |
| கறிமிளகாய் | 160 | 140 | 120 | 140 | 180 | 160 | 160 | 80 |
| இராசவள்ளி | 120 | 140 | 200 | 160 | 140 | 120 | 180 | 80 |
| முருங்கைக்காய் | 100 | 100 | 100 | 60 | 100 | 90 | 120 | 100 |

# வயிற்றில் புண் ஏற்பட என்ன காரணம்?



குடலின் மேற்பரப்பில் உள்ள மியூகோஸா படலம் என்ற சவ்வு நாள்பட்ட, எரிச்சல் உண்டாக்கும் அதிக அமில சுரப்பினால் பாதிக்கப்பட்டு சிதைந்து விடும். அதிக அமிலச் சுரப்பு மற்றும் பெப்சின் (ஜீரண என்சைம்) சுரப்பினாலும், காரமான மசாலா மற்றும் பொரித்த உணவுகளாலும் புண்கள் தோன்றும். வயிற்றின் ஓரங்களில் ஓட்டை ஏற்பட்டு புண்கள் உரு வாகும்.

அவசரம், குழப்பம், பதற்றம், கவலை, பொறாமை, காரசாரமான உணவு, மசாலா என்பவற்றால் அதிக அமிலம் சுரந்து சுரக்க வைத்து, வயிற்றில் புண்களை உண்டாக்கும். வயிற்று அல்சர்களைத் தோற் றுவிக்கும் இன்னொரு முக்கிய காரணம் (ஹெலி கோபேக்டர் பைலோரி) என்ற ஒரு வகை பக்றீரியா.

இந்தப் பக்றீரியா அசுத்தமான சூழ்நிலை, குடிதண்ணீர், உணவுப் பொருள்களால் பரவுகிறது. வயிற்றில் அமிலத்தை நீர்க்க வைத்து, கேஸ்ட்ரைடீஸ் எனும் வீக்கத்தை உண்டாக்கி, நாளடைவில் இந்த கேஸ்ட்ரைடீஸ், அல்சராக மாற இந்த எச்.பைலோரி கிருமிகள் உதவுகின்றன. அதிக அளவு மது அருந்துதல், புகைபிடித்தல், தவறான உணவுப்பழக்கங்கள், நேரம் காலமின்றி உண்பது, அசுத்தமான பழக்கங்கள், கைகழுவாமல் உணவு உண்பது, நகத்தைக் கடிப்பது, அதிக தேநீர் குடிப்பது. அஸ்பிரின் போன்ற மருந்துகள். மனஅழுத்தம், குழப்பம், மன பரபரப்பு, அடிக்கடி உணர்ச்சி வசப்படுதல் ஆகியவற்றைத் தவிர்த்தால், வயிற்றில் புண் ஏற் படுவதைத் தவிர்க்கலாம்.

# கடலுணவுகளின் நேற்றைய விலை நிலவரம்

| | யாழ்ப் பாணம் | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித் துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 700 | 800 | 700 | 500 | 500 |
| நண்டு | 300 | 400 | 400 | 300 | 150 | 400 |
| கணவாய் | 650 | 600 | 700 | 600 | 600 | – |
| பாரை | 600 | 700 | 600 | 450 | 500 | 400 |
| சுறா | 600 | 600 | 500 | 600 | 600 | – |
| சீலா | 250700500 | | 400 | 450 | 450 | 350 |
| விளை | 600 | 450 | 450 | 500 | 450 | 350 |
| முரல் | 300 | 400 | 300 | 300 | 150 | 300 |
| கும்பிளா | 400 | 400 | 400 | 400 | – | – |
| கிழாக்கன் | 500 | 800 | 700 | 500 | 400 | – |
| ஓரா | 400 | 350 | 300 | 450 | 300 | – |
| திரளி | 250 | 300 | 200 | 300 | 100 | – |
| நகரை | 200 | 300 | 300 | 300 | 100 | 300 |
| சூடை | 150 | 200 | 130 | 120 | 150 | 70 |
| ஒட்டி | 200 | 250 | 300 | 300 | – | 200 |
| திருக்கை | 150 | 350 | 200 | 250 | 200 | 130 |
| பாலை | 400 | 350 | 400 | 400 | – | 300 |
| வாழை | 100 | 200 | – | 300 | – | – |
| கொய் | 100 | 200 | 150 | 100 | 50 | – |
| மதனம் | 150 | 250 | 200 | 280 | 300 | – |

## நாளை

**ஆடி-31**
**ஞாயிற்றுக்கிழமை**
**16.08.2015**

**திதி:** துதியை பி.இ.12.11
**நட்சத்திரம்:** பூரம் முழுவதும்
**சுபநேரம்:** 9.05–10.35
**இராகுகாலம்:** 4.35–6.05

## இரக்கம் கொள்ளுங்கள்

## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



எனது குழந்தைகளே! இரக்கம் கொள்ளுங்கள். ஏழைகள், அறியாமையில் இருப்பவர்கள், தாழ்த்தப்பட்டவர்கள் ஆகியவர்களுக்காக இரக்கம் கொள்ளுங்கள். இதயமே நின்று போகும் வரையிலும், மூளை கொதித்துப் போகும் வரையிலும் இரக்கம் கொள்ளுங்கள்.

சுயநலம் அற்றவர்களாக இருங்கள். ஒரு நண்பன் மற்றொருவரைத் தனிமையில் தூற்றுவதை ஒருபோதும் கேட்டுக் கொண்டிருக்காதீர்கள்.

மற்றவர்களுக்காக நாம் மேற்கொள்ளும் மிகக் குறைந்த அளவு உழைப்பும் நமக்குள்ளே இருக்கும் சக்தியைத் தட்டி எழுப்புகிறது.

# சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 5 | | | 8 | | | 3 | |
| 1 | 6 | | | | 5 | | 7 | 4 |
| | | | 9 | | | | 6 | |
| | 4 | | | 7 | | 1 | | 2 |
| | | | | | | | | |
| 5 | | 1 | | 6 | | | 4 | |
| | 7 | | | | 8 | | 1 | |
| 4 | 1 | | 7 | | | | 2 | 3 |
| | 3 | | | 1 | | | 9 | |

நேற்றைய சுடோக்கின் விடை


| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | 4 | 2 | 9 | 6 | 5 | 3 | 1 | 8 |
| 6 | 3 | 9 | 2 | 8 | 1 | 4 | 5 | 7 |
| 8 | 1 | 5 | 7 | 4 | 3 | 6 | 2 | 9 |
| 3 | 2 | 8 | 1 | 5 | 6 | 9 | 7 | 4 |
| 9 | 6 | 4 | 8 | 2 | 7 | 5 | 3 | 1 |
| 1 | 5 | 7 | 4 | 3 | 9 | 2 | 8 | 6 |
| 4 | 7 | 1 | 3 | 9 | 2 | 8 | 6 | 5 |
| 5 | 9 | 3 | 6 | 7 | 8 | 1 | 4 | 2 |
| 2 | 8 | 6 | 5 | 1 | 4 | 7 | 9 | 3 |

**சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்கு படுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3 ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது.(உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க் கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆங்கில எழுத்துக்களின் பெயர்ப் பலன்கள்





**I எழுத்துக்காரர்கள் வெற்றியாளர்கள்:**

Iயில் பெயர் தொடங்குபவர்கள் வெற்றிக் கனியைப் பறிப்பவர்கள். மனோதிடம் கொண்டவர்கள். தெளிவான சிந்தனை உடையவர்கள். தோல்விகளைத் துச்சமாக மதிப்பவர்கள். கடின உழைப்பும் காந்த சக்தியுடைய கண்களும் கொண்டவர்கள். அரச, அரசியல் செல்வாக்கும், வாக்குச் சுத்தமும் உள்ளவர்கள். இந்த எழுத்தில், கதிரவனின் கதிர்கள் பட்டு, இடமும் வலமும் சிதறுவதால், உறுதியும் குழப்பமும் சம அளவில் கொண்டவர்களாக இருப்பார்கள். அனைவரையும் அரவணைத்துச் செல்லும் குணம் இருக்கும். இவர்களுக்கு அரசியல் செய்வது மிகவும் பிடித்த விடயம். அதிகாரம் செலுத்துவதில் மிக முனைப்பாக இருப்பர். யுகத்தின் அடிப்படையில் காரியமாற்றி வெற்றியடைவர். ரோஷக் காரர்களான இவர்களிடம், உங்களால்தான் எல்லாம் நடக்கிறது என அவரது புகழ் பாடினால், எமக்கு என்ன உதவி வேண்டுமானாலும் செய்வர்.

இடைவிடாத உழைப்பால் பெரும் பதவியையும் பொருளாதார ஏற்றத்தையும் அடைந்துவிடுவர். பொறாமைக்காரர்களைக் கண்டால் பொசுக்கி விடுவர். அந்த அளவுக்குப் புறங்கூறுதல் இவர்களுக்குப் பிடிக்காத காரியமாகும். இவர்களுக்குச் சூடான, காரம் அதிகமுள்ள உணவு வகைகள் பிடிக்கும். கௌரவப் பிரச்சினையால் பல நண்பர்களை இழக்கவேண்டி வரலாம். இவர்களின் குணாதிசயம் போன்றே உடல்வாகும் நன்றாகவே இருக்கும். எந்தக் காரணத்தை முன்னிட்டும் சுய கௌரவத்தை விட்டுக்கொடுக்க மாட்டார்கள். எதிர்ப்புகளைத் துச்சமாக மதிக்கும் இவர்களுக்கு, கண்கள் எரிச்சலாக இருக்க வாய்ப்பு உண்டு. எந்தச் செயலிலும் தீர்க்கமான சிந்தனைக்குப் பின் இறங்குவதால், தோல்வி என்பது மிகக் குறைவு.

இவர்களுக்கு அரச பதவி எளிதில் கிடைத்துவிடும். பணியில் ஏனோ, தானோ என்று இருப்பதில்லை. நேர்மை, நீதி, நியாயம், கண்ணியம், நாட்டு நலன் – இவற்றைக் கடைப்பிடித்து நற்பெயர் பெறுவர். அடிமைப்படுவது என்பது அறவே பிடிக்காது. மாபெரும் நிறுவனங்களை உருவாக்கி நிர்வாகம் செய்யும் இவர்கள், தமது குடும்பத்தினருக்கும் நேரம் ஒதுக்குவது, அவர்களைக் குதூகலமடையச் செய்யும். தமது நுண்ணிய அறிவால் பலரும் அறியாத விடயங்களை வெளிக்கொண்டு வருவர். சாஸ்திரம், வானியல், மருத்துவம், இசை, சினிமா, பத்திரிகைத்துறை போன்றவற்றில் சரித்திரம் படைப்பார்கள்.

பொருளாதார ரீதியாக இளம் வயதில் துன்பப்பட்டாலும் 40 வயதுக்கு மேல் இந்தப் பணத்தை வைத்துக்கொண்டு என்ன செய்வது எனப் புலம்பும் அளவுக்குச் சம்பாதிப்பர். கிராமங்களில் இவர்களுக்கு நாட்டு வக்கீல் எனப் பெயருண்டு. அந்த அளவுக்கு மிகச் சரியான நீதி வழங்குவர். நற்பண்புகளால் மற்றவர்களை எளிதில் தங்கள் பக்கம் இழுத்துவிடுவர். தாம் வசிக்குமிடத்தில் அழகும், ஒழுங்கும், உயர்வும் இருக்க வேண்டும் என நினைப்பர். சமூகத்தில் ஒதுக்கப்பட்டவர்கள், ஏழை எளியோருக்கு இவர்கள்தான் உதவியாளர்கள் எனக் கூறலாம். அந்த அளவுக்குப் பொது நிறுவனங்கள் நடத்தி, நலிந்தோரை வாழவைக்கத் தன்னால் ஆன முயற்சிகளை மேற்கொள்வர் I எழுத்தில் பெயர் அமைந்தோர் புத்திசாதுரியமானவராக இருப்பர் என்பதில் ஐயமில்லை.

# பெண்களுக்குப் பிடிக்காதவை

ஆண்களுக்குப் பிடித்த ஒருசில செயல்கள் பெண்களுக்குப் பிடிக்காது, பெண்களுக்குப் பிடித்த செயல்கள் ஆண்களுக்குப் பிடிக்காது. ஆனால் திருமணம் அல்லது காதல் கிட்டிவிட்டால், ஒருசிலவற்றை பொறுத்துக் கொண்டுதான் செல்ல வேண்டும். அவ்வாறு நடந்தால் தான், வாழ்க்கை நன்கு சுமுகமாக செல்லும். சரி, இப்போது ஆண்களுக்கு மிகவும் பிடிக்கும், பெண்களுக்கு பிடிக்காத செயல்களில் சிலவற்றை பார்ப்போம்.

வீட்டை அசுத்தமாக வைத்துக் கொள்வது தான் ஆண்களின் செயல்களில் மிகவும் மோசமானது. அவர்கள் எப்போதுமே தங்களது அறைகளை ஒரு குப்பை போன்று தான் வைத்திருப்பார்கள். அதிலும் எந்த ஒரு பொருளும் இருக்க வேண்டிய இடத்தில் இருக்காது. ஆனால் பெண்களுக்கு எப்போதும் சுத்தத்துடன் இருக்க வேண்டும். ஆகவே இத்தகைய மோசமான சூழ்நிலையைப் பார்த்தவுடன், அவர்கள் கோபமடைந்து சண்டை போடுகின்றனர். பெரும்பாலான வீடுகளில் இந்த ஒரு காரணத்துக்காகவே பெண்கள் ஆண்களுடன் சண்டை போடுகின்றனர்.

நிறைய ஆண்கள் தூங்குவதை விரும்புவார்கள். அதிலும் தனிமையில் மனைவி அருகில் இருந்தால் கூட, அதனைப் பொருட்படுத்தாமல், தூங்குவதையே நோக்கமாக வைத்துக் கொண்டு தூங்குவார்கள். அதில் கொடுமை என்னவென்றால், வார இறுதியில் விடுமுறை நாள்களில் மனைவி அல்லது காதலியுடன் நேரத்தை சிறிது நேரம் செலவழிக்காமல், தூங்கிக் கொண்டிருப்பது தான்.

ஆண்கள் அனைவருக்குமே கிரிக்கெட் என்றால் மிகவும் பிடிக்கும். ஆனால் பெண்களுக்கு அறவே பிடிக்காது. ஏனெனில் பெண்கள் நன்கு அழகாக கண்ணைக் கவரும் வகையில் உடை அணிந்து கொண்டு வந்து, கிரிக்கெட் பார்த்துக் கொண்டிருக்கும் ஆண்களிடம் காண்பித்தால், அவர்கள் உடுத்திய ஆடையைக் கவனிக்காமல், ரிவியை வாயைத் திறந்து பார்த்துக் கொண்டி ருப்பதால், பெண்களுக்கு கிரிக்கெட் பிடித்தாலும், பிடிக்காமலே போய்விடுகிறது.



நிறையத் தம்பதியர் சண்டை போடுவதற்குக் காரணம், வீடியோ கேம்ஸ்தான். ஏனெனில் ஆண்கள் பலர் தங்கள் நேரத்தைச் செலவழிக்க வீடியோ கேம்ஸை விளையாடுவார்கள். அத்தகைய விளையாட்டை எப்போதாவது விளையாடினால் பரவாயில்லை. ஆனால் அதனையே எப்போதும் விளையாடிக் கொண்டிருந்தால், எப்படிப் பிடிக்கும்?

இரவில் புத்தகம், படிப்பது பெண்களுக் கும் பிடித்த விடயம்தான். ஆனால் அதே புத் தகத்தை வீட்டில் காலை அல்லது மதிய வேளை யில் படித்தால் பிரச்சினையில்லை. ஆண்கள் பெரும்பா லும் இரவில் படுக்கும் போது மனைவியுடன் பேசிக் கொண்டே தூங்கா மல், புத்தகத்தைப் படித்துக் கொண்டிருந் தால் அது மனைவியை மிகவும் எரிச்சலடையச் செய் யும்.



# தாய்ப்பால் கொடுக்கும் தாய்மாருக்கு

குழந்தை பெற்றெடுத்த தாய்மார்களுக்கு தாய்ப்பால் உற்பத்தி என்பது மிகவும் முக்கியமான ஒன்று. தாய்ப்பால்தான் குழந்தையின் ஆரோக்கியத்தைக் காக்கும் உணவுப் பொருள். அத்தகைய தாய்ப்பால் குறைய ஆரம்பித்தால், உடனே அதற்கான காரணம் என்னவென்று தெரிந்து, அதனைச் சரிசெய்து கொள்ள வேண்டும்.

தாய்ப்பால் கொடுக்கும் பெண்கள் நல்ல ஊட்டச்சத்து நிறைந்த உணவுடன், தாய்ப்பால் சுரப்பை அதிகரிக்கும் உணவுகளைத் தேர்ந்தெடுத்து உட்கொள்ள வேண்டும். அப்படித் தாய்ப்பால் உற்பத்தியை அதிகரிக்கும் சத்துக்களான புரோட்டீன், கல்சியம் போன்றவை உடலில் இல்லாவிட்டால், அது தாய்ப்பால் உற்பத்தியைக் குறைத்துவிடும்.

தாய்ப்பால் கொடுக்கும் காலங்களில் தாய்மார்கள் குடும்பக் கட்டுப்பாட்டு மாத்திரையை எடுத்துக் கொள்ளக் கூடாது. இந்த மாத்திரைகளில் உள்ள ஈஸ்ட்ரோஜன், ஹார்மோன்களில் இடையூறை ஏற் படுத்தி, தாய்ப்பால் உற்பத்தியைக் குறைத்துவிடும்.

தாய்ப்பால் உற்பத்தி குறைவதற்கு கல்சியம் குறைபாடும் ஒரு காரணம். தாய்ப்பால் உற்பத்திக்கு கல்சியம் மிகவும் இன்றியமையாதது.

சீரான இடைவெளியில் குழந்தைக்குத் தாய்ப்பால் கொடுக்காமல் இருப்பதும், தாய்ப்பால் உற்பத்திக்குத் தடையை ஏற்படுத்தும். எனவே ஒவ்வொரு இரண்டு மணிநேரத்துக்கு ஒருமுறை குழந்தைக்குத் தாய்ப்பால் கொடுத்து வர வேண்டும்.

தவறான தாய்ப்பால் கொடுக்கும் முறையினாலும், தாய்ப்பால் உற்பத்தியானது குறையும். ஆகவே குழந்தைக்குத் தாய்ப்பால் கொடுக்கும்போது, அவர்கள் விளையாடுகிறார்கள் என்பதற்காக அவர்களுக்குப் பசிக்கவில்லை என்று எண்ணிச் சரியாகத் தாய்ப்பால் கொடுக்காமல் இருக்காதீர்கள். ஒவ்வொரு முறையும் அவர்கள் வயிறு நிறைய அருந்துமாறு செய்யுங்கள். இல்லாவிட்டால், தாய்ப்பால் சுரப்பியினால் தாய்ப்பாலை சீராகச் சுரக்க முடியாது. மன அழுத்தம் வந்தால் ஹார்மோன்களில் ஏற்றத்தாழ்வுகள் ஏற்பட்டு, இறுதியில் அது தாய்ப்பால் உற்பத்தியில் பாதிப்பை ஏற்படுத்தும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# திருட்டு ஆகாது

பாடசாலைக்குத் தயாராகிக் கொண் டிருந்தாள் சங்கீதா. தற்செயலாக அலுமாரி யின் அருகே ஐநூறு ரூபா பணம் இருந் ததைக் கண்டாள். அப்போது அவளது அம்மா அடுக்களைக்குள் இருந்தாள். சங் கீதா விரைந்து சென்று அந்தப் பணத்தை எடுத்து தனது புத்தகப்பைக்குள் மறைத்து வைத்துக் கொண்டாள்.

'அம்மா நான்போட்டுவாறன்' என்றுகுரல் கொடுத்து விட்டு தெருவில் இறங்கி நடந்தாள். பிரதான வீதியை அடைந்தாள். அங்கு அவளுக்காக பவித்ரா காத்திருந் தாள். அப்போது சங்கீதா, 'பவித்ரா.. ஐஸ் கிறீம் சாப்பிடலாமா? என்று உற்சாக மாகக் கேட்டாள்.' என்னடி திடீரென்று ஐஸ் கிறீம் ஆசையா?

'இங்கே பார் உனக்கு ஐம்பது ரூபாய் ஐஸ் கிறீம் வேணுமா... நூறு ரூபாய் ஐஸ்கிறீம் வேணுமா... எது வேண்டும் என்றாலும் கேள். நான் வாங்கித் தருகிறேன்' என்றாள் சங்கீதா.

என்ன சங்கீதா ரொம்பவும் தாராள மாயிருக்கே?

சங்கீதா தனது புத்தகப் பையில் இருந்த ஐநூறு ரூபாய் பணத்தை எடுத்துக் காட்டினாள்.

'ஏதுடி இந்தப் பணம்?' என்று பவித்ரா கேட் டாள்.

'அதெயெல்லாம் கேட்காதே... உனக்கு ஐஸ்கிரீம் வேணுமா வேண்டாமா...? அதை மட்டும் சொல்லு!' என்றாள் சங்கீதா.

'இங்க பார் நீ உண்மையைச் சொல்லா விட்டால் நான் உன்னுடன் பேச மாட்டேன்.' என்றாள் பவித்ரா.

'கீழே கிடந்தது என்று நினைத்துக் கொள்' என்றாள் சங்கீதா.

'இல்லை நான் நம்பமாட்டேன்' என்றாள் பவித்ரா.

உண்மையைச் சொன்னாள் சங்கீதா. பவித்ரா கோபமானாள்.

சொந்த வீட்டுலேயே திருட்டா? என்று கேட்டாள்.

'நான் திருடவில்லை கீழே கிடந்ததைத்தானே எடுத்தேன். பின்னர் எப்படித் திருட்டாகும்!' என் றாள் சங்கீதா.

பணத்தை அம்மாவிடம் கொடுத்திருந்தால் அது திருட்டு இல்லை.

'நீ மறைக்க நினைத்தாயே! அப்பவே அது திருட்டுத்தான். கோபமாக சொன்னாள் பவித்ரா.

சங்கீதா தலை கவிழ்ந்து கொண்டாள்.

பாடசாலையில் முதல் வகுப்பு முடிந்து சென்ற ஆசிரியை தனது பணப்பையை பார்த்து விட்டு அலறினார். அவர் பையில் இருந்த ஐநூறு ரூபாய் பணத்தைக் காணவில்லை என்றார்.


மாணவிகளிடம் கேட்டுப் பார்த்தார். சரி யான பதில் இல்லை. எல்லா மாணவிகளின் புத்தகப் பைகளையும் சோதனையிட்டார். சங்கீதாவின் பையிலிருந்து ஐநூறு ரூபாய் பணத்தை எடுத்தார்.

மிஸ் இது என்னோட பணம் என்றாள் சங்கீதா. ஆசிரியை நம்பவில்லை. அவ ளைத் தண்டிக்க முயன்றார்.

பவித்ரா எழுந்தாள். மிஸ் சங்கீதா சொல்வது உண்மைதான். அது அவளுடைய பணம் தான். காலையிலேயே நான் பார்த்தேன் என்றாள். ஆசிரியை பணத்தைச் சங்கீதா விடம் திருப்பிக் கொடுத்தார். பாடசாலை இடைவேளையின் போது சங்கீதா பார்த் தியா. நீ செய்த திருட்டை யாருமே பார்க்க வில்லை என்று நினைத்தாய் ஆனால் கடவுள் பார்த்திருக்கார் பார்த் தியா? வீட்டுக்குப் போனதும் பணத்தை அம்மா விடம் கொடு என்றாள் பவித்ரா.

பவித்ரா என்னை மன்னித்து விடு... இனி மேல் இந்த மாதிரி தவறைச் செய்ய மாட்டேன் என்றாள் சங்கீதா.



# படி, போராடு, சேவை செய்...!



*(நேற்றைய தொடர்ச்சி)*

இன்று உலகம் எதிர்கொள்கின்ற முதலா வது பிரச்சினை, பொருளாதாரப் பிரச் சினையால் ஏற்படுகின்ற வறுமை. இரண் டாவது எதிர்கொள்கின்ற பிரச் சினை நோய்கள். அடுத்த தாக ஆன்மிக, தார்மீக, ஒழுக்க, பண்பாட்டுத் துறையில் காணப் படுகின்ற வீழ்ச்சி. இந்த முப்பெரும் பிரச் சினைகளுக்கான முதன்மைக் காரணம் சமூகம் கல்வித்துறை மற்றும் அறிவுத் துறையில் பின்னடைந்து காணப்படுவது தான். அறிவு நிலை சீராகிவிட்டால், கல்வி நிலை சீராகிவிடும் சுகாதார நிலை சீராகி விடும். ஒழுக்க நிலையும் சீராகிவிடும்.

சமுதாயத்தின் கல்வி நிலை உயர, சமூ கத்தின் அறிவு உயரமற்றெல்லாம் தாமா கவே உயரும். பொருளாதாரம், சுகாதா ரம், ஆன்மிகம், ஒழுக்கம், பாண்பாடு ஆகிய அனைத்தும் சீராகும். எனவே சமுதாயத்தில் ஒரு மாற்றம் வரவேண்டும், மறுமலர்ச்சி உரு வாக வேண்டும், சமூகம் சீராக வேண்டும் என்று விரும்புகின்ற எவரும் சமூகத்தில் இருக்கின்ற இளை ஞர்களைக் கல்வி கற் பதன்பால் ஊக்குவிக்க வேண்டும். பல்துறை சார்ந்த அறிஞர்களாக, புத்திஜீவிகளாக, வல்லுநர்களாக எமது நாளைய சமுதாயம் உருவாவதற்கு வழி காண நாம் கடமைப்பட்டிருக்கிறோம்.




மனிதனுக்கு முதன்முதலில் வழங்கப்பட்ட அருட்கொடையே அறிவுதான். இந்த உலகில் மனிதன் வாழ்வாங்கு வாழ்வதற்கு, தன்னு டைய கடமையைச் சீராக, சிறப்பாக நிறை வேற்றுவதற்கு அவனுக்குத் தேவைப்படுகின்ற முதலாவது தகைமையாக அறிவு இருக்கிறது. அறிவு இல்லாத ஒரு மனிதனால் இந்த உலகில் தன்னுடைய பங்களிப்பைச் சரியாக, முறை யாக நிறைவேற்ற முடியாது.

ஒரு மனிதனை மனிதப் புனிதமாக அறிவு மாற்ற வேண்டும். அப்போதுதான் அது அவ னுக்கும் சமுதாயத்துக்கும் பயனுள்ள அறி வாக இருக்கும். எனவேதான் படிக்கின்ற மாண வர்களாகிய நீங்கள் வெறும் தொழிலுக்காகப் படிக்காமல் ஒரு நோக்கத்துக்காகப் படிப்பவர் களாய் மாற வேண்டும்.

அறிவை வைத்து வயிறு வளர்க்கிறவர்கள் மனிதர்கள் அல்லர். சுயநலவாதிகளை உருவாக்குவதாகக் கல்வி அமைந்துவிடக் கூடாது. எனது ஊருக்கு, நாட்டுக்கு, சமுதாயத் துக்கு, மனித இனத்துக்கு எனது அறிவை வைத்து நான் சேவை செய்ய வேண்டும் என்ற உணர்வு பிறக்க வேண்டும். உலகத்திலே நன் மைகள் வளர்க்கப்பட வேண்டும். அதற்காகப் போராடுபவர்களாய் புத்திஜீவிகள், அறிஞர் கள் மாற வேண்டும்.

குறிப்பாக நாமும் நீங்களும் வாழ்ந்து கொண்டிருக்கும் இந்தக் காலம் வெளிப் படையாகப் பார்க்கும்போது ஒரு வளமான காலமாகத் தெரிந்த போதிலும் அதற்கு மற் றொரு முகம் இருக்கிறது. அந்த முகத்தைப் பார்க்கின்றபோது எவ்வளவு அவலட்சண மான முகம் என்பதை நாம் கவலையோடு அடையாளம் காண்கிறோம். இன்று உலகில் பல்வேறு பிரச்சினைகள். ஒரு பக்கத்திலே அரசியல் நெருக்கடிகள். இன்னொரு பக் கத்திலே பொருளாதார மந்த நிலை. மற் றொரு பக்கத்திலே சுகாதாரப் பிரச்சினைகள். இன்று உலகம் பிரச்சினைகள் பற்றித்தான் பேசிக் கொண்டிருக்கிறது.

படித்தவர்களிடமும் பண்பாடு இல்லை. மனித விழுமியங்கள் செத்துப்போன காலமாக இன்றைய காலம் இருப்பதைப் பார்க்கின் றோம். அராஜகம் தலைவிரித்தாடுகிறது. உலகின் பெரும்பாலான பிரச்சினைகளுக் குப் பேராசை, அத்துமீறல், அடாவடித் தனம், அராஜகம், சுயநலம், பிறர் நலனில் அக்கறை இல்லாத தன்மை என்பவைதாம் காரண மாக இருப்பதைப் பார்க்கிறோம். எனவே, இன் றைய இளைஞர்களுக்கு, மாணவ சமு தாயத்துக்குப் பெரியதொரு பொறுப்பு இருக்கிறது. படித்தவர்கள் களத்துக்கு வர வேண்டும். இந்த உலகின் நிலையை மாற்ற வேண்டும். வரலாற்றில் தோன்றிய அடை யாள புருஷர்கள் குறித்து நாம் நினைத்துப் பார்க்க வேண்டும்.

இப்படி உலகின் நன்மைக்காகத் தமது வாழ்க் கையை அர்ப்பணித்துக்கொண்ட முன் மாதிரி மனிதர்களைப் பார்க்கிறோம். அவர் களை முன்மாதிரிகளாய்க் கொண்டு இந்த உலகைக் கட்டி எழுப்ப இளைஞர்கள் முன்வர வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டமைப்பு மீண்டும் தனிநாட்டுக் கொள்கை

## சாடுகிறார் சுசில் பிரேமஜெயந்த

கொழும்பு, ஓக. 15
தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் பிரிவினைவாதிகள் இப்போது மீண்டும் தனி நாடு என்ற கொள்கையில் இயங்க ஆரம்பித்து விட்டனர் என்று தெரிவித்துள்ள ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வேட்பாளர் சுசில் பிரேமஜெயந்த, விடுதலைப் புலிகளுக்குப் பணம் கொடுத்தாவது, அவர்களை அழித்து விட்டதாகவும் குறிப்பிட்டார்.
கொழும்பில் நேற்று முன்தினம் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
பிரபாகரனுக்கு நாம் பணம் கொடுத்ததாகவும் பயங்கரவாதத்தை நாம் வளர்த்ததாகவும் எம்மீது குற்றம் சுமத்துகின்றனர்.நாம் புலிகளுக்குப் பணம் கொடுத்தேனும், அவர்களை இந்த நாட்டில் இருந்து முழுமையாக அழித்து விட்டோம்.
ஆனால் ஐக்கிய தேசியக் கட்சியினர் புலிகளுக்குப் பணத்தைக் கொடுத்து விட்டு நாட்டையும் கொடுக்கவே முயற்சித்தனர். நாம் போரை முடிவுக்குக் கொண்டு வந்து, வடக்கில் பிரிவினைவாதிகளின் நாட்டைப் பிரிக்கும் கொள்கைக்கு முற்றுப்புள்ளி வைத்தோம்.
எமது ஆட்சியில் வாய்மூடிச் செயற்பட்ட கூட்டமைப்புப் பிரிவினைவாதிகள் இப்போது மீண்டும் தமது கொள்கையை முன்னெடுக்க ஆரம்பித்து விட்டனர். மீண்டும் தனி நாடு என்ற கொள்கையில் இயங்க ஆரம்பித்து விட்டனர். இந்தத் தேர்தலின் பின்னர் ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய அரசு அமையுமானால் இந்த நாட்டில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனின் கோரிக்கை நிறைவேற்றப்படும்.
அதேபோல ரிஷாத், ஹக்கீம் ஆகியோர் கேட்கும் கரையோர மாவட்டக் கோரிக்கையும் நிறைவேற்றப்படும். இவை அனைத்தையும் தடுக்கும் நோக்கத்தில் நாட்டை காப்பாற்றவே நாம் மக்களின் ஆதரவை கேட்கின்றோம்–என்றார். (த–5)

## கூட்டமைப்பினர் மீது காரசாரமான விமர்சனம்

### முன்வைத்தது தமிழ் தேசிய மக்கள் முன்னணி

தமிழ் மக்கள் எம்மை உதறிய போதிலும் தமிழினத்தைக் காப்பாற்ற வேண்டும் என்பதற்காக ஐக்கிய நாடுகள்வரை சென்று குரல்கொடுத்த ஒரே தமிழ் குரல் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் குரல்தான்.
இவ்வாறு தெரிவித்தார் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் வேட்பாளர் மணிவண்ணன்.
மருதனார் மடத்தில் நேற்று நடத்தப்பட்ட குறித்த கட்சியின் பரப்புரைக் கூட்டத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:–
2013ஆம் ஆண்டில் ஜெனிவாவுக்குக் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் சென்ற பொழுதுதான் மக்களுக்குப் புரிந்தது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பலம். தம்மால் நிராகரிக்கப்பட்டவர்கள் இவ்வாறு தமக்காகப் போராடுகிறார்கள். ஆனால் தாம் தெரிவு செய்தவர்கள் பேசாமல் இருக்கி றார்கள் என்று மக்கள் சிந்திக்கத் தொடங்கினார்கள். மக்களிடம் இருந்து தம்மைக் காப்பாற்றிக் கொள்வதுக்காக 2014ஆம் ஆண்டு ஜெனிவாக் கூட்டத்தின் பொழுது சில கூட்டமைப்புக் காரர்கள் அங்கு வந்திருந்தார்கள்.ஆனால்கட்டடத்தின்உள்ளே வரவில்லை. தமது சிங்கள எஜமான்களுக்கு விசுவா சத்தைக் காட்டுவதற்காக எதுவும் பேசாமல் ஊமைகளாக திரிந்தார்கள். அவர்கள் செய்த ஒரே விடயம் சிங்களப் பேரினவாதத்தை இறுக்கமாகக் கடைப்பிடிக்கும் ஜெனிவா வுக்கான இலங்கைத் தூதுவரைச் சென்று சந்தித்து எம்மைப் பற்றித் தெரிவித்து எமது இராஜதந்திர நகர்வுகளைக் கெடுத்து விட்ட மையே–என்றார்.
(த–ம–ரி)

## மரண அறிவித்தல்



### திருமதி பூமணி இராமு

விக்னேஸ்வரா வீதி, சங்கானையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பூமணி இராமு 12.08.2015 காலமாகிவிட்டார்.
அன்னார் காலஞ்சென்ற நாகமுத்து-தங்கம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற வேலு இராமுவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற நடராஜா மற்றும் இராசதுரை, பொன்னுத்துரை, காசிநாதன், மகாலிங்கம், தங்கேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும், தர்மகுலசிங்கம் (சுவிஸ்), கனகேஸ்வரி, ஜெயகுலசிங்கம் (சுவிஸ்), மாலினி (D.A.கைத்தொழில் அபிவிருத்திச் சபை, யாழ்ப்பாணம்), தயாளினி ( D.O.பிரதேச செயலகம், சங்கானை) ஆகியோரின் அன்புத் தாயும், தியாகராஜா (இயக்குநர், கேம்பிறிஜ் கல்வி நிலையம்-சங்கானை), மனோரஞ்சிதம் (சுவிஸ்), கவிதா (சுவிஸ்), சதீஸ்குமார் (விளையாட்டு பயிற்றுநர்), சாரங்கன் (ஆசிரியர்-யா/ஊரெழு கணேச வித்தியால யம்) ஆகியோரின் அன்பு மாமியும், தரங்கினி (ஆசிரியர், கிளி/நாச்சிக்குடா G.T.M.S.)-பிறேம்நாத் (ஆசிரியர் - யா/அராலி வள்ளியம்மை வித்தியாலயம்), தாரகா (லண்டன்)-சுகாணன் (லண்டன்), தயானிகா (ஆசிரியர் யா/சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி), சுவிஸில் வசிக்கும் தயணியா, தவீனா, தமிதா, ஹரிஸ், ஹரிணி, ஹசினா மற்றும் பிரவீண், டினோஜ், அட்சயன், பவிஷா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், சனோ, சயா (லண்டன்), ஜாவின் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.08.2015) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் விளாவெளி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

விக்னேஸ்வரா வீதி,
சங்கானை.

தகவல்:
குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி



எமது அலுவலகத்தில் நூலகராகக் கடமையாற்றும் **திருமதி பூங்கோதை பாலபாஸ்கரன்** அவர்களின் அன்புத் தாயார்
**திருமதி புவனேஸ்வரி சிவகாருணியம்**
அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஊழியர் நலன்புரி சங்கம்,**
**நல்லூர் பிரதேச சபை.**

## மரண அறிவித்தல்



### கணபதிப்பிள்ளை வீரசிங்கம்

(முன்னாள் கைதடி மேற்கு பலநோக்கு கூட்டுறவு சங்க ஊழியரும், சிக்கன கடன் கூட்டுறவு சங்க தலைவரும்)

சிங்கப்பூரைப் பிறப்பிடமாகவும் நாவற்குழி, கனடா Toronto ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை வீரசிங்கம் 12.08.2015 புதன்கிழமை Toronto வில் காலமானார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை-நாகரத்தினம் தம்பதியரின் அன்பு மகனும், சரஸ்வதி அம்மாவின் அன்புக் கணவரும், பரமேஸ்வரன் (கனடா), ஸ்ரீபாஸ்கரன் (நோர்வே), பிரபாகரன் (கனடா), யோகேஸ் வரன் (இலங்கை), ஜெகதீஸ்வரன் (லண்டன்), ஞானேஸ்வரன் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்றவர்களான நிற்சிங்கம், பூரணம் ஆகியோரின் அன்பு சகோதரனும், செல்வதி, சுகிர்தினி, கிரிஜா, றஜினி, முகுந்தினி ஆகியோரின் அன்பு மாமனும், பிரவிதா, நேருஜன், பிரமிதா, வாரணன், திவ்வியன், சாருஜன், சிந்துஜா, மதுஜா, மாதேஷ், குகனி, குகனன், அபிசனா, அர்ச்சயா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.08.2015) ஞாயிற்றுக்கிழமை Chapel Ridge Funeral Home 8911 Woodbine Ave Markham, ON L3R 5G1 Canada வில் நடைபெறும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: மகன்
வீரசிங்கம் யோகேஸ்வரன்
077 666 0549

நாவற்குழி, கைதடி.

## மரண அறிவித்தல்



### கந்தையா இரகுபதி

(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

நாயன்மார்கட்டைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா இரகுபதி நேற்று (14.08.2015) வெள்ளிக்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா-தங்கம்மா தம்பதியரின் கனிஷ்ட புத்திரனும், காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம்-மனோன்மணி தம்பதியரின் அன்பு மருமகனும், பத்மராணியின் அன்புக் கணவரும், சிவராசா (ஓய்வுபெற்ற உப அதிபர்), காலஞ்சென்ற பாலசிங்கம் (இலங்கை போக்குவரத்து சபை) ஆகியோரின் அன்புச் சகோதரனும், ஜெயக்குமார் (பிரதேச செயலகம்-பருத்தித்துறை), தர்சினி (ஆசிரியர் மு/மாங்குளம் வித்தியாலயம்), ஜீவகுமார் (யாழ். தபால் அலுவலகம்), நந்தகுமார் (ஜேர்மனி), சுபாசினி (இத்தாலி) ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவசோபனா (ஆசிரியர் யா/ஆவரங்கால் மகாஜன வித்தியாலயம்), ஆனந்தகுமார் (நகராட்சி மன்றம் சாவகச்சேரி), துஷ்யா, சதீஸ்குமார் ஆகியோரின் அன்பு மாமனும், நாகேஸ்வரி, காலஞ்சென்ற மகேஸ்வரி மற்றும் ஜெயராணி, பிறேமலா, மஞ்சுளா ஆகியோரின் மைத்துனரும், சிவகுமார் (UK), சுகுமார் (UK), ராஜ்குமார், ரஜனி, ரஜனிகாந், ராஜேந்திரகுமார் ஆகியோரின் சிறிய தந்தையும், மகிஜா, மாதிரைஜன், துஷானந், சுவாதி, சகானா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.08.2015) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சுப்பிரமணியம் வீதி, அரியாலை,
நாயன்மார்கட்டு, யாழ்ப்பாணம்.
தொடர்புக்கு:
0771614369,0776333241

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



### இராமு தம்பிராசா


ஏழாலை தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராமு தம்பிராசா 14.08.2015 வெள்ளிக்கிழமை காலமாகி விட்டார்.
அன்னார் காலஞ்சென்ற தங்கத்தின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான இராமு-காமாட்சி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ் சென்றவர்களான ராசம்மா, செல்லம்மா, துரைசிங்கம், சீவரத்தினம் மற்றும் அன்னபாக்கியம் காலஞ்சென்ற சிவஞானவதி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற சிவஞானசுந்தரம் மற்றும் மகேஸ்வரி,பரராஜசிங்கம், தனபாலசிங்கம், குகனேஸ்வரி, தியாகராசா, திலகேஸ்வரி மகிழ்ராசா, காலஞ்சென்றவர்களான தெய்வேந்திரராசா, ஆனந்தசுந்தரம் ராஜேஸ்வரி ஆகியோரின் அன்புத் தந்தையும், ஸ்ரீபாலசிங்கம் புவனேஸ்வரி அம்பிகை காலஞ்சென்ற சண்முகராசா மற்றும் அரணேஸ்வரி ஜெகதீஸ்வரன் கலைவதனி ஆகியோரின் அன்பு மாமனும், ரஜனி-பவன், உமா சிவபாலன்- அபிராமி, காலஞ்சென்ற தர்மபாலன், ஜெயபாலன்-நதியா, உமாபாலன், சுகந்தினி- தவேந்திரலிங்கம்,வினோதன், சுமன்-விதுபா, மாதங்கி-வேல்வேந்தன், வரதா, தாரணி, மதிவதனி-விக்கினேஸ்வரன், ஸ்ரீகுமரன்-கோபிகா, கோவைக்குமரன்-துர்க்காயினி, தவக்குமரன், சசிஸ் குமரன், காயத்திரி-தேவகுமார், லகிதா, சகீர்தன், சபீனா, கஜன், கஜனி- பாஸ்கரன், துயானி, ஜெயானி, லோஜி, சசிகரன், கிருபாகரன், தேனு கன், மதுசன் ஆகியோரின் அன்புப் பேரனும், மதுசா, கபிசா, பபிசா, கிரு சன், லக்ஷிகா, கஜாணன், சகாணன், தர் ஷனா, ஜசீகன், யாழினி யாத வன் ஈதன் பிரார்த்தனா தீபிகா சஸ்மிதன், நிதர்சனா, பிரவீனா ஆகி யோரின் பூட்டனும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.08.2015) சனிக்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு அம்பிகைபவன் சூராவத்தை சுன்னாகத்தில் உள்ள அவரது இல்லத்தில் நடை பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொத்தியாலயடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அம்பிகைபவன்,
சூராவத்தை, சுன்னாகம்.
077 9691353

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### செல்லையா வல்லிபுரம்



(இளைப்பாறிய ஆசிரியர், சமாதான நீதிவான்)

கரவெட்டி கிழக்கு, செங்குந்தா வீதியைப் பிறப்பிடமாகக் கொண்ட செல்லையா வல்லிபுரம் (இளைப்பாறிய ஆசிரியர், சமாதான நீதிவான்) நேற்று (14.08.2015) வெள்ளிக் கிழமை காலமாகிவிட்டார்.
அன்னார் கரவெட்டி கிழக்கு காலஞ்சென்ற செல்லையா-சிவகாமி தம்பதியரின் மகனும், புலோலி காலஞ்சென்ற சிவசம்பு பொன்னுத்துரை-புவனேஸ்வரி தம்பதியரின் மருமகனும், பிரேமசியாமளாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற செல்லையா இரத்தின சபாபதி (பெரியதம்பி) யின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற பிரேமநிர்மலா மற்றும் கௌரிமோகன், பிரேமகாந்தா, கருணேந்திரலதா, லீலாரமணி, சுவர்ணாம்பிகை ஆகியோரின் மைத்துனரும், ஆர்த்திகாவின் பெரியதந்தையும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் கரவெட்டி கிழக்கு, அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நாளை (16.08.2015) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.00 மணியளவில் வேதக்கழி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வ.பிரேமசியாமளா (மனைவி)
+94212056421

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொக்குவில் ஸ்ரீ வீரமாபி
# தேர்த்திருவிழா சிறப்





## பிரதம குருவின் ஆசிச் செய்தி

அம்பிகையின் பத்து தின மகோற்சவத்திலே ஒன்பதாவது தினமான இன்று திருத் தேர் ஆகும். இது அழித்தல் தொழிலை குறிக்கும். அதாவது நான் என்ற அகங்காரம், எனது என்ற மமதை போன்ற ஆணவ குணமுள்ளவர்களது மனதினை அழித்து தூய்மையாக மாற்றுதல் என்பது இந்த திருத்தேர் நாளில் சிறப்பு.

வண்ணை வீரமா பிடாரியின் அருட்பார்வை பட்டால் தூய்மையும் நல்ல சிந்தனையும் நல் எண்ணங்களும் தோன்றி எம் வாழ்வில் முன்னேற்றம் உண்டாகும். எல்லா வளங்களும் கிட்டும், மனச்சஞ்சலங்கள் நீங்கி எம் வாழ்வில் சாந்தி நிலவட்டும்.

ஓம் சாந்தி ! சாந்தி ! சாந்தி !

சோ. முரளீதர சர்மா
தேவஸ்தான குரு பிரம்மஸ்ரீ,
தாவடி.



## மஹோற்சவ குருக்கள் ஆ

எங்கும் நிறைந்திருக்கும் சக்தியானவள் கா
பார்வதியாய் அவரவர் நினைக்கும் வடிவ
புரிந்துகொண்டிருக்கின்றாள். அந்த வகையில் இ
ஸ்ரீ வீரமா பிடாரி அம்பிகையாக வடிவம் தாங்கி
நல்லருளை வாரி வழங்கிக்கொண்டிருக்கின்றாள்
மருவியது. அதாவது பீடைகளை அழிப்பவள் எமது துன்ப
அத்தகைய மகத்துவமிக்க வரலாற்றுப் பெருமை மிகு இவ்வ
நிகழ்கின்றது. தேரேறி வரும் அன்னையின் தெய்வீகப்
மனக்கண்களாலும் காணும் அனைத்து அடியார்களுக்கும் அவ
நீங்கி நித்திய மங்கல வாழ்வு வாழ அன்னையின் திருவருள் கி

"இன்பமே சூழ்க
எல்லோரும் வாழ்க"

சிவ


**சிறி அம்பாள்**
வெல்டிங் வேக்ஸ்
கே.கே.எஸ். வீதி, நாச்சிமார் கோயிலடி.

**நந்தினி**
வெதுப்பகம்
தரமானதும் சுவையானதுமான பேக்கரித் தயாரிப்புக்களை மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற நாடவேண்டிய இடம்.
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

**தயாளினி**
வீடியோ அன் பான்ஸி ஹவுஸ்
பிடாரி கோயிலடி, கொக்குவில் மேற்கு.

**கொழும்பு**
எசன்ஸ் ஹவுஸ்
133/7, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

"கல்வியே கண், மற்றெல்லாம் பின்"
**ஏசியன் அக்கடமி**
கேணியடி, கொக்குவில் மேற்கு.
தரம் 1முதல் O.L வரை A/L குழுவகுப்புக்கள், கணினி வகுப்புக்கள், இலவச கணிணி வகுப்புக்கள் சிறப்பாக நடைபெறுகின்றன.

**பரஞ்சோதி**
ஸ்ரோர்ஸ்
(தீபன் கடை)
ஆனைக்கோட்டை வீதி, கொக்குவில்.

**பிடாரி**
களஞ்சியம்
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

**மணி**
ஸ்ரோர்ஸ்
பிடாரி கோயிலடி, கொக்குவில் மேற்கு.

**தெய்வம்**
ஸ்ரோர்ஸ்
கைவினைப் பொருள்களின் மொத்த/சில்லறை விற்பனையாளர்.
இல.84, மேற்கு மார்க்கட், யாழ்ப்பாணம்.


**ஆரணி**
நகைத் தொழிலகம்
பிடாரி கோயிலடி, கொக்குவில் மேற்கு.

**மகாநதி**
ஜுவலறி
72A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**செல்வி**
நகையகம்
1/3, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாபிடாரி அம்பாள் ஆலய
# றப்பு மலர் - 15.08.2015



## தல வரலாறு

திருக்கோயில்களாக சிறப்புப் பெற்றது நமது ஈழவளநாடு. இந்த நாட்டைச் சிவாலயங்கள், விஷ்ணு ஆலயங்கள், சக்தி ஆலயங்கள் என்பன பெரிதும் அழகுபடுத்துகின்றன. அந்த வகையில் சக்தி ஆலயங்களில் மிகவும் சிறப்புவாய்ந்த புராதன ஆலயமாக யாழ். நகரை அண்மித்த ஆனைக்கோட்டை ,கொக்குவில் பகுதி எல்லையில் வீரமாபிடாரி அம்பாள் ஆலயம் அமைந்துள்ளது.

பொதுவாகக் கிராமத்தின் எல்லைத் தெய்வமாக விளக்கும் அம்பிகைக்கு பிடாரி என்றும் ஒரு பெயருண்டு. இந்தப் பெயர் கேட்பதற்கு ஒரு மாதிரியாக இருந்தாலும் உண்மையில் இயற்பெயர் பீடைஹாரி என்பதாகும். அதாவது

பீடை- தீவினை அல்லது துன்பங்கள்

ஹாரி- விரட்டுபவள்

அதாவது பீடைகளை-துன்பங்களை, தீவினைகளை நெருங்காமல் விரட்டுபவள் என்ற பெயரே பீடைஹாரி என்று மருவிட்டது என்பதுதான் உண்மை.

இந்த ஆலயமூர்த்தி வழிபாடு மிகவும் தொன்மைவாய்ந்ததாகக் காணப்படுகின்றது. கி.பி 1475 இல் சிங்கை பரராசசேகரன் நல்லூரைத் தலைநகராகக் கொண்டு அரசாட்சி செய்தபோது பல ஆலயங்களை புனரமைத்தான் என்று அறியமுடிகின்றது. ஆட்சி மாற்றத்தினால் அந்நியர்களான பறங்கியர் தம் மக்களின் மனதை புண்படச் செய்யும் வகையில் யாழ்ப்பாணத்தில் பெரிதும் சிறிதுமாக 500 ஆலயங்களை இடிப்பித்தார்கள் என்றும் அதில் ஒரு ஆலய அம்மன் விக்கிரகத்தைச் சிவன் கோயில் குளத்திலேயே இட்டுச் சென்றனர் என்றும் அறிய முடிகின்றது. இங்கிருந்து வழிபடும் அடியவர் ஒருவரின் கனவில் அம்மன் தோன்றி, தான் இருக்கும் இடத்தை உணர்த்தி அந்த அடியவரும் அம்பிகை உணர்த்திய இடத்தைச் சென்று பார்க்கையில் அம்பிகையின் உருவம் கிடைக்க அவர் அகமகிழ்ந்து அதனை ஒரு மாட்டு வண்டியில் ஏற்றிக்கொண்டு வந்து தற்போதுள்ள இடத்தில் வைத்து வழிபட்டார் என்றும் கூறுவர். இதைவிட சங்கிலி அரசன் போர் புரிய முன்னர் இந்த அம்பிகையை வழிபட்டே போருக்குச் செல்வது வழக்கம் என்றும் கர்ண பரம்பரைக் கதைகளால் அறிய முடிகின்றது. காலப்போக்கில் இந்த ஆலயத்தில் பலியிடும் வழக்கம் ஏற்பட்டது.

1975 ஆம் ஆண்டில் இந்த ஊர்ப் பெரியவர்களின் முயற்சியால் பலியிடும் வழக்கம் நிறுத்தப்பட்டு கொட்டிலுடன் கூடிய ஆலயமாக ஆகம விதிக்கமைய கருவறையுடன் கூடிய ஆலயமாக மாற்றப்பட்டது. காலப்போக்கில் அன்பர்கள், அடியவர்கள் அனைவரின் ஒத்துழைப்பு, விடாமுயற்சி என்பவற்றின் காரணமாக உன்னத வளர்ச்சி அடைந்து பெரிய ஆலயமாகத் தேரோடும் ஆலயமாக மாறி தற்போது அழகிய பஞ்சதள இராஜகோபுரத்துடன் காட்சியளிக்கின்றது என்று உணருகையில், இந்த வளர்ச்சிக்கு வித்திட்டவர்களை மனம் நிறைந்து பாராட்டாமல் இருக்க இயலாது. இந்த ஆலயத்துக்கு இந்த கிராமத்தைச் சார்ந்தவர்கள் மட்டுமல்ல, அயல் கிராமங்களில் இருந்தும் ஏன் பல்வேறு இடங்களில் இருந்தும் அன்னையைத் தேடி, நாடி, ஓடி வருபவர்கள் ஏராளம் ஏராளம்.

இந்த ஆலயத்தில் நிறைவுக்கு - அன்னதான மண்டபமொன்று அமைக்கப்பட்டு நிறைவு செய்யப்பட வேண்டும். அதுவும் அம்பிகையின் அருட்கடாட்சத்தினால் விரைவிலேயே நிறைவு பெறும் என்ற நம்பிக்கையுடன் அகில உலகுக்கும் நாயகியான அவளின் பாதம் பணிந்து நிறைவு செய்கின்றோம்.

## இந்து இளைஞர் மன்றத்தினரின் ஆசிச் செய்தி

வேண்டுவோர் வேண்டும் வரங்களைக் கொடுக்கும் பிடாரித் தாயே "ஆடித் தேர் ஏறி" அடியார்களின் குறைகளை நீக்கி, உலகெல்லாம் வாழும் அடியவர்கள் இன்புற்று ஆனந்தப் பெருவாழ்வு வாழ வேண்டுகின்றோம்.

இந்து இளைஞர் மன்றம்,
பிடாரி அம்பாள் ஆலயம்.

## நக்களி... ஆ... செய்தி

சக்தியானவள் காளியாய் மாரியாய் பிடாரியாய்
...னைக்கும் வடிவத்திலே உருவமாகி திருவருள்
... அந்த வகையில் இந்த ஆனைக்கோட்டைப் பதியிலே
...ாக வடிவம் தாங்கி தன்னை நாடிவரும் பக்தர்களுக்கு
...கொண்டிருக்கின்றாள். பீடா ஹரி என்பதே பிடாரியாக
...பவள் எமது துன்பங்கள், துயரங்களை அழிப்பவள்.
...பருமை மிகு இவ்வாலயத்தில் இன்று இரதோற்சவம்
...யின் தெய்வீகப் பொலிவை அகக்கண்க ளாலும்
...யார்களுக்கும் அவர்களது துன்பங்களும் துயரங்களும்
...பின் திருவருள் கிடைக்கட்டும்.
...இன்பமே சூழ்க
...லோரும் வாழ்க"

சிவஸ்ரீ பி. கிருபாகரக் குருக்கள் கோப்பாய்.


**கன்னிஹா ஜுவல்ஸ்**
99E, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 4448

**அம்ச மஹால் திருமண மண்டபம்**
Aadiyapaatham Road,
Kokuvil west, 021 221 3488,
0777030418

**பிடாரி அம்பாள் சனசமூக நிலையமும் இந்து இளைஞர் மன்றமும்**
கொக்குவில் மேற்கு, கொக்குவில்

**அம்பாள் வர்த்தக நிலையம்**
பிடாரி கோயிலடி,
சுபாஸ்.

**கௌதமி**
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்
தொ.பே: 077 6611764
021 459 1218

**அம்பாள் சைவ உணவகம்**
பிடாரி கோயிலடி,
கொக்குவில் மேற்கு.

**...சோதி ...ரோர்ஸ்**
...ன் கடை)
...கோட்டை வீதி,
...க்குவில்.

**அம்பிகை ஸ்ரோர்ஸ்**
பிடாரி கோயிலடி,
கொக்குவில் மேற்கு.

**வானவில் இண்டஸ்ரீஸ்**
பிடாரி கோயிலடி,
ஆனைக்கோட்டை.
0774598247

**பூரணி நகை மாடம்**
1/4,
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

**நீலாம்பரி உணவகம்**
கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

**வெஸ்ரா நெல்லிக்கிரஸ்**
ஆனைக்கோட்டை.

**கணேசா களஞ்சியம்**
(சந்துரு தேயிலை)
59,
முருகமூர்த்தி வீதி,
யாழ்ப்பாணம்.

**...ல்வி ...கயகம்**
1/3,
...ரியார் வீதி,
...ப்பாணம்.

**யாழ்க் கல்லூரி**
தரம் 1 முதல் O/Lவரை
பயிற்றப்பட்ட கல்லூரி
ஆசிரியர், சிறப்பான
பட்டதாரி ஆசிரியர்கள்
பொன்னையா லேன்,
ஆனைக்கோட்டை.

**எரிக் கணேஷ் மூக்குக்கண்ணாடி அகம்**
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
கிளை: கே.கே.எஸ். வீதி,
சுன்னாகம்.
கே.கே.எஸ். வீதி,
கொக்குவில்.

**இலங்கைராசா ஸ்ரோர்ஸ் V.N.T**
67, மேற்கு மார்க்கட்,
பெரியக்கடை,
யாழ்ப்பாணம்.

**A.B.S. Jeevan வெல்டிங் வேக்ஸ்சொப்**
பிடாரி கோயிலடி,
கொக்குவில் மேற்கு.

**சக்தி பியூட்டி பார்**
பிடாரி கோயிலடி,
கொக்குவில் மேற்கு.

**சிறி சிவராம் ரேடர்ஸ்**
248, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
021 2228629
0777560760


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போராட்டம்

யிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:–

முடிஇழந்து போனாலும் அடிபணியா வீரமும் இடி விழுந்த போதிலும் தடம் புரண்டு போகாத உறுதியும் கொண்ட அன்புக்கும் பெருமைக்கும் உரிய எமது தமிழ் மக்களே, எதிர்வரும் 17 ஆம் திகதி நாமொரு நாடாளுமன்றத் தேர்தலுக்கு முகங்கொடுக்க உள்ளோம். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினராகிய நாம் இலட்சிய உறுதியுடனும், உரிமையுடனும் உங்கள் முன் உங்கள் வாக்குகளைக் கோரி வந்து நிற்கின்றோம்.

**உரிமைகளைப் பறித்தவர்களும் உங்கள் முன் நிற்கின்றனர்**

எமது உரிமைகளைப் பறித்தவர்களும், எமது உயிர்களைக் குடித்தவர்களும் விமானக் குண்டுகளாலும் எறிகணைகளாலும் எம்மைக் கொன்று குவித்தவர்களும், வெள்ளை வான்களில் எங்களைக் கடத்திச் சென்றவர்களும், எங்கள் பாரம்பரிய நிலங்களை அபகரித்தவர்களும் கூட உங்கள் முன் இந்தத் தேர்தலில் வாக்குகளைக் கோரி வந்துள்ளனர். சரிக்கும் பிழைக்கும் இடையே நடக்கும் போராட்டத்தில் நீங்கள் எப்பக்கம் நிற்பீர்கள் என்பதைத் திட்டவட்டமாக நாமறிவோம். உங்கள் கரங்கள் என்றும் உரிமைக்கும், உண்மைக்கும் நேர்மைக்கும் ஆதரவாகவே எழுந்தன என்பது வரலாறு.

2009 ஆம் ஆண்டு மே மாதம் எமது விடுதலைப் போராட்டத்தின் ஆயுதப் போராட்டம் மௌனிக்கப்பட்டதுடன் ஆட்சியாளர்களும் அதிகாரப் பீடங்களும், அவர்களின் அடிவருடிளும் எமது உரிமைக் குரல் ஓய்ந்து விட்டதாக எக்காளமிட்டனர். எனினும் அவர்களின் நப்பாசைகளை வெறும் கனவுகளாக்கிவிட்டு கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை அமோக வெற்றி பெற வைத்ததன் மூலம் எமது உரிமைப் போராட்டத்தின், எமக்குள்ள உறுதியை திட்டவட்டமாக வெளிப்படுத்தினீர்கள். அடுத்து வந்த உள்ளூராட்சிச் சபைத் தேர்தல்களிலும் மாகாணசபைத் தேர்தலிலும் தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தை திடசங்கற்பத்துடன் முன்னெடுத்துச் செல்லும் தகுதி தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு மட்டுமே உண்டு என்பதை உங்கள் அமோக வாக்களிப்பு மூலம் வெளிப்படுத்தினீர்கள்.

**அதிகார பரவலாக்கம்**

ஒன்றுபட்ட வடக்கு – கிழக்கில் உள்ளக சுயநிர்ணய உரிமையுடன் கூடிய அதிகாரப் பரவலாக்கம் என்ற கோட் ...டுக்கு நீங்கள் வழங்கிய ...யை தலை மேற் சுமந்து ...யை முன்னெடுத்தோம். ...றத்திலும், வெளியி... அரங்குகளிலும் ...க் குரலை ஓங்கி ...ம். ஐக்கிய நாடுகள் சபை ...லம்பெயர் தமிழர்கள் நடாத்திய போராட்டங்களை சரியான முறையில் நெறிப்படுத்தியதன் மூலம் இலங்கையில் இடம்பெற்ற போர்க் குற்றங்கள், மனித உரிமைகள் மீறல்கள் தொடர்பான ஒரு சர்வதேச விசாரணைக்கு வழிவகுத்தோம். இத்தகைய நடவடிக்கைகள் மூலம் எமது உரிமைப் போராட்டத்தை முன்னகர்த்திச் செல்வதில் நாம் அர்ப்பணிப்புடன் சேவையாற்றினோம் என்பதை நீங்கள் அறிவீர்கள். [illegible]

கடந்த ஜனவரி மாதம் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கோரிக்கையை ஏற்றுக் கொண்டு ஐக்கியப்பட்டு ஒன்று திரண்டு மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சியைத் தூக்கி எறிவதில் முக்கிய பங்காற்றினீர்கள். தொடர்ந்து தமிழ் மக்கள் மேல் ஒடுக்குமுறைக்கு மேல் ஒடுக்கு முறைகளாக திணித்து வந்த மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சி விலக்கப்பட்ட பின்பு ஒரு மெல்லிய ஜனநாயக காற்று எங்கள் சுவாசத்தை எட்டித் தொட்டது. ஆனால் இது ஒரு சிறு தளர்வேயன்றி இறுதி வெற்றிக்கான பாதை திறந்துவிட்டதென நாம் கருதிவிட முடியாது.

**அடக்கி வைத்திருக்கவே விரும்புகின்றனர்**

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு ஆட்சிக்கு வந்தாலென்ன ஐக்கிய தேசிய முன்னணி ஆட்சிக்கு வந்தாலென்ன எந்தவொரு தரப்பினரும் எமது உரிமைகளை மனமுவந்து தந்துவிடப் போவதில்லை. ஒற்றையாட்சி என்ற வரம்புக் குள்ளிருந்து எந்தவொரு சிங்களத் தலைமைக்கும் வெளிவர மனமுமில்லை, துணிவுமில்லை. அதாவது தங்கள் அதிகாரத்தின் கீழ் தமிழ் மக்களை வைத்திருக்க வேண்டும் என்பதில் அவர்கள் அக்கறையாக உள்ளனர். ஒற்றையாட்சிக்குள் இனப் பிரச்சினைக்கு தீர்வு, 13 ஆவது அரசியல் திருத்தச் சட்டத்தின் மூலம் தீர்வு போன்ற வாக்குறுதிகள் அனைத்தும் சிங்களத் தலைமைகளின் நாணயக் கயிற்றில் எமது கழுத்துகளை இணைக்கும் நோக்கம் கொண்டவை என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.

எனவே நாம் எமது உரிமைகளை ஜனநாயக வழியில் போராடியே பெறவேண்டியுள்ளோம். அதற்கு எம்மிடம் இரண்டே இரண்டு ஆயுதங்கள் உண்டு. ஒன்று எமது இலட்சிய உறுதி, மற்றது எமது ஐக்கியம். எனவே எதிர்வரும் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு ஒன்று சேர்ந்து வாக்களிப்பதன் மூலம் உங்கள் ஐக்கியம் என்ற ஆயுதத்தை பயன்படுத்த வேண்டும். நாம் உங்கள் ஆணையை ஏற்று இலட்சிய உறுதி என்ற ஆயுதத்தை கையெடுத்து முன் செல்வோம். இந்தப் பயணம் எதிரிகளை இறங்கி வர வழிவகுக்கும் என்பதில் சந்தேகமில்லை. எமது பேரம் பேசும் சக்தி வலிமை பெற வேண்டுமெனில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் எல்லா மாவட்டங்களிலும் வெற்றி பெற வேண்டும் என்பதை நாங்கள் உங்களுக்குச் சுட்டிக் காட்டுகின்றோம்.

**உரிமைக்கான உதயனின் பங்களிப்பு**

இந்த மகத்தான பயணத்தில் உதயன் வழங்கிய பங்களிப்பை நீங்கள் அறிவீர்கள். எதிரிகளாலும் எதிரிகளின் அடிவருடிகளாலும் நாம் ஏராளமான இன்னல்களையும், இழப்புகளையும் சந்தித்தோம். உயிர்ப்பலி கொடுத்தோம். எமது ஆசிரியர்கள் மேல் படுகொலை முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. எமது நிறுவனம் மீண்டும் மீண்டும் தாக்கப்பட்டது. எமது அச்சியந்திரங்கள் தீக்கிரையாக்கப்பட்டன. கைக்குண்டு வீச்சு, துப்பாக்கிப் பிரயோகம், படுகொலை முயற்சி, உயிர் அச்சுறுத்தல் எனப் பலவித நெருக்கடிகளுக்கு நாம் உட்படுத்தப்பட்ட போதிலும் தளராத உறுதியுடன் எமது இலட்சியங்களை முன்னெடுத்துச் செல்வதில் பாரிய பங்களிப்பு வழங்கினோம்.

அதேபோன்று 2010 ஆம் ஆண்டு நீங்கள் என்னை நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்த பின்பு எனது சேவை அரசியல் களத்திலும் விரிவடைந்தது. தமிழ் மக்களின் உரிமைக் குரலை நாடாளுமன்றத்தில் ஓங்கி ஒலித்தேன். எமக்கு இழைக்கப்படும் அநீதிகளை கண்டித்து அங்கு போர்க் குரல் எழுப்பினேன். வெளிநாடுகளில் எமது புலம்பெயர் உறவுகள் மத்தியிலும் சர்வதேச நிறுவனங்களிடமும் எமக்கு இழைக்கப்படும் அநீதிகள் தொடர்பாக அவற்றிலிருந்து நாம் மீள்வதற்கு அவர்கள் வழங்க வேண்டிய பங்களிப்புப் பற்றியும் கலந்துரையாடல்களை நடத்தினேன். போரினால் பாதிக்கப்பட்ட கணவனை இழந்த பெண்கள் உட்பட எமது மக்களுக்கு நான் தனிப்பட்ட முறையிலும், உதயன் நிறுவனம் மூலமும் தொண்டு நிறுவனங்களுடன் இணைந்தும் பல நிவாரண உதவிகளை வழங்கினேன்.

**ஆதரவு தேவை**

ஊடகத் தளத்திலும் அரசியல்களத்திலும் நான் ஆற்றி வந்த பணிகள் மேலும் விரிவாகவும், ஆழமாகவும் முன்கொண்டு செல்லும் முகமாக மீண்டும் உங்கள் முன் வேட்பாளனாக போட்டியிட முன்வந்துள்ளேன். நீங்கள் தரும் ஆதரவு வலிமையாக மாறி என்னை சாதனைகளைச் செய்ய வைக்கும் ஒருவனாக மாற்றும் என நான் திடமாக நம்புகின்றேன்.

எனவே வீட்டுச் சின்னத்திற்கு நேராகவும், எனது இலக்கமான ஐந்திற்கு நேராகவும் புள்ளடியிட்டு பெரும்பான்மை வாக்குகளால் என்னை நாடாளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்வதன் மூலம் எமது உரிமைப் போராட்டத்தை வேகமாக முன்னெடுக்கவும், எமது மக்கள் பணியை தொடரவும் உங்கள் பேராதரவை வழங்கும்படி அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன் – என்றார். (த–5)

## சர்வதேசத்தின்

காக செய்யப்பட்ட மாபெரும் தியாகம் வீண் போய் விடக்கூடாது. எம்மிடமிருப்பது ஜனநாயகபலம் – ஆத்மபலம் – சர்வதேச சந்தர்ப்பம் மட்டும்தான். எங்கள் மக்கள் ஜனவரி 8 ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தலில் ஆட்சிமாற்றம் ஏற்பட ஒரு ஜனநாயகப் புரட்சி செய்தார்கள். நாடாளுமன்றத் தேர்தலிலும் உங்கள் பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதிலும் ஒன்றுபட்டுத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு, வீட்டுச் சின்னத்திற்கு வாக்களித்து பெரும் ஜனநாயகப் புரட்சியைச் செய்ய வேண்டும். தற்போது ஏற்பட்டுள்ள சர்வதேச சந்தர்ப்பத்தை இராஜதந்திர ரீதியில் பயன்படுத்தித் தமிழ்த் தேசிய இனத்தின் விடுதலைக்குத் திடசங்கற்பத்தை வெளிப்படுத்த வேண்டும்.

சமஷ்டி ஆட்சி – கூட்டாட்சி என்பது நாட்டில் இனப் பிரச்சினைக்கு அல்லது பிராந்தியங்களின் தேவைப்பாட்டிற்கு தீர்வுகளைக் காண பயன்பாட்டிலுள்ள ஒரு தத்துவமாகும். ஐக்கிய இலங்கையில் தமிழினத்தின் சுய ஆட்சியை நிலை நாட்டும், இத்தகைய அரசியல் தீர்வு சர்வதேச அரங்கில் பல நாடுகளில் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு தீர்வாகும். தன்னாட்சியாக செயல்படும் மாநில அரசுகளை இணைத்து பொதுத் தேவைகளின் பொருட்டு மத்தியில் கூட்டாட்சியை ஏற்படுத்தும் முறைகளுமுண்டு.

1995 இல் அப்போதைய ஜனாதிபதி ஒற்றையாட்சியை ஒழித்து பிராந்தியங்களின் ஒன்றியம் என்று ஒரு தீர்வுத் திட்டத்தை முன்வைத்தார். 1985 இல் முன்னெடுக்கப்பட்ட திம்புக் கோட்பாடுகள், 2003 இல் முன்மொழியப்பட்ட ஒஸ்லோத்திட்டம் என்பதன் அடிப்படையிலேயே எமது அரசியல் தீர்வுத்திட்டம் முன்வைக்கப்பட்டுள்ளது. தமிழ்க் காங்கிரஸ் கட்சி ஒரு நாடு என்று ஏன் கூற வேண்டும். ஐக்கிய இலங்கை, ஒன்றுபட்ட கூட்டாட்சி என்று ஏன் கூறவில்லை. ஒருநாடு என்பது ஒற்றையாட்சி என்று அர்த்தப்பட முடியும்.

தமிழ்த் தேசிய இனம் ஒரு தனித்துவமான இனம். அவர்களுக்கென்று ஒரு பாரம்பரிய தாயகம் உண்டு. அதனால் தமிழ் தேசிய இனமக்களுக்கு உரித்தான இறைமை, சுயநிர்ணய உரிமைக் கோட்பாடுகளின் அடிப்படையில் இலங்கையில் ஓர் அரசியல் தீர்வை நாம் முன் வைத்துள்ளோம். அத்திட்டமொன்றுதான் இலங்கையில் தேசிய இனங்களின், தேசியமக்களின் ஒற்றுமை, நல்லிணக்கம் ஒன்றுபட்ட ஐக்கிய இலங்கைக்குள் தீர்வு ஒன்றை எட்டுவதற்குப் பொருத்தமானதும், அர்த்தமுள்ளதுமாக அமையும்.

அல்லது இந்த நாடு ஐக்கிய இலங்கையாக இருக்க முடியாது போய் விடும். தமிழ்த் தேசிய இனத்துக்குரித்தான வெளியக சுயநிர்ணய உரித்தை நிலைநிறுத்த வேண்டும். சர்வதேச சந்தர்ப்பம் ஒன்றினால் உருவாகக் கூடிய பூரணசுய ஆட்சியை, தன்னாட்சியை நிறுவும் திடசங்கற்பத்தை இந்தத் தேர்தலின் மூலம் மக்களின் வாக்குப் பலத்தினால் ஆணை வழங்க வேண்டும் என வேண்டுகோள் விடுக்கின்றோம்.

ஒவ்வொரு அங்குல நிலத்தையும் மீட்டாக வேண்டும். நிலத்தை இழந்து அகதிகளாய் உள்ள மக்கள் மீள் குடியேற்றப்பட வேண்டும். வேலை வாய்ப்பு, வாழ்வாதாரம் வழங்க வேண்டும். இதற்காகப் புலம் பெயர்ந்த தமிழ் மக்களும், சர்வதேச நாடுகளும் ஒருதிட்டத்தின் கீழ் இணைந்து முதலீடுகளைச் செய்ய வேண்டும் என எமது தேர்தல் அறிக்கை கூறுகிறது.

அகதிகளாய் வெளிநாடுகளில், அயல்நாட்டில் உள்ளவர்கள் எம் நிலங்களில் குடியேற வேண்டும். எம்மக்கள் மீளக்குடியேற வேண்டுமானால் அதற்காக ஆக்கிரமித்து நிற்கும் இராணுவம் வெளியேற வேண்டும் என்று எமது தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளோம். பலாலி விமானத்தளம் சர்வதேச விமானத்தளமாக மாற்றப்பட வேண்டும். பொருளாதார அபிவிருத்தி எனும் பெயரில் துறைமுகத்திற்கும் விமானத்தளத்திற்கும் மக்களின் நிலங்களை அபகரிக்காமல் கடற்பக்கமாக அந்த அபிவிருத்திகளை முன்னெடுக்கலாம். அதற்கான எம் திட்டங்கள் இன்று அரசின் நிபுணர்களின் பரிசீலனையில் உள்ளன. காங்கேசன்துறை துறைமுகம் கடல் நோக்கி அபிவிருத்தி செய்யப்பட வேண்டும். பொருளாதார வலயங்கள் நிறுவப்படுதல் தொடர்பில் வெளிநாட்டு முதலீடுகளை வரவேற்க வேண்டும்.

இதனால் வேலை வாய்ப்புக்கள், வர்த்தக நடவடிக்கைகள் பணப்புழக்கம் பொருளாதார மேம்பாடு ஏற்படவேண்டும். மீன்பிடித் துறை முகங்கள் விருத்தி செய்யப்பட வேண்டும். பனைவளம் நிபுணத்துவமாக மேம்பட வேண்டும். கடல் வளம் கொள்ளையிடுவது தடை செய்யப்பட்டு எம் கடல் தொழில் சார் மக்கள் கடல் வளத்தைப் பயன்படுத்த வேண்டுமென்று எம் தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளோம். இராணுவம் குவிக்கப்பட்டுள்ளதால் பெண்கள் பாதுகாப்புக் கேள்விக்குள்ளாகியுள்ளது. வாழ்விழந்த பெண்கள் வாழ்வாதாரம் மேம்படுத்துவதன் மூலம் பெண்கள் அவலங்கள் அகன்று புதுவாழ்வு தொடர முடியும் என்று வற்புறுத்துகின்றோம். போர்க் குற்ற விசாரணை சர்வதேச விசாரணையாக இருக்க வேண்டுமென்றும் வற்புறுத்துகின்றோம். அதன் மூலம் உண்மைகள் கண்டறியப்பட்டு அதனடிப்படையில் தமிழினப் பிரச்சினைக்குத் தீர்வுகாணப்பட வேண்டும் என்பதே எமது நிலைப்பாடு.

ராஜபக்ஷவின் கொடுங்கோலாட்சியிருந்தால் தான் சர்வதேசத் தலையீடு ஏற்பட்டு இனப் பிரச்சினைக்குத் தீர்வு ஏற்படும் என்பது சிலர் கருத்தாகும். ஆனால் இலங்கையில் ஆட்சி மாற்றம் ஏற்படுவதில் சர்வதேசத் தலையீடுகள் இருந்தன என்பதை யாரும் மறக்க முடியாது. சர்வதேச சந்தர்ப்பம் என்பது இராஜதந்திர சூழல்களைப் பொறுத்ததாகும்.

தமிழ் மக்களின் அரசியல் எதிர்காலத்தை, பொருளாதார மேம்பாட்டை நாமே தீர்மானிக்க வேண்டும். அதற்கு இராஜதந்திர வெற்றிகளும் முக்கியமானதாகும். தேசியக் கட்சிகளுக்கும் உதிரிகளுக்கும் வாக்களிப்பது பயனற்றதாகும். சர்வதேச அனுசரனையைக் கொண்டுள்ள எதிர்காலத்திற்கேற்ற நடைமுறைத் திட்டங்களைக் கொண்டுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வீட்டுச் சின்னத்திற்கு வாக்களித்து ஒன்றுபட்ட பலத்தை திடசங்கற்பத்தை நிரூபிப்போம்.

எழுபத்தைந்து வீதம் வாக்களிப்பை எட்டுவோமாயின் 20 நாடாளுமன்ற பிரதிநிதிகளை வெற்றி பெறமுடியும். அந்தச் சாதனையை தமிழர் பலத்தை திடசங்கற்பத்தை நிறுவுமாறு வேண்டுகின்றேன்– என்றார். (த–5)

## 10 கிலோ கேரளக்

வரை மடக்கிப் பிடித்துக் கைது செய்ததாகவும், அவரிடம் இருந்து பொதி செய்யப்பட்ட நிலையில் கஞ்சாப் பொதிகள் கைப்பற்றப் பட்டதாகவும் உதவி பொலிஸ் அத்தியட்சகர் ஜவ்பர் தெரிவித்தார். இது தொடர்பாக தெரியவருவதாவது:–

வடமராட்சிப் பகுதியில் இருந்து வலிகாமம் பகுதி நோக்கிக் கஞ்சாக் கடத்தல் இடம்பெறுவதாக இளவாலை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மஞ்சுளவுக்குக் கிடைத்த ரகசியத் தகவலை அடுத்தே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இளவாலை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி குறித்த விடயம் தொடர்பில் வல்வெட்டித்துறைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மீடினுக்கு வழங்கிய தகவலை அடுத்துத் தீவிர சோதனை மற்றும் தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இந்த நடவடிக்கையில் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எம் எம் ரஞ்சித் மாரசிங்கவின் பணிப்பின் பேரில் காங்கேசன்துறை உதவி பொலிஸ் அத்தியட்சகர் மெதவெல, வடமராட்சிப் பிராந்திய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஏ.எம் ஜவ்பர் ஆகியோரின் வழிநடத்தலில் இளவாலை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மஞ்சுள தலைமையிலான பொலிஸ் குழுவும், வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மீடின் தலைமையிலான பொலிஸ் குழுவும் இணைந்து ஈடுபட்டன.

வடமராட்சிக் கரையோர வீதிகள் தீவிர கண்காணிப்புக்கு உட்படுத்தப்பட்டுத் தேடுதல் மற்றும் வீதிச் சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இதன்போது, திக்கம் சந்தியில் பதுங்கியிருந்த பொலிஸார் மேற்கொண்ட சுற்றிவளைப்பிலேயே இந்தக் கஞ்சாப் பொதிகள் கைப்பற்றப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

பருத்தித்துறையில் இருந்து வல்வெட்டித்துறை நோக்கி வேகமாக வந்து கொண்டிருந்த மோட்டார் சைக்கிள் ஒன்றைத் திக்கம் சந்தியில் பதுங்கியிருந்த பொலிஸார் வழிமறித்துச் சுற்றிவளைத்தபோது பின் இருக்கையில் உரப்பையில் பொதி செய்யப்பட்ட நிலையில் 10 கிலோவுக்கும் அதிகமான கஞ்சாப் பொதிகள் கைப்பற்றப்பட்டதாகப் பொலிஸார் கூறினர். மோட்டார் சைக்கிளைச் செலுத்தி வந்த வல்வெட்டித்துறைப் பகுதியை சேர்ந்த ராமலிங்கம் அஜந்தன் (வயது– 29) என்ற சந்தேக நபர் கைது செய்யப்பட்டதாகப் பொலிஸார் மேலும் குறிப்பிட்டனர்.

இவரிடம் தொடந்து விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக உதவி பொலிஸ் அத்தியட்சகர் ஜவ்பர் தெரிவித்தார். (த–109)

## உரிமை

ஆணைக்குழுவின் பிராந்திய இணைப்பாளர் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத் தேர்தல் இடம் பெறும் தினத்தன்று, தேர்தல் தொடர்பான அடிப்படை உரிமை மீறல்களைத் தடுப்பதற்காக விசேட அலகொன்றை அமைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அந்த அலகில் ஆணையாளர்கள், செயலாளர் மற்றும் சிரேஷ்ட உத்தியோகத்தர்கள் சிலரும் அடங்குவார்கள்.

விசேட அலகு தேர்தல் தினத்தில் அன்று, பி.ப. 4 மணி வரையில் இயங்கும். ஏதேனும் முறைப்பாடுகள் இருந்தால் 1996 என்ற இலக்கத்தின் ஊடாக தொடர்பு கொள்ள முடியும். வடக்கு மாகாணத்தில் உள்ள வாக்காளர்கள் 0212222021 என்ற இலக்கத்தின் ஊடாக தொடர்பு கொள்ள முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (த–5)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## தேர்தல் பரிசாக மின்குமிழ்களுடன் வந்த இருவர் வசமாக மாட்டினர்

கொழும்பு, ஓக 15
தேர்தல் பரப்புரை நடவடிக்கையின்போது விநியோகிப்பதற்குக் கொண்டு வரப்பட்ட ஒரு தொகை மின்குமிழ்களுடன் இரண்டு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். நேற்றுமுன்தினம் இரவு சாலியவெள, மேல் புளியங்குளம் மக்கள் மன்றக் கட்டடத்தில் வைத்து குறித்த மின்குமிழ்களுடன் சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவித்தனர். மேல் புளியங்குளம் பிரதேசத்தைச் சேர்ந்த இருவரே கைது செய்யப்பட்டுள்ளதுடன் மின்குமிழ்களைக் கொண்டு வர பயன்படுத்தப்பட்ட சிறிய ரக லொறியொன்று பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது. (த)

## தேர்தல் கால உரிமை மீறல் ஆராய்வதற்கு விசேட குழு

கொழும்பு, ஓக. 15
தேர்தல் காலப்பகுதியில் மனித உரிமைகள் மீறப்படுமாயின் அது தொடர்பில் நடவடிக்கை எடுப்பதற்காக விசேட குழுவொன்று நியமிக்கப்படும் என இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவிக்கின்றது.
பிரதேச செயலகங்களில் இதற்கான தயார்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் செயலாளர் நிமல் புஞ்சிஹேவா குறிப்பிட்டுள்ளார். பொதுத் தேர்தலை, நீதியானதும் சுதந்திரமானதுமானதாக நடத்துவதற்காக பல நடவடிக்கைகளை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு முன்னெடுத்துள்ளது.
"வாக்களிப்பு நிலையங்களில் பொலிஸார் உரிய விதத்தில் செயற்படத் தவறும் பட்சத்தில் அது தொடர்பில் தலையீடு செய்வதற்காக குழுவொன்றை நியமிக்கவுள்ளதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழு தெரிவிக்கின்றது.(த)

# சபையில் பலம் மிக்க எதிர்க்கட்சி உருவாகும்

## ஜே.வி.பி. நம்பிக்கை



கொழும்பு, ஓக. 15
ஐக்கிய தேசியக் கட்சியுடன் எவ்வித இணக்கப்பாடுகளையும் ஏற்படுத்திக்கொள்ளவில்லை என்று ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித் துள்ளார்.
நுகேகொடையில் நடைபெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.
ஐக்கிய தேசியக் கட்சியானது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் இணைந்து செயற்பட்டுவருகிறது. அது ஜே.வி.பியுடன் இணைந்து செயற்படவில்லை.
ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் கடந்த வாரம் கூட அமைச்சரவையில் ஒன்றாக இருந்துள்ளனர். எனினும், தேர்தலில் வெற்றி பெறுவதற்காகத் தனித்தனியே போட்டியிடுகின்றனர்.
இந்நிலையில், ஜே.வி.பி., ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து செயற்படுவதாக முன்னாள் ஜனாதிபதி மஹிந்த குற்றஞ்சுமத்திவருகிறார். உண்மையில் அவரது சொந்தக் கட்சியே ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து செயற்பட்டு வருகிறது.
அதேவேளை, எதிர்வரும் 17ஆம் திகதியின் பின்னர் வலுவான ஓர் எதிர்க்கட்சியை உருவாக்கமுடியும் என எதிர்பார்க்கிறோம். மஹிந்த மீண்டும் அதிகாரத்தைக் கைப்பற்றுவதைத் தடுக்க எம்மாலான அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்வோம் என்றும் அவர் கூறினார். (த)

# வன்னி மக்களுக்கான விடிவு நெருங்குகிறது

## அமைச்சர் ரிஷாத் கூறுகின்றார்



மன்னார், ஓக. 15
வன்னி மக்களைப் பொறுத்த வரை என்றுமில்லாத அளவுக்கு இந்த நாடாளுமன்றத் தேர்தல் மிக முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக் கின்றது. கடந்த கால உள்நாட்டுப் போரினால் சீரழிந்து சின்னாபின்னமாகியிருக்கும் நம் வாழ்வைச் சீராக்கிச் செப்பனிட வேண்டிய தேவைப்பாடு நமக்கிருப்பதால், இந்தத் தேர்தலில் நாம் மிக நிதானத்துடன் சிந்தித்துச் செயற்பட வேண்டி இருக்கிறது.
–இவ்வாறு அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும் அமைச்சருமான ரிஷாத் பதியுதீன் தெரிவித்தார்.
மன்னாரில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றிலேயே அமைச்சர் ரிஷாத் மேற்கண்டவாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்;
நடந்து முடிந்த போர் நம் வாழ்க்கையில் ஆறாத ரணங்களை ஏற்படுத்திச் சென்றுவிட்டது. உயிர் இழப்புகளும் பொருள் இழப்பு களும் அங்க அவயவங்களின் இழப்புகளும் மாத்திரமன்றி நமது நிம்மதியையும் நாம் இழந்து தவிக்கின்றோம்.
வன்னியின் பெரும்பாலான வீடுகளில் குறைந்தபட்சம் ஒரு விதவைப் பெண்ணாவது இருக்கிறார். கையையோ, காலையோ இழந்த ஒரு பிள்ளையாவது இருக்கிறார். போரின் கொடூரத்தினால் மன நிலை பாதிக்கப்பட்ட ஒரு முதியவர் இருக்கிறார். தொழிலை இழந்து போன ஓர் இளைஞன் இருக்கிறார். பொருளாதாரத்தையெல்லாம் இழந்ததினால் திருமணம் செய்து கொள்ள முடியாமல் ஏங்கும் வயது வந்த பெண் இருக்கிறார். பள்ளிக் கூடம் சென்று கல்வி கற்க வசதி யில்லாத சின்னப்பிள்ளைகள் இருக் கிறார்கள். இவர்கள் எல்லோரதும் எதிர் கால வாழ்வில் ஓரளவாவது சந்தோஷத்தையும் நிம்மதியையும் வழங்குவது யார்? இந்தக் கேள்விக்கு நாம் சரியான விடையைத் தேடிக் கண்டுபிடிக்கவேண்டும்.
இந்தத் தேர்தலில் வன்னி மாவட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் யானைச் சின்னத்தில் முதன்மை வேட்பாளராக நான் போட்டியிடுவதை எல்லோரும் அறிவோம். இந்தத் தேர்தலில் நான் வெல்லப் போவதில் எந்தச் சந்தேகங்களும் இல்லை. அதன் மூலம் வன்னி மக்களின் வருங்காலத்தை வசந்த காலமாக்க வேண்டும். அத்தோடு வன்னி மாவட்டத்தின் அபிவிருத்தியைப் பன்மடங்காக்கவும் வேண்டும் என்பதே எனது இலக்கு. எனவே சகல பேதங்களையும் மறந்து நாம் ஒன்றுபடுவோம் –என்றார். (த)

## நாமலின் உருவப்படம் பொறித்த 2 லட்சம் கொப்பிகள் கைப்பற்றல்



கொழும்பு, ஓக. 15
தேர்தல் காலத்தில் அம்பாந் தோட்டை மாவட்டத்தில் மக்களுக்கு விநியோகிப்பதற்காக அச்சிடப்பட்டதாகக் கருதப்படும் வேட்பாளர் நாமல் ராஜபக் ஷவின் உருவப்படம் பொறித்த சுமார் 2 லட்சம் அப்பியாசக் கொப்பிகள் புறுகஹ சந்திப் பிரதேசத்தில் உள்ள அச்சகமொன்றில் இருந்து கடந்த 12 ஆம் திகதி கைப்பற்றப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
கம்பஹா மாவட்ட செயலாளரின் பணிப்பின் பேரில் மேற்படி அச்சகத்துக்குச் சொந்தமான களஞ்சியமொன்றில் இந்த அப்பியாசக் கொப்பிகள் வைக்கப்பட்டு அந்தக் களஞ்சியம் சீல் வைக்கப்பட்டுள்ளதோடு தேர்தல் முடியும் வரை அவற்றைக் கையளிக் காதிருப்பதற்குத் தேர்தல் அதிகாரிகள் தீர்மானித்துள்ளனர்.
கம்பஹா தேர்தல்கள் செயலகத்தின் தேர்தல் கண்காணிப்பு உத்தியோகத்தர்களுக்குக் கிடைத்த தகவலை அடுத்துப் பொலிஸாரின் துணையுடன் இவை கைப்பற்றப்பட்டதாகப் பொலிஸ் உயரதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.
இது குறித்து அச்சகத்தின் உரிமையாளரிடமும் அங்கு பணியாற்றும் ஊழியர்களிடமும் பொலிஸாரால் வாக்கு மூலங்கள் பெறப்பட்டுள்ளன. (த-22)

# சரியான நிலையில் செல்கிறது தாஜுதீன் கொலை விசாரணை

கொழும்பு, ஓக. 15
பிரபல றகர் வீரா வஸீம் தாஜுதீனின் சடலம் மீண்டும் தோண்டி எடுக்கப்பட்டமை வரவேற்கப்படவேண்டிய விடயம் என்று ஆசிய மனித உரிமை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.
குறித்த நடவடிக்கை குற்ற விசாரணை தொடர்பில் புதிய தொரு அத்தியாயத்தை ஆரம்பித்துவைக்கும் செயற்பாடாக அமையும் எனவும் அந்த அமைப்பு குறிப்பிட்டுள்ளது.
குற்றச்செயல்கள் குறித்து விசாரணை மேற்கொள்பவர்கள் அச்சம் காரணமாக குற்றங்களை மூடிமறைப்பது மிகப்பெரிய தவறு என்றும் ஆசிய மனித உரிமை ஆணைக்குழுவின் கொள்கை மற்றும் நிகழ்ச்சிப் பணிப்பாளர் பசில் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.
இதேவேளை – பெரும் குற்றச்செயல்கள் தொடர்பிலான பல விசாரணைகள் கிடப்பில் போடப்பட்ட நிலைமை நீடித்துவந்ததாகவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.
கொலைகள், கொள்ளைகள், காணாமற் போதல்கள் மற்றும் கடத்தல்கள் போன்ற சம்பவங்கள் குறித்து இது வரை விசாரணைகள் இடம்பெறவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.
குறித்த சம்பவங்களுடன் அரசியல்வாதிகள் அல்லது அவர்களின் உறவினர்கள் தொடர்புபட்டிருப்பதாகக் குற்றம் சுமத்தப்பட்டால் விசாரணைகள் மூடிமறைக்கப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.
லசந்த விக்கிரமதுங்க, நடராஜா ரவிராஜ் [illegible] கொட ஆகியோர் உள்ளிட்ட பல சம்பவங்களை இதுபோன்று பட்டியலிட முடியும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.
குற்றச்செயல் விசாரணைகள் பிரிவினைவாதமாகவோ, அரசியல் கட்சிகளின் தேவையாகவோ உற்றுநோக்கப்படக்கூடாது.
அது நாட்டு மக்களின் அடிப்படைத் தேவைகளில் ஒன்றாகக் கருதப்பட வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.
வஸீம் தாஜுதீன் மரணம் தொடர்பிலான விசாரணைகள் சரியான திசையில் நகர்வதாக உணர்வதாக [illegible] பட வேண்டியது அவசியமானது என [illegible]

## மாகாண சபைகளில் பெண்களுக்கு இனிமேல் 30 சதவீத இட ஒதுக்கீடு

கொழும்பு, ஓக. 15
மாகாண சபைகளில் பெண்களுக்கு 30 சதவீத இடஒதுக்கீடு செய்ய அரசு தீர்மானித்துள்ளது. இந்தத் தீர்மானத்தின்படி மாகாண சபைத் தேர்தல் சட்டத்தில் திருத்தம் கொண்டுவரவும் அமைச்சரவையில் முடிவெடுக்கப்பட்டுள்ளது.
நாடாளுமன்றத்திலும், மாகாண சபைகளிலும், உள்ளூராட்சி சபைகளிலும் பெண்களுக்குப் பிரதிநிதித்துவம் இருந்தாலும் அது போதாது. தங்களின் விகிதாசாரத்துக்கு ஏற்ப பிரதிநிதித்துவம் தேவையென ஏற்கனவே உள்நாட்டிலுள்ள பெண்கள் அமைப்புகளால் குரல்களும் எழுப்பப்பட்டு வருகின்றன.
இந்தத் தீர்மானம் வரவேற்கத்தக்கது என்று விழுது ஆற்றல் மேம்பாட்டு மையத்தின் நிறைவேற்று இயக்குநரான சாந்தி சச்சிதானந்தம் தெரிவித்துள்ளார். இதுவரை காலமும் மாகாண சபைகளில் 6 சதவீதத்துக்கும் மேலாக பெண்களுக்கான பிரதிநிதித்துவம் கிடைத்திருக்கவில்லை என்றும் அவரால் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.
[illegible]களான ஐக்கிய தேசியக் கட்சியும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் எடுத்துள்ள இந்தத் தீர்மானம் ஜனநாயகத்துக்கு விரோதமானது என அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கூறுகின்றது.
மார்க்க ரீதியாக மற்றும் கலாசார ரீதியாக முஸ்லிம் அரசியல் கட்சிகளால் இது ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல என அந்தக் கட்சியின் செயலாளர் நாயகமான வை.எல்.எஸ். ஹமீத் கூறியுள்ளார்.
தற்போது இலங்கையிலுள்ள 9 மாகாண சபைகளிலும் 447 உறுப்பினர்கள் அங்கத்துவம் பெற்றுள்ள போதிலும் 5 சதவீதத்துக்கும் குறைவான பெண்களே அங்கத்துவம் பெற்றுள்ளதாகக் கூறப்படுகின்றது.
குறிப்பாக, 36 உறுப்பினர்களைக் கொண்டுள்ள கிழக்கு மாகாண சபையில் அமைச்சரான ஆரியவதி கலப்பதி மட்டுமே பெண் உறுப்பினராகப் பதவி வகிக்கின்றார். [illegible] நிலை தான் 38 உறுப்பினர்களைக் கொண்ட வடக்கு மாகாண சபையிலும் அனந்தி சசிதரன் மாத்திரமே பெண் உறுப்பினராக இருக்கின்றார். [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொலின்ஸை வீழ்த்தி அடுத்த சுற்றுக்குள் கில்லறி

மாங்குளம், ஓக. 15
வடமாகாண உதைபந்தாட்ட பேரவையினால் நடத்தப்படும் மொபிற்றல் கிண்ணத்திற்கான தொடரில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற ஆட்டத்தில் கொலின்ஸ் அணியை வீழ்த்தி அடுத்த சுற்றுக்குள் நுழைந்தது கில்லறி அணி.
ஆட்டத்தின் முதல்பாதியில் கில்லறி அணி பந்தை கொலின்ஸின் கோல் கம்பங்களை நோக்கி கொண்டுவருவதும் பின்னர் கொலின்ஸ் அணி கண்டபடி அடித்து கில்லறியின் வாய்ப்பைச் சிதைப்பதுமாக செயற் பட்டுக்கொண்டிருந்தனர். மொத்தத்தில் தாக்குதல் பாணியில் கில்லறி தற்காப்புப் பாணியில் கொலின்ஸ். கொலின்ஸின் தற்காப்பையும் தாண்டி 7ஆவது நிமிடத்தில் கோல் கணக்கை ஆரம்பித்து வைத்தது கில்லறி. மேற்கொண்டு கோலெது வும் பதியப்படாமல் இருக்க 1:0 என்ற கில்லறியின் ஆதிக்கத்துடன் முடிவடைந்தது ஆட்டத்தின் முதல் பாதி.



போராட்டம் நிலைபெறும் என்ற எதிர்பார்ப்புக்கள் மத்தியில் ஆரம்பமானது மறுபாதி. எதிர்பார்ப்புக்களைப் பொய்யாக்கி ஏக ஆதிக்கம் செலுத்தத் தொடங்கியது கில்லறி. கொலின்ஸிற்கு கண்கட்டி வித்தை காட்டி அற்புதமான பரிமாற்றங்களுடன் கோல்களை விளாசினர் கில்லறியின் வீரர்கள். சீரான இடைவெளியில் அடுத்தடுத்து 3 கோல்கள் பதியப்பட 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது கில்லறி அணி. (ம-422)

## ஞானமுருகன் வெற்றி

யாழ்ப்பாணம், ஓக. 15
யாழ். உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் புத்தூர் விக்னேஸ்வரா விளையாட்டுக்கழகம் நடத்தும் விலகல் முறையிலான உதைபந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது. இந்தத்தொடரில் நேற்றுமுன்தினம்புதன்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் மயிலங்காடு ஞானமுருகன் அணியை எதிர்த்து யாழ். பல்கலைக்கழக அணி மோதிக் கொண்டது. இதில் மயிலங்காடு ஞானமுருகன் அணி, 2:0என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.
(ம-23)

### சென்.மேரிஸ், நவசக்தி அணிகள்
## அடுத்த சுற்றுக்கு தகுதி

யாழ்ப்பாணம், ஓக. 15
வத்திராயன் உதயசூரியன் விளையாட்டுக்கழகம் நடத்தும் விலகல் முறையிலான உதைபந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.
இந்தத்தொடரில் கடந்த செவ் வாய்க்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் கட்டைக்காடு சென்.மேரிஸ் அணியை எதிர்த்து மயிலிட்டி கண்ணகி அணி மோதிக்கொண்டது. இதில் கட்டைக்காடு சென்.மேரிஸ் அணி 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.
தொடர்ந்து பிற்பகல் 4.30 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் நவசக்தி அணியை எதிர்த்து தொண்டமானாறு கலைவாணி அணி மோதிக் கொண்டது. இதில் நவசக்தி அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ம-23)



## பாரதி வி.கழக முடிவுகள்

சரணவாய். ஓக. 15
பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் பொலிகண்டி பாரதி விளையாட்டுக்கழகம் நடத்தி வரும் உதைபந்தாட்டத் தொடரில் கடந்த புதன் கிழமை நடைபெற்ற ஆட்டங்களில் கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழகம், உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழகம் மற்றும் பலாலி விண்மீன் விளையாட்டுக் கழகம் என்பன வெற்றிபெற்றுள்ளன.

**றேஞ்சர்ஸ் எதிர் யங்கம்பன்ஸ்**
முதலாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழகம் மோதியது. ஆரம்பத்திலிருந்து இரு அணிகளும் மாறிமாறி கோல்களை விளாசித் தள்ளிய போதிலும் றேஞ்சர்ஸ் அணி 5:4 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. றேஞ்சர்ஸ் சார்பாக சுதாகர் 3 கோல்களையும் பிரசாத் 2 கோல்களையும் அடித்தனர். யங்கம்கம்பன்ஸ் சார்பாக பிரகாஸ் 2 கோல்களையும் தர்சன், ரதன் இருவரும் தலா ஒரு கோலையும் அடித்தனர். ஆட்டநாயகனாக றேஞ்சர்ஸ் அணியின் சுதாகர் தெரிவானார்.

**நவஜீவன்ஸ் எதிர் சென்.சேவியர்**
தொடர்ந்து இடம்பெற்ற ஆட்டத்தில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து சக்கோட்டை சென்.சேவியர் விளையாட்டுக் கழகம் மோதியது. இந்த ஆட்டத்தில் 3:0 என்ற கோல் கணக்கில் இலகுவாக வெற்றி பெற்றது நவஜீவன்ஸ் அணி. நவஜீவன்ஸ் சார்பாக உசானந் 2 கோல்களையும் பொபிநாதன் ஒரு கோலையும் அடித்தனர். ஆட்டநாயகனாக பொபிநாதன் தெரிவானார்.

**பொமர்ஸ் எதிர் விண்மீன்**
அடுத்து இடம்பெற்ற ஆட்டத்தில் பலாலி விண்மீன் விளையாட்டுக் கழகமும் வதிரி பொமர்ஸ் விளையாட்டுக் கழகமும் பலப்பரீட்சை நடத்தின. இதில் விண்மீன் அணியின் முன்களவீரர் உதயதாஸ் ஹற்றிக் கோல் போட 5:1 என்றகோல் கணக்கில் அந்த அணி இலகு வெற்றிபெற்றது. ஆட்டநாயகனாக உதயதாஸ் தெரிவானார்.
(ம-108)

## ஐயனாரை வீழ்த்தியது டைமன்ஸ்



மாங்குளம் ஓக. 15
வடமாகாண உதைபந்தாட்டப் பேரவையினால் நடாத்தப்படும் மொபிற்றல் கிண்ணத்திற்கான தொடரில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நடைபெற்ற ஆட்டமொன்றில் டைமன்ஸ் அணி வெற்றிபெற்றுள்ளது.
கொலின்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் வதிரி டைமன்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து தீவகம் ஐயனார் விளையாட்டுக் கழக அணி மோதியது. ஆட்டநேரம் தொடங்கும்வரை டைமன்ஸ் அணியில் ஏனைய வீரர்கள் வருகைதராமையினால் 7 வீரர்களுடன் களமிறங்கியது அந்த அணி. ஐயனார் அணி சார்பாக கோல் மழை பொழியப்போகிறது என்ற எதிர்பார்ப்புக்கள் இருந்தாலும் தற்காப்பு ஆட்டத்தை கச்சிதமாகப் கையாண்டது டைமன்ஸ். இரு அணியாலும் கோலெதுவும் பதியப்படுவதாக இல்லை. ஆட்டத்தின் முதல்பாதி கோலெதுவும் பதியப்படாமலேயே நிறைவடைந்தது.
இரண்டாம் பாதியில் இரு அணியும் 11 வீரர்கள் களமிறங்கினார்கள். 7 வீரர்களுடன் போராடிய டைமனஸ் 11 வீரர்களுடன் கோலைப் பதிவு செய்யும் என்று எதிர்பார்க்கப்பட்ட வேளையில் டைமன்ஸிற்கு இணையாகப் போராடியது ஐயனார். இரண்டாம் பாதியிலும் கோலெதுவும் பதியப்படவில்லை. இதனால் வெற்றி தோல்வி சமநிலைத்தவிர்ப்பு உதை மூலம் தீர்மானிக்கப்பட இறுதியில் 2:1 என்றகோல் கணக்கில் டைமன்ஸ் அணி வெற்றிபெற்றது. (ம-422)

## சம்பியனானது கரைச்சி

யாழ்ப்பாணம், ஓக. 15
27ஆவது தேசிய இளைஞர் விளையாட்டு விழாவினை முன்னிட்டு கிளிநொச்சி மாவட்ட இளைஞர் சேவைகள் மன்றத்தின் பிரதேச இளைஞர் சம்மேளனங்களுக்கு இடையிலான கபடித் தொடர்களில் ஆண்கள் பிரிவில் கரைச்சி பிரதேச அணி சம்பியன் ஆனது.
கடந்த ஞாயிற்றுக்கிழமை பூநகரி 4ஆம் கட்டை விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்ற ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் கரைச்சி பிரதேச இளைஞர் கழக அணியை எதிர்த்து பளை பிரதேச இளைஞர் கழக அணி மோதிக் கொண்டது. இதில் கரைச்சி பிரதேச இளைஞர் கழக அணி 53:14 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றி பெற்று சம்பியன் ஆனது. (ம-23)

## றோயலிடம் வீழ்ந்தது யங்கம்பன்ஸ்

யாழ்ப்பாணம், ஓக. 15
யாழ். உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் புத்தூர் விக்னேஸ்வரா விளையாட்டுக்கழகம் நடத்தும் விலகல் முறையிலான உதைபந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றது.
இந்தத்தொடரில் கடந்த செவ் வாய்க்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் றோயல் அணியை எதிர்த்து யங்கம்பன்ஸ் அணி மோதிக்கொண்டது. இதில் றோயல் அணி, 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.
(ம-23)

## சொன்னதைச் செய்தார் சந்திமால் இன்னிங்ஸ் தோல்வியைத் தவிர்த்தது இலங்கை

இலங்கை மற்றும் இந்தியா அணிகளுக்கிடையிலான மூன்று ஆட்டங்களைக்கொண்ட டெஸ்ட் தொடரின் முதலாவது ஆட்டத்தின் மூன்றாம் நாளில் இலங்கை சகல இலக்குகளையும் இழந்து 367 ஓட்டங்களைக் குவித்தது. 176 ஓட்டங்களை வெற்றியிலக்காகக்கொண்டு துடுப்பெடுத்தாடிவரும் இந்தியா 23-1 என்ற நிலையில் உள்ளது.
நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து 183 ஓட்டங்களில் சுருண்டது. பந்து வீச்சில் இந்தியா சார்பாக அஸ்வின் 6 இலக்குகளையும் மிஷ்ரா 2 இலக்குகளையும் சர்மா மற்றும் ஆரோன் இருவரும் தலா ஒரு இலக்கையும் கைப்பற்றினர்.
184 ஓட்டங்களைப் பெற்றால் முன்னிலைபெற்றுவிடலாம் என்ற முனைப்பில் களமிறங்கிய இந்திய அணி 375 ஓட்டங்களைக் குவித்தது. பந்துவீச்சில் இலங்கை சார்பாக கௌசல் 5 இலக்குகளையும் பிரதீப் 3 இலக்குகளையும் மத்தியூஸ், பிரசாத் தலா ஒரு இலக்கையும் கைப்பற்றினர்.
இன்னிங்ஸ் தோல்வியைத் தவிர்க்க வேண்டுமாயின் 192 ஓட்டங்களைப் பெறவேண்டும் என்ற கட்டாயத்தில் இரண்டாவது இன்னிங்ஸிற்காக களமிறங்கிய இலங்கை இரண்டாம் நாள் முடிவில் 5-2 என்ற நிலையில் இருந்தது. பிரசாத் 3 ஓட்டங்களுடனும் சங்கா ஒரு ஓட்டத்துடனும் தொடர்ந்து மூன்றாவது நாளுக்காக களமிறங்கினர். ஆரம்பத்திலேயே ஆட்டமிழந்தார் பிரசாத். இன்னிங்ஸ் தோல்வியை தவிர்க்க சிறந்த அடித்தளமிட்டார் சங்கா. மத்தியூஸும் கணிசமான பங்களிப்பு. இணைப்பாட்டமாக 87 ஓட்டங்கள் பகிரப்பட்டிருந்த வேளையில் 40 ஓட்டங்களுடன் பவிலியன் திரும்பினார் சங்கா. அடுத்த பந்துப்பரிமாற்றத்திலேயே மத்தியூஸின் ஆட்டமும் முடிவுக்கு வந்தது. ஒருநாள் ஆட்டங்களின் பாணியில் அதிரடியுடன் இன்னிங்ஸை ஆரம்பித்தார் சந்திமால். மறுமுனையில் நிதானித்தார் திரிமன்னே. மீண்டும் ஒரு சிறப்பான இணைப்பாட்டம். துடுப்பில் பட்ட பந்து நடுவரின் தவறினால் சந்திமாலுக்குச் சாதகமாக ஆட்டமிழப்பில்லை என்றும் தீர்ப்பானது. இணைப்பாட்டம் நூறினைத் தாண்டிச்செல்ல அரைச்சதம் கடந்தார் சந்திமால். அரைச்சதத்தைப் பெறும் முனைப்பில் திரிமன்னே. 44 ஓட்டங்களுடன் திரிமன்னேயின் ஆட்டம் முடிவுக்கு வந்தது. இருப்பினும் இடத்தை பக்காவாக நிரப்பினார் முபாரக். முபாரக்கின் உதவியுடன் சதம் கடந்தார் சந்திமால். 49 ஓட்டங்களுடன் அரைச்சதத்தைத் தவறவிட்டார் முபாரக். பின்வரிசை வீரர்கள் மீண்டும் சொதப்ப முடிவில் இலங்கை 367 ஓட்டங்களில் சுருண்டது. அதிரடியில் மிரட்டிக்கொண்டிருந்த சந்திமால் 162 ஓட்டங்களைக் குவித்து இறுதிவரை ஆட்டமிழக்காதிருந்தார்.



176 ஓட்டங்களை வெற்றியிலக்காகக்கொண்டு துடுப்பெடுத்தாடிவரும் இந்தியா நேற்றைய மூன்றாம் நாள் ஆட்டநேர முடிவில் 23-1 என்ற நிலையில் உள்ளது. தவான் 13 ஓட்டங்களுடனும் இஷாந் சர்மா 5 ஓட்டங்களுடனும் தொடர்ந்தும் துடுப்பெடுத்தாடி வருகின்றனர். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு ஒன்று திரண்டு வாக்களியுங்கள்

*முல்லை அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அறிக்கை*

எமது இனப்பிரச்சினைத் தீர்வுக்காக தெளிவான உறுதியான கொள்கையுடன் தடம்புரளாது செயற்படும், உள் அரங்கிலும் வெளி அரங்கிலும் தொடர்ந்தும் பேரம் பேசி வரும் எமது அரசியல் கட்சியில் இக்காலத்தில் தேவையற்ற மாற்றத்தை ஏற்படுத்தாது மீண்டும் அந்தக் கட்சிக்கே வாக்களிக்குமாறு முல்லைத்தீவு மாவட்ட அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் பொதுமக்களைக் கேட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சின்னமான வீட்டுச் சின்னத்துக்கே அனைவரும் வாக்களியுங்கள் என்று யாழ்.பல்கலைக்கழக பீடங்களின் ஒன்றியங்கள் நேற்றுமுன்தினம் பகிரங்கமாக மக்களுக்கு அறிவித்துள்ள நிலையில், முல்லைத்தீவு மாவட்ட அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியமும் அதே கோரிக்கையை மக்களுக்கு விடுத்துள்ளது.

இது தொடர்பில் ஒன்றியம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:–

இந்தத் தேர்தல் பலத்த எதிர்பார்ப்பையும் தேவையற்ற குழப்பங்களையும் விளைவித்து விடை காண முடியாத நிலையை ஏற்படுத்தியுள்ளது.

உன்னத தலைவனின் வழியில் பல தசாப்தங்களாக நீடித்த எமது ஆயுதப் போராட்டமானது பல உயிர்த்தியாகங்களைப் புரிந்தும் சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்தும் தமிழரின் வீரத்தையும் இருப்பையும் உலகுக்கு அறிவித்து முற்றுப்பெறாது, எட்டப்பன் கூட்டத்தின் காட்டிக் கொடுப்பாலும் துரோகிகளின் துரோகத் தனத்தாலும் சர்வதேச நாடுகளின் அரசியல் சுயநலத்துக்காகவும் நசுக்கப்பட்டு ஒடுக்கப்பட்டு இறுதிப் போரில் பல்லாயிரக்கணக்கான எமது உறவுகளை கொன்றுகுவித்து ஆயிரக்கணக்கான மக்களை அங்கவீனர்களாக்கி ஆயிரக்கணக்கானோரை காணாமற் போகச் செய்து பல்லாயிரக்கணக்கான பெண்களை விதவைகளாக்கி பல சிறுவர்களை ஆதரவற்றவர்களாக்கி முள்ளிவாய்க்காலுடன் மௌனித்துவிட்டது.

இந் நிலையிலேயே எமது போராட்டம் புதியபரிணாமத்தை நோக்கி நகர் கிறது.

இந்நிலையில் எம்மை நோக்கி இரண்டாவது பொதுத் தேர்தலானது அறிவிக்கப்பட்டுள்ளது. இந் நிலையில் நாம் எமது குறுகிய நோக்கத்தை மறந்து தூரநோக்குடன் தீர்க்க தரிசனத்துடனும் இதய சுத்தியுடனும் உள்நாட்டிலும் சர்வதேச அரங்கிலும் எமக்கு எதிராகப் பின்னப்படும் அரசியல் காய்நகர்த்தல்களுக்கு முகம் கொடுக்கக் கூடியதும் பேரம் பேசக் கூடியதுமான ஒரு அரசியல் கட்சியைத் தெரிவு செய்யவேண்டியது ஒவ்வொருவரது உரிமையும் கடமையும் ஆகும். இந்த ஜனநாயக உரிமையை எவரும் தடுக்கவோ, மறுக்கவோ முடியாது.

இன்று பல அரசியல் கட்சிகளும் பல சுயேச்சைக் குழுக்களும் களம் இறக்கப்பட்டு கவர்ச்சி வார்த்தைகளாலும் வீர வசனங்களாலும் மக்கள் மத்தியில் உரையாற்றி சுயலாபத்துக்காக எமது வாக்குப் பலத்தைச் சிதறடிக்கும் செயற்பாட்டில் திட்டமிட்டுச் செயற்படுகின்றனர்.

கடந்த பொதுத் தேர்தலில் மக்களாகிய நீங்கள் வழங்கிய அமோக ஆதரவினால் அந்தக் கட்சி தொடர்ந்தும் எமது இனப்பிரச்சினைத் தீர்வுக்காகப் பாடுபடுகிறது. எனவே மாற்றத்தை ஏற்படுத்த வேண்டியதேவையில்லை.

அந்தக் கட்சிக்கே நீங்கள் அனைவரும் தொடர்ந்தும் வாக்களியுங்கள். அந்த கட்சிக்கு மீண்டும் உந்துதலையும் பலத்தையும் அதிகரிக்க அனைவரும் ஒன்றுபட்டு ஓர் அணியில் நின்று குழப்பங்கள் அற்ற மனதுடன் வாக்களிக்குமாறு எம் மக்களை உரிமையுடனும் உறுதியுடனும் வேண்டிக்கொள்கிறோம். ஒன்றுபட்டால் உண்டு தீர்வு என்று முல்லைத்தீவு மாவட்ட அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த–4)

# போரின் அவலங்களில் இருந்து மக்களை மீட்டெடுப்பேன்

*வேலாயுதம் கணேஸ்வரன் உறுதி*

போரின் அவலங்களில் இருந்து மக்களை மீட்டு வழமையான ஒரு வாழ்க்கைக்கு அவர்களையும் வழவைக்க வேண்டும் எனும் உயரிய நோக்குடனே தாம் சுயேச்சைக் குழு–6 மூலமாக யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தில் அரசியலுக்கு பிரவேசித்துள்ளேன் என வேலாயுதம் கணேஸ்வரன் தெரிவித்தார்.

வட்டுக்கோட்டையில் நேற்று நடந்த பரப்புரைக் கூட்டத்தில் அவர் மேலும் தெரிவித்ததாவது:–

போரினால் பாதிப்புற்று முகாம்களில் ஒரு நேர உணவுக்கு வழியின்றித் தவிக்கும் மக்களை மீள் குடியேற்றுவதற்கான செயற்பாடுகளை துரிதப்படுத்துமாறு வலியுறுத்துவதே நாம் நாடாளுமன்றில் மேற்கொள்ளும் முதலாவது பணி ஆகும்.

குடும்பத் தலைவர்களை இழந்த பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கு, முன்னாள் போராளிகளின் சமூக அந்தஸ்த்தை பாதுகாத்தல், புலம்பெயர்ந்த தமிழ் மக்களின் உதவிகள் பெற்றுக் கொள்ளல் ஆகியவற்றுக்கு நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தாலே திட்டங்களை வகுத்து செயற்படுத்துவது இலகுவாகும்.

யாழ்ப்பாணத்தில் மருத்துவ சேவை மிகவும் மோசமான நிலையில் உள்ளது. குடாநாட்டில் உள்ள அரச மருத்துவமனைகள் அனைத்திலும் வறுமைக்கோட்டில் வாழும் மக்கள் இலகுமுறையில் சேவையைப் பெற்றுக்கொள்ளும் வகையில் நாடாளுமன்ற உறுப்பினர் என்ற வகையில்கிடைக்கும் அதிகாரத்தை நாம் முழுமையாகப் பயன்படுத்தி சேவை செய்வேன்.

போருக்குப் பிந்திய நிலையில் வேலை வாய்ப்பு பிரச்சினை முக்கியமானதொன்றாக உள்ளது. நாம் தேர்ந்தெடுக்கப்படும் பட்சத்தில் வட பகுதி மக்களுக்கு வேலை வாய்ப்பினை பெற்றுத் தரக்கூடிய, அவர்களுடைய வளங்களை அதிகளவுக்கு பயன்படுத்தக் கூடிய திட்டங்களை நடைமுறைப்படுத்த முன்னின்று முயற்சிப்போம்– என்றார். (த)

## பிரதமர்

இந்தக் கடிதத்தில் சுதந்திரக் கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரான ஏ.எச்.எம்.பௌசி மட்டும் கையெழுத்திடாமல் நழுவிவிட்டார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆட்சியமைக்கும் நிலை ஏற்பட்டால், மஹிந்த ராஜபக்ஷவுக்கு பிரதமர் பதவி வழங்கப்படாது என்றும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவருக்கே அந்தப் பதவி வழங்கப்படும் எனவும் மஹிந்தவுக்கு நேற்றுமுன்தினம் எழுதிய கடிதத்தில் ஜனாதிபதி மைத்திரிபால தெரிவித்திருந்தார்.

சு.கவின் சிரேஷ்ட உறுப்பினர்களான நிமால் சிறிபால டி சில்வா, அநுர பிரியதர்ஷன யாப்பா, ஜோன் செனிவிரத்ன, அத்தாவுட செனிவிரத்ன, சுசில் பிரேம ஜயந்த, சமல் ராஜபக்ஷ மற்றும் ஏ.எச்.எம்.பௌசி ஆகிய 7 பேரில் ஒருவருக்கே பிரதமர் பதவி வழங்கப்படவேண்டும் என்றும் மைத்திரிபால குறிப்பிட்டிருந்தார்.

இந்தநிலையில், தமக்குப் பிரதமர் பதவி தேவையில்லை என்றும், மஹிந்த பிரதமர் பதவிக்கு வருவதை ஆதரிப்பதாகவும் தெரிவித்து குறித்த 7 மூத்த தலைவர்களில் 6 பேர் கையெழுத்திட்ட கடிதம் ஒன்று ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இந்தக் கடிதத்தில், நிமால் சிறிபால டி சில்வா, அநுர பிரியதர்ஷன யாப்பா, ஜோன் செனிவிரத்ன, அத்தாவுட செனிவிரத்ன, சுசில் பிரேமஜயந்த, சமல் ராஜபக்ஷ ஆகியோர் ஒப்பமிட்டுள்ள போதிலும், ஏ.எச்.எம்.பௌசி மட்டும் ஒப்பமிடவில்லை. இவர் ஏற்கனவே தமக்குப் பிரதமர் பதவி வழங்கப்பட்டால் அதை ஏற்றுக்கொள்ளத் தயாராக இருப்பதாகக் கூறியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த காலங்களில் கொழும்பு மாவட்டத்தில் இருந்து போட்டியிட்டுத் தெரிவான ஏ.எச்.எம்.பௌசி, இந்த முறை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேசியப் பட்டியலில் இடம்பெற்றுள்ளார். ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆட்சியமைக்கும் நிலை ஏற்பட்டால், ஏ.எச்.எம்.பௌசிக்குப் பிரதமர் பதவியை, ஜனாதிபதி வழங்கக் கூடும் என்று கருதப்படுகிறது.

தேர்தல் முடிந்த பின்னர், கட்சியின் பொதுச் செயலாளரே தேசியப் பட்டியல் ஆசனங்களுக்குரியவர்களின் பெயர்களைச் சமர்ப்பிக்க வேண்டும். ஏ.எச்.எம்.பௌசி தேசியப் பட்டியலிலேயே இடம்பெற்றுள்ளதால், மஹிந்தவின் ஆதரவாளரான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளர் சுசில் பிரேம ஜயந்த, அவரை தேசியப் பட்டியல் உறுப்பினராக நியமிக்காமல் தடுக்கக் கூடும்.

இதன் காரணமாகவே, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளர் பதவியில் இருந்து சுசில் பிரேம ஜயந்தவை, மைத்திரிபால சிறிசேன நீக்கியிருக்கலாம் என்றும் கருதப்படுகிறது. (த)

## பரப்புரைகள்

பரப்புரைக்கூட்டத்தைபெரும்ஆரவாரத்துடன் முன்னெடுத்தன. பொலிஸ் மற்றும் அதிரடிப்படையினரின் பாதுகாப்புக்கு மத்தியில் இந்தக் கூட்டங்கள் இடம்பெற்றன. நாடு முழுவதிலுமுள்ள பிரதான நகரங்களில் நேற்று மாலை பெருந்திரளான மக்கள் திரண்டிருந்தனர்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி (ஐக்கிய தேசிய முன்னணி) கொழும்பிலும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி குருநாகலிலும், ஜே.வி.பி. நுகேகொடையிலும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வடக்கு – கிழக்கிலும், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், தமிழ் முற்போக்குக் கூட்டணி முதலான கட்சிகள் மலையகத்திலும் தமது இறுதி பரப்புரைக் கூட்டத்தை நடத்தின. கூட்டத்தில் அசம்பாவிதங்கள் எதுவும் இடம்பெறாத வகையில், குறித்த பகுதிகளில் பலத்த பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டிருந்தது.

கடந்த ஜுலை மாதம் 14 ஆம் திகதி உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்பட்ட தேர்தல் பரப்புரை நேற்று 14 ஆம் திகதி நள்ளிரவுடன் உத்தியோகபூர்வமாக முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது. 17 ஆம் திகதி தமக்கு வாக்களித்து வெற்றியைப் பெற்றுக்கொடுக்குமாறு மேற்படித் தரப்பினர் தமது இறுதிப் பரப்புரையில் நாட்டு மக்களிடம் கோரிக்கை விடுத்தனர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, ரவி கருணாநாயக்க, விஜயதாஸ ராஜபக்ஷ உள்ளிட்ட கட்சியின் முக்கிய உறுப்பினர்கள் பங்கேற்றனர்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் மஹிந்த, சுசில் பிரேம ஜயந்த, அநுர பிரியதர்ஷன யாப்பா, விமல் வீரவன்ஸ உள்ளிட்ட கட்சியின் முக்கிய உறுப்பினர்கள் பங்கேற்றனர்.

இதேவேளை– இரா.சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கூட்டத்தில் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களான மாவை சேனாதிராசா, சுரேஷ் பிரேமச்சந்திரன், செல்வம் அடைக்கலநாதன், த.சித்தார்த்தன் உள்ளிட்ட கட்சியின் வேட்பாளர்கள், முக்கியஸ்தர்கள் எனப் பலர் பங்கேற்றனர். (த)

## மக்கள்

ராஜபக்ஷ, மைத்திரிக்கு மறைமுகமாக அறிவித்துள்ளார்.

பொதுத் தேர்தலில் உறுதியான பெரும்பான்மை பெற்றுக்கொள்வோம் என நம்பிக்கை வெளியிட்டுள்ள மஹிந்த ராஜபக்ஷ, தான் 2015 ஜனவரி மாதம் 9ஆம் திகதி மக்கள் ஆணைக்கு மதிப்பளித்ததுபோல ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் நடைபெறவுள்ள தேர்தலில் மக்களின் கருத்துக்கு மதிப்பளிப்பார் என எதிர்பார்ப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

பொதுத் தேர்தல் குறித்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் குருநாகல் மாவட்ட வேட்பாளரான மஹிந்த ராஜபக்ஷவுக்கு நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை கடுந்தொனியில் 5 பக்கக் கடிதமொன்றை அனுப்பியிருந்தார்.

இந்தக் கடிதத்துக்குப் பதிலளிக்கும் வகையில், மஹிந்த நேற்று வெள்ளிக்கிழமை ஒரு பக்கத்தில் பதில் கடிதமொன்றை அனுப்பியுள்ளார்.

அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு:–

உங்களால் 2015.08.12 எனத் திகதியிட்டு அனுப்பப்பட்ட கடிதம் 2015.08.13 ஆம் திகதி கிடைத்தது என்பதைக் குறிப்பிடுகின்றேன்.

அந்தக் கடிதத்தில் வேறு தரப்பினரின் தகவல்களைஅடிப்படையாகக்கொண்டு முன்வைக்கப்பட்டுள்ள அடிப்படையற்ற விமர்சனங்களை முழுமையாக நிராகரிக்கின்றேன். 2015 பொதுத் தேர்தலை இலக்குவைத்து குறிப்பிடப்பட்டுள்ள கருத்துக்களுக்கமைய, நாடாளுமன்றத்தில் உறுதியான பெரும்பான்மை பெற்றுக்கொள்வோம் எனக் குறிப்பிடுவதையிட்டு நான் மகிழ்ச்சியடைகின்றேன்.

நான் 2015.01.09 ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல் முடிவு வெளியிடப்பட்டு இறுதிமுடிவு அறிவிக்கப்படுவதற்கு முன்னரே அலரி மாளிகையில் இருந்து வெளியேறியமை, அதற்கு சில நாள்களின் பின்னரே சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமைப் பதவி மற்றும் கட்சியை உங்களிடம் கையளித்தமை நீங்கள் விடுத்த கோரிக்கைக்கு அமைய என்னால் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கு அமையவாகும்–

அப்படியிருந்தும், 2015 பெப்ரவரி மாதமாகும்போது பெரும்பான்மைக் கட்சிகள் மற்றும் பொதுமக்களின் கோரிக்கை என்பவற்றால் மீண்டும் நான் செயற்பாட்டு அரசியலுக்கு வந்தேன் என்பதை நினைவுகூருகின்றேன்.

நான் 2015 ஜனவரி மாதம் 9ஆம் திகதி மக்கள் ஆணைக்கு மதிப்பளித்தது போல, நீங்களும் 2015 பொதுத் தேர்தல் மக்களின் ஆணைக்கு மதிப்பளிப்பீர்கள் என நான் எதிர்பார்க்கின்றேன்–

எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.(த–சி)

## தேர்தல் விதிமீறல்

ஆயிரத்து 610 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகக் கபே அமைப்புத் தெரிவித்துள்ளது. எனினும் இதுதொடர்பில் ஆயிரத்து 467 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளதாகத் தேர்தல்கள் செயலகம் தெரிவித்துள்ளது.

இதுவரை 3 கொலைகள் இடம்பெற்றுள்ளன. அடித்துக் காயப்படுத்தல், அச்சுறுத்தல் அரச சொத்துக்களை சேதமாக்கல் சட்டவிரோத பரப்புரைகள் தொடர்பில் 111 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்று கபே தெரிவித்துள்ளது. தேர்தல் விதிமுறைகள் தொடர்பில் ஆயிரத்து 499 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. வடக்கில் தேர்தல் விதிமீறல் தொடர்பில் 56 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன. கிழக்கில் 98 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளதாகக் கபே கூறியுள்ளது.

சுவரொட்டிகள் மற்றும் கட் அவுட்களைக் காட்சிப்படுத்தல் தொடர்பில் 309 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. கூட்டங்கள் மற்றும் ஆர்ப்பாட்டங்கள் தொடர்பில் 218 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. அரச் உடைமைகளைப் பயன்படுத்தியமை தொடர்பில் 192 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகத் தேர்தல்கள் செயலகம் தெரிவித்துள்ளது. அத்தகைய சம்பவங்களின் பின்னணியிலேயே 729 பேர் கைது செய்யப்பட்டதாகப் பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது. அதற்காக 254 சுற்றிவளைப்புக்களை மேற்கொண்டதாகவும் தெரிவித்துள்ளது. தேர்தல் சட்டங்களை மீறியமை தொடர்பில் 331 முறைப்பாடுகள் கிடைத்ததாகவும், அதன்படி 158 பேர் இதுவரை கைது செய்யப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் தலைமையகம் மேலும் தெரி வித்துள்ளது. (த–4)

## செஞ்சோலைப்

இழந்த 25 மாணவிகள், படுகாயமடைந்த 150 மாணவிகள் நலமாக இருக்கவும் விசேட பூசை வழிபாடுகளில் ஈடுபட்டார்.

பூசை வழிபாட்டின் பின் நினைவுத் தீபங்கள் ஏற்றப்பட்டன.முதல் தீபத்தை ஆலய பிரதம குரு சிவஸ்ரீ வை. சிவசங்கரக் குருக்களும் , அடுத்து உதவி குருக்கள் சிவஸ்ரீ சி.ஸ்ரீ சங்கரசர்மா ஏற்றி வைத்தனர் .

அதனை தொடர்ந்து நிகழ்வின் ஏற்பாட்டாளரும்,தமிழ் விருட்சம் அமைப்பின் தலைவருமான சந்திரகுமார், ஆலய பரிபாலன சபை தலைவர் மாதவன் ஆகியோர் தீபம் ஏற்றி வைத்து ஆத்மா சாந்தியடைய வேண்டிக் கொண்டனர்.

தொடர்ந்து ஆலய பரிபாலன சபை செயலாளர் செல்வகுமார் ,உப தலைவர் பத்மநாதன், உபசெயலாளர் மணிவண்ணன் உட்பட கலந்து கொண்ட பொது மக்களும் ஏற்றினர். (த)

## செயலாளர்

பொதுச் செயலாளர் சுசில் பிரேம ஜயந்த ஆகியோரை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று அதிரடியாகப் பதவிநீக்கம் செய்துள்ளார்.

சுசில் பிரேமஜயந்த மற்றும் அநுர பிரியதர்ஷன யாப்பா ஆகியோரின் பெயர்களை பிரதமர் பதவிக்கு நேற்று முன்தினம் பரிந்துரை செய்த போதிலும் அவர்கள் அதனை நிராகரித்த நிலையிலேயே, இருவரையும் செயலாளர் பதவியிலிருந்து நேற்று நீக்கியுள்ளார். இதனால், மஹிந்தவும் அவர் ஆதரவு தரப்பினரும் பெரும் அதிர்ச்சியில் உறைந்துபோயுள்ளனர்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பதில் செயலாளராக துமிந்த திஸாநாயக்கவும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பதில் செயலாளராக பேராசிரியர் விஸ்வ வர்ணபாலவும் ஜனாதிபதி மைத்திரியால் நியமிக்கப்பட்டுள்ளனர். (த–சி)

## இராணுவ

வத்தினர், தாம் வெற்றி கண்ட சமூகத்தினர் என்ற உணர்வை எமது மக்களுக்குக் கொடுத்துக் கொண்டிருந்தனர். நம்மவர் ஒவ்வொருவராலுமே அவர்களிடமிருந்து வந்த எதிர்மறையான உணர்வுகளை உணரக்கூடியதாக இருந்தது. ஆனால் எமது உணர்வுகளும் மாற வேண்டும்.

எம்மவர்கள் வெளிநாடுகளிலும் கூடத் தம்மை நல்ல முறையில் நடத்தியுள்ளார்கள். தன்னம்பிக்கை என்ற துணிச்சலை நாம் கொண்டிருக்கும்போது எம்மில் தெய்வீகம் இருக்கும். சுய நலங்கள், மமதை நிறைந்த கருத்துக்கள் என்பவற்றிலிருந்து எம்மை நாம் கைவிட்டு அனைவரிலும் நல்லாசிகளைக் கொண்டு சேவையாற்றும்போது பல அற்புதங்கள் நடைபெறுவதைக் காணலாம்.

அமைதி, தூய்மை, சந்தோஷம் நிறைந்ததோர் சூழலை உருவாக்க வேண்டும். விழுமியங்களை அடிப்படையாகக் கொண்ட வாழ்க்கை முறையை கடைப்பிடிக்கச் செய்வதன் மூலம் நல்லதோர் உலகுக்கான ஆன்மிக விழிப்புணர்வை ஏற்படுத்துதல் என்பனவே பிரம்ம குமாரிகள் அமைப்பின் இலக்கு. இலங்கையில் பிரம்ம குமாரிகள் அமைப்பினர் தமது 21 ஆண்டுகால சேவையால் நாலா திசைகளிலும் ஆயிரக்கணக்கான மக்கள் வாழ்வில் நிலையான அமைதி, அன்பு, தூய்மை நிறைந்த அனுபவங்களை ஏற்படுத்தி யுள்ளனர்– என்றார். (த–4)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# குர்பஜ் சிங்கிக்குத் தடை



இந்திய ஹொக்கி வீரர் குர்பஜ் சிங்கிக்கு 9 மாதங்கள் தடை விதித்துள்ளது ஹொக்கி இந்தியா ஒழுக்காற்று நடவடிக்கைக் குழு.

கடந்த மாதம் பெல்ஜியத்தில் நடைபெற்ற ஆட்டமொன்றில் குர்பஜ் சிங், இந்திய அணியில் பிளவை உருவாக்கியதாகவும், வீரர் களிடையே பிளவு ஏற்படுத்தியதாகவும் தெரிவித்து, முன்னாள் இந்திய பயிற்சியாளர் ஜுடே பெலிக்ஸ் அறிக்கை அளித்திருந்தார். இது தொடர்பாக டெல்லியில் நேற்று நடைபெற்ற ஹொக்கி இந்தியா குழு கூட்டத்தின் போது விவாதிக்கப்பட்டது. அதன் முடிவில் குர்பஜ் சிங்கிக்கு 9 மாதங்கள் தடை விதிக்கப்பட்டது. (ம)


**ENGLISH - TAMIL- SINHALA TRANSLATION (PVT)**

கடிதங்கள் மற்றும் ஆய்வுக் கட்டுரைகள் உட்பட பிரத்தியேக மொழி பெயர்ப்பு வேலைகள் தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழி களிலும் செய்து தரப்படும்.

பாஸ்போட், விசா உட்பட எத்தகைய படிவங்களும் நிரப்பித்தரப்படும்.

ENGLISH/SINHALA பிரத்தியேக வகுப்புக் களும் உண்டு. பல்லாண்டுகால அனுபவம் வாய்ந்த ஆசிரியர்

T.SAGATHEVAN, B.A.London,
Tri-lingual tutor/translator (PVT)
46, Pirappankulam Lane, Vannarpannai, Jaffna.
T.P.No: 2223520/077-8210178

**BIT Semester 1,3,5 classes**
**Starts on coming Sunday 16.08.2015**
By:T.Tharmmendra(BIT,MCSE,MBCS)-0779785796
இதுவரை 40 இற்கும் மேற்பட்டோரிற்கு BIT degree 2015 இல் second upper உட்பட 14 பேர் PASS
Contact and confirm your times before sunday

**Ful fill your career Dreams @ IIS**

where personal attention leads to professional achievement



PEARSON edexcel

**HND in**
Computing And Systems Development

**BSc.IT**
Bachelor of Science in Information Technology

Hotline 071 777 5666

Batch Begin 29.08.2015

**IIS CITY CAMPUS**
#200, Sivan Pannai Road, Jaffna
Tel: 222 8060 Web: www.iis.edu.lk

**OBTAIN A WORLD CLASS UK QUALIFICATION**

PEARSON edexcel



**HND in Business Management**

Leading to BSc in BM

Hotline 071 777 5666

New Batch Starts on 29.08.2015

IIS CITY CAMPUS
மேலதிக விபரங்களுக்கு: 021 4 900 900, 071 777 5666

## பதவி வெற்றிடம்

யாழ். நகரில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள இலத்திரனியல் வர்த்தகம் (E.Commerce) புரிகின்ற பிரபல Software நிறுவனத்துக்கு வெளிக்கள உத்தியோகஸ்தர்கள் (Field Workers) தேவை. G.C.E A/L முடித்த முன் அனுபவ முள்ளவர்கள் விரும்பத்தக்கது.

★ வயது எல்லை 20-32 வரை.
★ சொந்தமாக Motorbike வைத்திருப்பவர்களுக்கு (Motorbike Licence Holder) முன்னுரிமை வழங்கப்படும்.
★ விண்ணப்ப முடிவு திகதி: 28.08.2015

Send your CV careers@biztech.lk
மேலதிக தொடர்புகளுக்கு:
BizTech Lanka (Pvt) Ltd,
No 50/1, Kandy Road, Jaffna, Srilanka.
021 221 7800


# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம் 06 . 10 . 1927

மறைவு 16 . 07 . 2015

## அமரர் இளையதம்பி பரராஜசிங்கம்

(ஓய்வுபெற்ற உத்தியோகத்தர் - யாழ் மாநகரசபை)

கடந்த 16.07.2015 இல் சிவபதம் அடைந்த எமது குடும்பத்தலைவர் இளையதம்பி பரராஜசிங்கம் அவர்களின் மரணச்செய்தியறிந்து நேரிலும் தொலைபேசி மூலமும் அனுதாபம் தெரிவித்தோருக்கும், மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தியோருக்கும், கண்ணீர் அஞ்சலிப் பிரசுரம் வெளியிட்டவர்களுக்கும், பத்திரிகைகளில் கண்ணீர் அஞ்சலி வெளியிட்டவர்களுக்கும் எங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு நாளை (16.08.2015) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு "நல்லூர் துர்க்கா மணிமண்டபத்தில்" நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்

82/1, செட்டித்தெரு,
நல்லூர், யாழ்ப்பாணம்.
021 222 5623

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org